
# சித்திரக்கலை

## தரம் 8

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி



அழகியல் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரக்கலை

## தரம் 8

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

(2009 ஆம் ஆண்டிலிருந்து செயல்முறைப்படுத்தப்படும்)

அழகியல் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சித்திரக்கலை**
தரம் - 8
ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

முதற் பதிப்பு: 2008

© தேசிய கல்வி நிறுவகம்

ISBN - 978-955-654-253-0

அழகியல் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம

***அச்சிடப்பட்டது*** : அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
பானலுவ, பாதுக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கனிட்ட இடைநிலைத் தரங்களிலும், சிரேட்ட இடைநிலைத் தரங்களிலும் பாடங்களைக் கற்பிப்பது தொடர்பாக தேசிய கல்வி நிறுவகம் அறிமுகஞ் செய்து வரும் புதிய அணுகுமுறை 2009 ஆம் ஆண்டில் 8ஆந் தரத்திலும் அறிமுகஞ் செய்யப்படவுள்ளது. அதற்கமைய வெளியிடப்பட்டுள்ள இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, குறித்த பாடத்தைக் கற்பிப்பதற்காக ஆசிரியர் அனுசரிக்க வேண்டிய கற்பித்தல் அணுகுமுறை தொடர்பான திருப்திகரமான வழிகாட்டல் வழங்கப்பட்டுள்ளது. 2007ஆம் ஆண்டில் 6ஆம், 10ஆம் தரங்களிலும், 2008ஆம் ஆண்டில் 7ஆம், 11ஆம் தரங்களிலும் அறிமுகஞ் செய்யப்பட்ட இப்புதிய அணுகுமுறையினூடாக வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளில் சிறப்பானதொரு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

உங்களது கைகளில் தவழும் இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, மாணவர் மையமான வகையில் வகுப்பறையில் நடவடிக்கைகளை ஒழுங்குசெய்துகொள்ள வழிகாட்டும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. மாணவர் மைய அணுகுமுறையில் வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளை ஒழுங்குசெய்வது என்பது இலங்கைக்கோ, ஆசிரியருக்கோ புதியதோர் அனுபவமல்ல. எனினும் இந்த புதிய அணுகுமுறையினூடாக வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் முறையியலுக்கு புதுமெருகூட்டப்பட்டுள்ளது.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியினூடாக பாடங்களைத் திட்டமிட்டு, கற்றல் சூழலைத் தயார்ப்படுத்தி மாணவரது ஈடுபாட்டுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டல் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடத்திலும் மாணவர்கள் குழுக்களாகப் பிரிந்து புதிய தகவல்களைத் தேடியறிந்து அறிவைப் பிறப்பித்துக்கொள்ள வழிப்படுத்தும் வகையில் இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் செயற்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர் அறிவைக் கடத்துபவர் (Knowledge transmitter) அல்ல, மாறாக அவர் அறிவைப் பிறப்பிப்பவரே (Knowledge transformer) என்பதை இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் அடக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. எனவே இதில் அடங்கி யுள்ள செயற்பாடுகளின் ஊடாக மாணவர்கள் அறிவைத் தேடிச்செல்கின்ற அறிவைப் பிறப்பித்துக் கொள்கின்ற கற்போராக ஆக்கப்படுகின்றனர். புத்தறிவைத் தேடியாய்ந்து கண்டறிவதற்காக மாணவரை வழிப்படுத்தி ஊக்குவிப்பதே இங்கு ஆசிரியர் ஆற்ற வேண்டிய பணியாகும்.

மரபுரீதியான கற்பித்தல் முறைகளுள் சிக்கிக்கொண்டிருப்பதைத் தவிர்த்து புதிய கற்பித்தல் அணுகுமுறைகள் பற்றிச் சிந்திப்பதற்கு ஆசிரியர்களை வழிப்படுத்துவதற்காக இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் பொதிந்துள்ள நோக்கும் செயற்பாடுகளும் பெரிதும் துணையாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றன. எமது ஆசிரியர்கள் புதிய அணுகுமுறைகள், கற்பித்தல் முறைகள் பற்றிச் சிந்தித்தல் வேண்டும். புதிய சகத்திர ஆண்டு புத்தறிவை உருவாக்குவதில் கொண்டிருக்கும் ஒரு காலமாகும். எனவே மரபுரீதியான முறைகளிலிருந்து விலகி புதிது புதிதாக தமது செயற்பாடுகளைத் திட்டமிடுவதில் ஆசிரியர்கள் கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

ஆசிரியர்க்கு தமது கற்பித்தல் பணியின்போது பயன்படுத்தத்தக்க அடிப்படையான அறிவுறுத்தல் களை வழங்குவதோடு, அவர்களை ஆக்கபூர்வமான உயர்மட்ட அணுகுமுறைகளின்பால் வழிப்படுத்துவதே இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் ஊடாக எதிர்பார்க்கப்படுவதாகும். அக்குறிக்கோளை மனதிலிருத்தி ஆசிரியர்கள் இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியை உசாவுவதோடு வகுப்பறை நடவடிக்கைகளில் இதனைப் பயன்படுத்துவர் என்பது எனது எதிர்பார்ப்பாகும். வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளின் வினைத்திறனையும் தரத்தையும் மேன்மேலும் உயர்த்துவதே இம்முயற்சியின் பிரதானமான எதிர்பார்ப்பாகும்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் தயாரிப்பதில் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவக விடயச் சிறப்பறிஞர்களுக்கும் வெளி வளவாளர்களுக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**பேராசிரியர் லால் பெரேரா**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம் - 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

இலங்கையின் கலைத்திட்டக் கொள்கையில், பாடசாலைப் பாடத்திட்டமானது எட்டு வருடங்களுக்கு ஒருமுறை காலத்திற்கு இயைந்ததாகத் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றது. இதற்கேற்ப, 2007 ஆம் ஆண்டிலிருந்து. நடைமுறைக்கு வருகின்ற கல்விச் சீர்திருத்தத்தின் கீழ், இப்பாடத்திட்டமும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியும் அறிமுகஞ் செய்யப்படுகின்றன.

இதுவரை நடைமுறையில் இருந்த பாடத்திட்டங்களில் குறித்த பாடத்துடன் தொடர்பான விடயத் தலைப்புகளும் அவற்றின் உள்ளடக்கமும், அமைந்திருந்தமையால் அவற்றைக் கற்பிக்கும் பணி ஆசிரியரின் மீது சுமத்தப்பட்டிருந்தது. இச்செயற்பாடுகள் மூலம் ஏராளமான தகவல்களை மாத்திரம் அறிந்த மாணவர் பரம்பரை ஒன்று உருவானது.

புதிய கலைத்திட்டச் சீர்திருத்தத்தின் கீழ் அறிமுகஞ் செய்யப்படுகின்ற பாடத்திட்டங்களில், அவ்வப் பாடங்களில் மாணவர் அடைந்துகொள்ள வேண்டிய தேர்ச்சிகள் பல இனங்காணப் பட்டுள்ளன. இந்தப் புதிய பிரவேசத்தின் மூலம் அதிகமான விடயங்களைக் கற்ற, அதே நேரம் அவற்றை நடைமுறையில் செயற்படுத்துகின்ற, தேர்ச்சி கொண்ட மாணவர் பரம்பரை ஒன்றை உருவாக்குவது எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால், புதிய பாடத்திட்டத்தைக் கையாளுகின்ற ஆசிரியர்கள் இவ்வேறுபாட்டைச் சரியாகப் புரிந்து கொள்வதுடன், அதில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இந்நூலின் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிப் பகுதியில், புதிய கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு ஒன்று விதந்துரைக்கப்பட்டுள்ளது. இச்செயலொழுங்கின் கீழ் மாணவர் நூலகத்தைப் பயன்படுத்துதல், புத்தகங்கள் வாசித்தல், சுற்றாடலை அவதானித்தல், தகவல் அறிந்தோரைச் சந்தித்து விடயங்களைச் சேகரித்தல், தமது சகபாடிகளிடமிருந்து பல்வேறு விடயங்களைக் கற்றல், தாம் அறிந்தவற்றை அவர்களுடன் பரிமாறிக்கொள்ளல், இயலுமெனின் இணையத்தளம் மூலம் தகவல் திரட்டல் போன்ற கண்டறிதல் மூலமான கற்றல் கலாசாரம் ஒன்றைக் காண முடிகின்றது. இதற்கு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள பாடப்புத்தகத்தினை உசாத்துணை நூலாகக் கொள்ள முடியும். இவ்வாறு கண்டறியப்படுகின்ற தகவல்கள் மிகச் சரியாகவும், ஒழுங்குபடுத்தப்பட்டும் முழுமையாகவும் மாணவர்களுக்கு அமையச் செய்வது ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற பணியாகும். இந்த வகையில் ஆசிரியரின் வகிபாகம் புதிய அறிவுகள் மூலம் போசிக்கப்படுவது அவசியமாகும். இங்கு மாணவர்கள் ஏராளமான விடயங்களைக் கண்டறிந்து பல்வேறு அம்சங்களையும் தெரிந்தவர்களாக மாற்றுகின்றனர். இத்தகைய செயற்பாட்டுக் கற்றற் சூழலானது மாணவர்களைப் பெரிதும் கவர்வதாக அமையும்.

இதற்காக, இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் விதந்துரைக்கப்பட்ட மாதிரிச் செயற்பாடுகளைக் கையாண்டு இன்னும் பல்வேறு செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வதற்கும் இந்நூலை ஒரு வழிகாட்டியாகக் கொள்ளுங்கள். இதனூடாக புத்தாக்கத் திறனுடைய ஓர் ஆசிரியராக இருந்து, பல்வேறு புதிய செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வீர்களென எதிர்பார்க்கின்றோம்.

இந்த புதிய வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கின்போது, மாணவர் எப்பொழுதும் செயற்படுபவர்களாகக் காணப்படுவர். இதனால் அவர்களது திறமைகள், ஆற்றல்கள் வெளிக் கொணரப்படும். அவற்றுக்கு நீங்கள் மதிப்பளியுங்கள். அவர்களை உற்சாகப்படுத்துங்கள். இன்னும் மாணவர் சில சந்தர்ப்பங்களில் எதிர்கொள்கின்ற கஷ்டங்கள்/இடையூறுகளை உங்களால் அவதானிக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில், நீங்கள் உதவி செய்யுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயலில் உள்ள சகபாடிக்கு உதவி செய்ய மாணவரை வழிப்படுத்துங்கள். இவ்வாறு செயற்பாட்டின் போது இடம்பெறுகின்ற கணிப்பீட்டுச் செயலொழுங்கானது, சிறந்ததொரு கற்றலுக்கு உதவியாக அமையும்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் செற்பாட்டினை நீடிப்பதற்கான உபகரணமானது, ஒப்படையாக அல்லது பயிற்சியாக மாணவர் கற்றவற்றை மேலும் பலப்படுத்தக்கூடிய விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனைச் செயற்படுத்துவதில் உங்களது அவதானத்தைச் செலுத்துங்கள். இதனை மாணவரை மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பமாகவும் ஆக்கிக்கொள்ளுங்கள். இவ்வாறான கற்றல் - கற்பித்தலை நீடிக்கும் உபகரணங்களைத் தயாரித்து, பல்வேறு பயிற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதில் உங்களது கவனத்தைச் செலுத்துங்கள்.

இதனூடாக புதிய உலகிற்குப் பொருத்தமான தேர்ச்சிகளுடன் கூடிய மாணவர் பரம்பரை ஒன்றை உருவாக்குவதும் அதற்குப் பொருத்தமான ஆசிரியர் வகிபாகம், வகுப்பறை, புதிய கற்றல் கலாசாரத்திற்கு ஏற்ப உருவாக வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

**விமல் சியம்பலாகொட**
உதவிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

அரசினால் அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும் பாடநூல்கள் வழங்கப்படுவதுடன் ஆசிரியர்களுக்கான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளும் வழங்கப்படுகின்றன. கற்றல் - கற்பித்தல் செயன்முறையை மேலும் மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்ச்சி மட்டங்களை அடையும்பொருட்டு மாணவர்களை வழிநடத்துபவர் ஆசிரியரேயாவர். இப்பணியைத் திறம்பட மேற்கொள்ள வேண்டிய பாரிய பொறுப்பைக் கொண்டுள்ள உங்களுக்கு பயனுறுதிவாய்ந்த கற்றல் - கற்பித்தலை மேற்கொள்ளவும் பாடநூல்களிலிருந்து அதிகூடிய பயனைப் பெறும் முறை தொடர்பாக மாணவர்களை வழிகாட்டவும் போதிய அறிவுரைப்புகளை இந்நூல் வழங்கும்.

தற்கால உலகின் சவால்களை வெற்றிகொள்ளும் வகையில் மாணவர் குழாத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள உங்களால், இந்நூலைப் பயன்படுத்துவதன் மூலம் கற்பித்தல் செயற்பாட்டில் பண்புசார் விருத்தியை ஏற்படுத்த முடியும் என நம்புகிறேன்.

**டபிள்யு. எம். என். ஜே. புஸ்பகுமார**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
'இசுருபாய'
பத்தரமுல்ல
16. 09. 2008.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வழிகாட்டல்** : **பேராசிரியர் லால் பெரேரா**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

**திரு. விமல் சியம்பலாகொட**
உதவிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

**திரு. சுதத் சமரசிங்ஹ**
பணிப்பாளர்
அழகியல் துறை
தேசிய கல்வி நிறுவகம்

**செயற்றிட்டத் தலைவர்** : **திரு. இரத்னசேன கொடிகார**
- பிரதம செயற்றிட்ட அதிகாரி
அழகியல் துறை - தேசிய கல்வி நிறுவகம்

**செயற்றிட்ட இணைப்பாளர்** : **திரு. ஞானசிறி கமகே** - செயற்றிட்ட அதிகாரி
அழகியல் துறை - தேசிய கல்வி நிறுவகம்

**பாடநெறிக் குழு**
**(உள்வாரியான)** : **திரு. இரத்னசேன கொடிகார** - பிரதம செயற்றிட்ட அதிகாரி
அழகியல் துறை - தேசிய கல்வி நிறுவகம்
**திரு. எம்.ஜீ.ஏ.கே.யூ. பண்டார**
- பிரதம செயற்றிட்ட அதிகாரி
அழகியல் துறை - தேசிய கல்வி நிறுவகம்
**திரு. ஞானசிறி கமகே** - செயற்றிட்ட அதிகாரி
அழகியல் துறை - தேசிய கல்வி நிறுவகம்
**திரு. ரவிந்து தேதுவர** - உதவி செயற்றிட்ட அதிகாரி
அழகியல் துறை - தேசிய கல்வி நிறுவகம்

**(வெளிவாரியான)** **திரு. சரத் குணசிரி பெரேரா** - சிரேஷ்ட விரிவுரையாளர்
கலைப்பீடம் - அழகியற் பல்கலைக்கழகம்
**திரு. நந்தலால் உடுபோருவ** - விரிவுரையாளர் (சித்திரக்கலை)
அழகியல் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை - கிராகம
**திரு. ஆர்.ஜீ. குணதிலக** - விரிவுரையாளர் (சித்திரக்கலை)
ருவன்புர கல்வியியற் கல்லூரி - கஹவத்த

**ஆலோசனைக்குழு** : **திரு. சரத் ஞானசிறி - பிரிவுத்தலைவர்**
(சிற்பக்கலைப்பிரிவு) - அழகியற்கலை பல்கலைக்கழகம்
**திரு. ரம்மியவர்தன பொடிநிலமே** - பிரிவுத்தலைவர்
பல்லூடக கலை கல்வியியற் பிரிவு
அழகியற்கலை பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு. பியசிறி ஜயதிலக** - உதவிக்கல்விப் பணிப்பாளர் (சித்திரக்கலை)
வலயக்கல்விப்பணியகம், ஸ்ரீ ஜயவர்தனபுரி
**பேராசிரியர் உபாலி ரணவக**
உதவிக்கல்விப் பணிப்பாளர் (சித்திரக்கலை)
வலயக்கல்விக் காரியாலயம் - மதுகம

**வளப்பங்களிப்பு** : **திருமதி. சந்திரலதா ஹந்தபான்கொட** - ஆசிரியர்
தக்ஷிலா ம.ம. வித்தியாலயம் - ஹொரனை
**திரு. என். அபேசிறி டயஸ்** - ஆசிரியர்
ஸ்ரீ ரேவத ரோயல் கல்லூரி - நுகேகொட
**திருமதி. சஞ்ஜீவீ மஞ்சரி** - ஆசிரியர்
மலாசால் வித்தியாலயம் - மோதர, கொழும்பு 05
**திருமதி. சமரி தபஸ்வரகே** - ஆசிரியர்
லும்பினி வித்தியாலயம் - கொழும்பு 05
**திருமதி. ஏ.எம்.ஜீ. பொடிமனிகே** - ஆசிரியர்
சிறிபியரத்ன ம.ம.வி - பாதுக்கை
**திரு. எச்.எம்.எஸ்.பீ.எச். பண்டார** - ஆசிரியர்
புதிய கபிரியேல் பெண்கள் கல்லூரி - ஹட்டன்
**திரு. டீ.எம்.எஸ். பிரேமானந்த**
- செயற்றிட்ட அதிகாரி (ஓய்வு பெற்ற)
போபத்த வீதி - எகெலியகொட
**திரு. ஜெ.ஒ.எல். ரிச்வே** - உதவிக்கல்விப் பணிப்பாளர்
வலயக்கல்விக் காரியாலயம் - ஹட்டன்

**விடயத் தொகுப்பு** : **திரு. ஞா. ஞானதயாளன்**
- ஆசிரிய ஆலோசகர்
வலயக்கல்வி அலுவலகம் - வவுனியா தெற்கு

**அட்டைப்பட வடிவமைப்பு** : **திரு. ஞானசிறி கமகே** - செயற்றிட்ட அதிகாரி
அழகியல் துறை - தேசிய கல்வி நிறுவகம்

**கணினி கோர்ப்பும் வடிவமைப்பும்**
: திருமதி. எப்.ஏ.எப். நிஸ்மியா - தேசிய கல்வி நிறுவகம்

**ஏனைய உதவிகள்** : திருமதி. லக்ஷிமி பெரேரா
திருமதி. விக்ரமநாயக
திரு. டயஷ் அமரசிங்ஹ

**மொழிபெயர்ப்பு** : திருமதி. உ. விவேகானந்தன்
புனித கபிரியேல் மகளிர் ம.வி. - ஹட்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1.0 | பாடத்திட்டம் | 01 |
| 1.1 | அறிமுகம் | 02 |
| 1.2 | சித்திரக்கலை பாடத்தின் குறிக்கோள்கள் | 03 |
| 1.3 | பாடத்தோடு தொடர்புடைய தேர்ச்சிகள் | 04 |
| 1.4 | வகுப்பிற்குரிய தேர்ச்சி மட்டங்கள் | 05 |
| 1.5 | தேர்ச்சி, தேர்ச்சி மட்டம், பாடத்தின் உள்ளடக்கம், நேர ஒதுக்கீடு | 06 - 08 |
| 1.6 | கற்றல் - கற்பித்தல் முறைமைகள் | 09 - 10 |
| 1.7 | கல்வி மேம்பாட்டிற்குரிய பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் | 11 |
| 2.0 | கற்றல் - கற்பித்தல் முறைமை | 12 |
| 2.1 | அறிமுகம் | 13 - 16 |
| 2.2 | ஆசிரியர்களுக்கான அறிவுரைகள் | 17 |
| 2.3 | செயற்பாடுகளை தவணைகளாக பிரித்தல் | 18 |
| 2.4 | செயற்பாட்டுத் தொகுப்பு | 19 - 154 |
| 3.0 | கணிப்பீடும் மதிப்பீடும் | 155 |
| 3.1 | அறிமுகம் | 156 - 158 |
| 3.2 | கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை விரிவாக்க உதவும் உபகரணங்கள் | 159 - 166 |
| 3.3 | தவணைப் பரீட்சைகளுக்குரிய வினாக்கள் | 167 - 169 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1.0 பாடத்திட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.1 அறிமுகம்

ஆளுமையை விருத்தி செய்து கொள்வதற்கு உதவி புரியும் அழகியற் கலைகளிடையே மிக முக்கிய இடத்தைச் சித்திரக் கலை வகிக்கின்றது.

சித்திரக்கலை புதிய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் திட்டமிடும் பொழுது பாடசாலை மாணவர்களது அறிவு, மனப்பாங்கு, திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கு ஏழு தேர்ச்சிகள் அடிப்படையாக அமைகின்றன. இரசவிந்தனாசக்தி விருத்தி, நிருமாணத்திறன் விருத்தி, விமர்சன அறிவு விருத்தியுடன், பொறுமை, ஒற்றுமை, மன அடக்கம், ஒத்துழைப்பு போன்ற குணப்பண்புகளை விருத்தி செய்து கொள்ளும் எதிர்பார்ப்புக்களுடன் விடய உள்ளடக்கம் திட்டமிடப்பட்டுள்ளன.

சித்தரக்கலை இரசனை, கலாசாரப் பின்னணி, கோட்பாடுகள், செயற்பாடு, நிருமாணிப்பு திறன் விருத்தியுடன் தொடர்புபட்ட விடயப் பரப்புக்களைக் கொண்ட அழகியல் செயற்பாட்டுத் தொகுதிகளைக் கொண்ட இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைக் கற்பதன் ஊடாக இயற்கையாகவோ, செயற்கையாகவோ உருவாகக்கூடிய வருங்கால சவால்களுக்கு முகங் கொடுப்பதற்கு ஏற்ற திறன்களையும், புதிய வேலை உலகில் வாழும் திறனையும் பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற சமநிலை ஆளுமையைக் கொண்ட இளைய தலைமுறையை உருவாக்குவது எதிர்பார்க்கப்படுகிறது.

மாணவர் கற்றல் - கற்பித்தல் செயலில் வெற்றிகரமாக ஈடுபடும் பொழுது ஆசிரியரின் கடப்பாடானது வசதிகளைச் செய்து கொடுத்தல், உபகரணங்களை வழங்குவதாகும். இதன் மூலம் மாணவர் மையத்தைக் கொண்டு செயல்படுவதுடன், தனித்துவமான மாணவர் நடத்தைச் தேர்ச்சிக்கு உரிய நியதிகளின் ஊடாக தொடந்தும் மேற்பார்வை செய்தல் ஆகும். இது ஆசிரியருடைய முறையான கணிப்பீட்டு மதிப்பீட்டுச் செயலை மேலும் இலகுவாக்குவதற்கு உதவியாக அமையும்.

தரம் 8 இல் சித்திரக்கலை விடயப்பரப்பை கற்கும் மாணவர்களுடைய உயர் தரத்தைக் கொண்ட கற்றல் நிலையின் பொருட்டு, விருத்தி செய்யப்படவேண்டிய தேர்ச்சி மட்டம், உரிய விடயப் பரப்பிற்கு ஏற்ப, இந்த ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டியில் உள்ளடக்கப் பட்டுள்ளது. உரிய விடயப் பகுதிகளின் பொருட்டு செயற்பாடுகளைத் திட்டமிட்டுக் கொள்வதற்கு சித்திரக் கலை ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

ஆய்வு / காரணங்களுக்கிடையே ஊட்டம் பெறும் விடயத்துக்குரிய செயற்பாட்டுத்திறன், மாணவர்கள், சமூகத்தில் இணையும் பொழுது பலன் அளிக்கும் வகையில் வர்த்தக வாழ்க்கைக்கும், தொடர்புடைய உற்பத்திக்கும், சேவைத் தேவையின் பொருட்டும் உபயோகிப்பதற்கும், சர்வதேசக் கண்காட்சிக்கு நிருமாணிப்புப் பங்களிப்பை செய்வதற்கும், அபிவிருத்தியைச் செய்யக்கூடிய செயன்முறைக்கு ஏற்ற பாடசாலைக் கொள்கைகளையும், வேலைத்திட்டங்களையும் அறிமுகப்படுத்தி உள்ளது.

சிறந்த நடத்தையினுள் பூரணமான சமூகப் பொருத்தப்பாட்டைக் கொண்ட வருங்கால உலகிற்கு பயன் தரும் நிருமாணத் திறன் கொண்ட பிரஜையை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், மாணவர் தேர்ச்சியை சாட்சிப்படுத்துவதற்கும், இந்த சித்திரக் கலை ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டி ஆசிரியருக்கு உதவியாக இருக்கும் என நம்பப் படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.2 சித்திரக்கலை பாடத்தின் குறிக்கோள்

- **சுற்றாடலில் மூலம் இரசனைத் திறன் விருத்தி**

  சுற்றாடலின் சகல அம்சங்களும் மனித வாழ்க்கையுடன் தொடர்பு கொண்டவையாகும். மாணவரிடது சூழலுடன் இணைந்த அழகியற் பெறுமானம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் சுற்றாடலுடன் இசைவான இரசித்தல் திறனை விருத்தி செய்தல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

- **ஆக்கபூர்வ சிந்தனையும் ஆக்கத்திறன் விருத்தியும்**

  வாழ்க்கையில் எதிர்நோக்கும் பல்வேறு முரண்பாடுகள் நிகழும் சந்தர்ப்பங்களில், ஆக்கபூர்வமாக இயங்குவதற்குத் தேவையான சிந்தனா சக்தி விருத்தியும், வாழ்க்கை யின் பல்வேறு தேவைகளுக்காகத் தரமுயர்ந்த படைப்புக்களை உருவாக்கும் திறன் விருத்தி.

- **பயனுடைய வாழ்க்கைக்கு தேவையான திறன் மனப்பாங்கு விருத்தி**

  வாழ்க்கையைப் பயனுடையதாகக் கழிக்கும் திறன்போலவே ஏதேனும் ஒரு கருமத்தை வினைத்திறனுடையதாக ஆற்றும் தகைமை அவசியமாகும். அவ்வாறே பரஸ்பர நல்லெண்ணமும், அவரவர் பற்றிய மதிப்பும், எண்ணமும் உடையவராய்க் கடமை யாற்றும் தகைமையைப் பெறுதலும் முக்கியமாகும். அதற்கு தேவையான மனப் பாங்கு திறன் விருத்தி என்பன இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

- **தேசிய தனித்துவத்தை இனங்காணலும் மதித்தலும்**

  நாட்டின் கலாச்சார அம்சங்களை இனங்காண்பதன் மூலம் தேசிய உணர்வுடன் கூடியதாய், தேசிய தனித்துவத்துடன் கடமையாற்றும் பொருட்டு நல்ல விழுமியங்கள் தொகுப்பை விருத்தி செய்தல் முக்கியமாகும். இதற்குத் தேவையான அழகியற் பாடவிதான அறிவை வழங்குதல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

- **விமர்சன ஆற்றல் விருத்தி**

  பல்வேறு தொடர்பாடல் ஊடகங்களினூடே பல்வகையான நிகழ்ச்சிகள் நிகழ்த்தப் படுவதுடன், தரமானதும் பொருத்தமானதுமான நிகழ்ச்சிகளைத் தெரிவு செய்வதற்கு ஏற்ற தரமுயர்ந்த இரசனை விருத்தி இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

- **வழிகாட்டியாகப் பயன்படுத்தல்**

  கற்றல் - கற்பித்தல் சாதனங்களை உருவாக்கியோருக்கும், பெற்றோர் ஆசிரியருக்கும், பாடசாலை மாணவருக்கும், மேலதிக கற்றல் - கற்பித்தலைத் திட்டமிடுவோருக்கும், இப்பாடத்திட்டம் வழிகாட்டியாக அமையும் என்பது இதனால் எதிர்பார்க்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.3 விடயத்துக்குரிய தேர்ச்சி

1.0 சுற்றாடலுடன் தொடர்புடைய தலைப்பின் கீழ் சித்திரத்தை ஒழுங்கிணைப்பார்.

2.0 சுற்றாடலில் காணப்படும் பொருட்களை ஒழுங்கிணைத்து சித்திரம் வரைவார்.

3.0 நுகர்வோர் தேவையின் பொருட்டு பொருத்தமாக திட்டமிட்டு அலங்கரிப்பை நிருமாணிப்பார்.

4.0 உற்பத்திக்கும் சேவைக்கும் தேவையான கிராபிக் சித்திரத்தை நிருமாணிப்பார்.

5.0 பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி சிலைகளையும், செதுக்கல்களையும் நிருமாணிப்பார்.

6.0 சமயம், கலாச்சார அங்கங்களையும், தேசிய, சர்வதேச ரீதியாக தெரிவு செய்யப் பட்ட கலைஞர்களது கலை ஆக்கங்களையும், தற்கால கட்புல ஆக்கங்களையும் வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் மூலம் அறிந்து கொண்ட கலை அங்கங்கள் பற்றியும் கற்றுக் கொள்வார்.

7.0 தேசிய சர்வதேச வரலாற்று சித்திரம், சிற்பம், கட்டிடக்கலை, நிருமாணிப்புக்களின் பெறுமானத்தை விமர்சித்து சுய நிருமாணிப்பின் பொருட்டு உபயோகித்துக் கொள்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.4 தரத்துக்குரிய தேர்ச்சி மட்டம்

1.1 இயற்கைச் சூழலுடன் இணைந்த தலைப்புகளின் கீழ் கருத்து வெளிப்பாட்டு சித்திரம் வரைவர்.

1.2 செயற்கைச் சூழலுடன் இணைந்த தலைப்புகளின் கீழ் கருத்து வெளிப்பாட்டு சித்திரம் வரைவர்.

1.3 நவீன கோட்பாடுகளை பின்பற்றி தமக்கேயுரிய பாணியில் சித்திரங்களை வரைவர்.

1.4 கற்பனையாக அமைந்த தலைப்புகளின் கீழ் சித்திரங்களை வரைவர்.

2.1 சுயாதீன இரேகைகளை. வர்ணங்களைப் பயன்படுத்தி பாவனைக்குத் தேவையான பொருட்கள், இயற்கைப் பொருட்கள் உள்ளடக்கிய சித்திரங்களை வரைவர்.

2.2 சுயாதீன இரேகைகளை, வர்ணங்களைப் பாவித்து கேத்திரகணித வடிவங்களைக் கொண்ட சித்திரங்களை வரைவர்.

3.1 சம்பிரதாய அலங்காரங்களின் உதவியோடு மானிட தேவைகளுக்கான அலங்கார அங்கங்களை நிர்மாணிப்பர்.

3.2 செயற்கையான பொருட்களின் வடிவங்களைப் பயன்படுத்தி ஆக்கத்திறன்மிக்க திட்டங்கள், அலங்காரங்களை சித்திரங்களில் வெளிக்கொணருவர்.

4.1 ஆக்கத்திறன்மிக்க எழுத்துருக்களையும், சித்திரங்களையும் பாவித்து புத்தகமொன்றின் வெளி அட்டைப்படத்தை ஆக்குவர்.

4.2 உற்பத்தி, சேவை பிரசாரங்களுக்கான ஆக்கத்திறன்மிக்க எழுத்துருக்கள், சித்திரங்கள் என்பவற்றை உள்ளடக்கிய விளம்பரங்களை நிர்மாணிப்பர்.

5.1 கட்டட அலங்கார வேலைப்பாடுகளுக்கான எளிய செதுக்கல் சிற்பங்களை நிர்மாணிப்பர்.

5.2 எளிய வடிவங்களைப் பயன்படுத்தி வெவ்வேறு மெய் நிலைகளை நிர்மாணிப்பர்.

6.1 இலங்கையின் பாரம்பரிய சமயக் கிரியை (சாந்தி கர்மய) கலையம்சங்களை ரசனை உணர்வோடு நோக்குவர்.

6.2 இலங்கையின் பாரம்பரிய நாட்டார் கலைகளின் பெறுமதிகளை வியப்பர்.

7.1 தூபியுடன் அண்டிய கலையம்சங்களை ஆராய்ந்து அவற்றின் சிறந்த கலைப் படைப்பிற்குரிய பண்புகளை பயன்படுத்துவர்.

7.2 வரலாற்று சிறப்பு மிக்க இந்து கலையம்சங்களை ஆராய்ந்து அவற்றின் மேன்மையான பண்புகளை பாவனைக்குப் பயன்படுத்துவர்.

7.3 தேசிய சம்பிரதாய அலங்கார வடிவங்களை கற்றறிந்து, அவற்றின் பண்புகளை பாவனையில் பயன்படுத்துவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.5 தேர்ச்சி, தேர்ச்சிமட்டம், பாட உள்ளடக்கம், பாடவேளைகள்

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 1.0<br>சூழலுடன் இணைந்த தலைப்புகளின் கீழ் கருத்து வெளிப்பாட்டு சித்திரங்களை வரைவர். | 1.1<br>இயற்கைச்சூழல் சார்ந்த தலைப்புகளின் கீழ் கருத்து வெளிப்பாட்டு சித்திரங்களை வரைவர்.<br><br>1.2<br>செயற்கைச்சூழல் சார்ந்த தலைப்புகளின் கீழ் கருத்து வெளிப்பாட்டு சித்திரங்களை வரைவர்.<br><br>1.3<br>நவீன நுட்பமுறைகளைப் பின்பற்றி கருத்து வெளிப் பாட்டுச் சித்திரங்களை வரைவர்.<br><br>1.4<br>கற்பனையான தலைப்புகளின் கீழ் சித்திரங்களை வரைவர். | • கிராமம், நகரம் சார்ந்த நிகழ்வுகள்<br>• பரிமாணம்<br>• தூரதரிசனம்<br>• முப்பரிமாணம்<br>• வர்ணங்களின் பிரயோகம்<br>• இரேகை, வடிவங்கள்<br>• தலைப்பின் கருத்து<br>• ஒருங்கிணைந்த முடிவு | 26 |
| 2.0<br>சூழலிலுள்ள பல்வேறு பொருட்களை ஒன்றிணைத்து ஒரு சமநிலை யுடைய சித்திர ஒழுங்கமைப்பை வரைவர். | 2.1<br>சுயாதீனமான இரேகைகள், வர்ணங்களை பிரயோகித்து பாவனைப்பொருட்கள், இயற்கைப்பொருட்கள் உள்ளடங்கிய சித்திரங் களை வரைவர்.<br><br>2.2<br>சுயாதீன இரேகைகள், வர்ணங்களைப் பிரயோகித்து கேத்திரகணித வடிவங்கள் உள்ளடங்கிய சித்திரங் களை வரைவர். | • பல்வேறு பாவனைப் பொருட்களின், இயற் கைப் பொருட்களின் அவற்றுக்கே உரிய பண்புகள்<br>• இரேகைகள், வடிவங்கள்<br>• பரிமாணம்<br>• முப்பரிமாணம்<br>• ஒருங்கிணைத்தல்<br>• தூரதரிசனம்<br>• வர்ணங்கள், ஊடகங் களின் பிரயோகம்<br>• முடிவு | 10 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 3.0<br>பாவனைக்குத் தேவையான அலங்காரச் சித்திரங்களை நிர்மாணிப்பர். | 3.1<br>சம்பிரதாய அலங்காரங் களின் உதவியோடு மானிட தேவைகளுக்கான அலங் கார அங்கங்களை நிர் மாணிப்பர்.<br><br>3.2<br>செயற்கையான பொருட் களின் வடிவங்களைப் பயன்படுத்தி ஆக்கத்திறன் மிக்க திட்டங்கள், அலங் காரங்களை சித்திரங்களில் வெளிக்கொணருவர். | • பாவனைத்தேவை<br>• பாரம்பரிய அலங்காரங்கள்<br>• செயற்கை வடிவங்கள்<br>• அலங்காரக் கூறுகள்<br>• சமநிலை<br>• சந்தம்<br>• இரேகைகள், வடிவங் கள், வர்ணங்கள்<br>• முடிவு | 15 |
| 4.0<br>உற்பத்தி, சேவை ஆகிய தேவைகளுக்காக கிரபிக் சித்தி ரங்களை நிர்மாணிப்பர். | 4.1<br>ஆக்கத்திறன்மிக்க எழுத்து ருக்களையும், சித்திரங்க ளையும் பாவித்து புத்தக மொன்றின் வெளி அட்டைப் படத்தை ஆக்குவர்.<br><br>4.2<br>உற்பத்தி, சேவை பிரசாரங் களுக்கான ஆக்கத்திறன் மிக்க எழுத்துருக்கள், சித்தி ரங்கள் என்பவற்றை உள்ள டக்கிய விளம்பரங்களை நிர்மாணிப்பர். | • வெவ்வேறு மொழி களுக்கு உரிய எழுத்துகள்<br>• அலங்கார எழுத்து களும், சித்திரங்களும்.<br>• தலைப்புக்கு ஏற்ற தன்மை, பொருத்தப் பாடு<br>• பொருத்தமான வர்ணங் களின் பயன்பாடு<br>• அச்சிடலுக்கு ஏற்ற தன்மை<br>• முடிவு | 12 |
| 5.0<br>பல்வேறு ஊட கங்களைப் பயன் படுத்தி சிலை க ளையும், சிற்பங் களையும் ஆக்கு வார். | 5.1<br>கட்டட அலங்கார வேலைப் பாடுகளுக்கான எளிய செதுக்கல் சிற்பங்களை நிர்மாணிப்பர்.<br><br>5.2<br>எளிய வடிவங்களைப் பயன் படுத்தி வெவ்வேறு மெய் நிலைகளை நிர்மாணிப்பர். | • தேவைக்கு ஏற்ற தன்மை<br>• இடத்துக்கு ஏற்ற தன்மை<br>• எளிய இரேகைகள், வடிவங்களின் பிரயோகம்<br>• வர்ண பிரயோகம்<br>• சிற்ப முறைகள்<br>• முடிவு | 10 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 6.0<br>சமயம், கலாச் சார ஆக்கங்கள் தேசிய, சர்வ தேச ரீதியில் தேர்ந்தெடுக்கப் பட்ட கலைஞர் களின் கலைநிர் மாணங்கள்,தற் கால கலை ஆக் கங்கள், வெகுசன தொடர்பு சாத னங்களினூடாக அறிந்து கொள் ளப்பட்ட அங்கங் களை பற்றிக் கற்றுக் கொள்வர். | 6.1<br>இலங்கையின் பாரம்பரிய சமயக் கிரியை (சாந்தி கர்மய) கலையம்சங்களை ரசனை உணர்வோடு நோக்குவர்.<br><br>6.2<br>இலங்கையின் பாரம்பரிய நாட்டார் கலைகளின் பெறு மதிகளை வியப்பர். | • பாரம்பரிய சமயக் கிரியைகள்<br>• கலையம்சங்கள்<br>• குருத்தோலைக்கலை<br>• ஊடகங்களின் பயன்பாடு<br>• தேவைகள்<br><br>• களிமண் கைத்தொழில்<br>• பித்தளைக் கைத்தொழில் | 07 |
| 7.0<br>தேசிய, சர்வதேச, வரலாற்று முக்கி யம் வாய்ந்த சித்திரங்கள், சிலைகள், கட்டட நிர்மாணக்கலை என்பவற்றின் பண்புகளை விமர் சனம் செய்து அவற்றை தமது நிர்மாணங்க ளுக்குப் பயன் படுத்துவர். | 7.1<br>தூபியுடன் அண்டிய கலை யம்சங்களை ஆராய்ந்து அவற்றின் சிறந்த கலைப் படைப்பிற்குரிய பண்புகளை பயன்படுத்துவர்.<br><br>7.2<br>வரலாற்று சிறப்பு மிக்க இந்து கலையம்சங்களை ஆராய்ந்து அவற்றின் மேன் மையான பண்புகளை பாவனைக்குப் பயன்படுத்து வர்.<br><br>7.3<br>தேசிய சம்பிரதாய அலங் கார வடிவங்களைக் கற்ற றிந்து, அவற்றின் பண்பு களை பாவனையில் பயன் படுத்துவர். | • சந்திரவட்டக்கல்<br>• காவற்கல்<br>• கொரவக்கல்<br>• வாகல்கடம்<br>• பியகெட்டபொல (நுழைவாயில் படிக்கல்)<br><br>• பிள்ளையார் சிலை<br>• பார்வதி தேவியின் சிலை<br>• நந்தி (ரிஷப) சிலை<br>• சிங்கள அலங்கார வடிவங்கள்<br>  • திவ்ய (தெய்வீகம்)<br>  • விலங்கு<br>  • தாவரம்<br>  • நிர்ஜீவி (உயிரற்ற)<br>• இரேகைகளின் பயன்பாடு<br>• ஒன்றிணைத்தல்<br>• பாடக்கரு<br>• நிர்மாணத்திறன் | 14 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.6 கற்றல் - கற்பித்தல் முறைமை

கற்றல் - கற்பித்தல் செயன்முறையின்போது முதலில் ஆய்வுச் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துதல் எதிர்பார்க்கப்படுகின்றது. அறிவு, திறன், மனப்பாங்கு ஆய்வுகளின் பொழுது மாணவர்களை இருவராகவோ அல்லது சிறு குழுக்களாகவோ செயலில் ஈடுபடுத்துதல் மிகச் சிறந்ததாகும். மாணவனது சமூக ஆற்றல்களை வளர்த்துக் கொள்வதற்கு இம்முறை உதவும்.

சித்திரக் கலை ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டல் நூலின் செயல்முறைத் துறையில் கலைநுட்பத்திறனை விருத்தி செய்தல், தேர்ச்சி அபிவிருத்தியினூடாக சிறந்த நுட்பமுறை தொடர்பான செயன்முறை விளக்கத்தை பெருக்கிக் கொண்டு அவற்றை கையாளுகின்ற முறைகளை அறிந்து கொள்வதற்கும் மாணவர்களை ஊக்குவித்தல் வேண்டும். இதன் பொருட்டு சித்திர ஒழுங்கிணைப்பு, பொருட் கூட்ட ஒழுங்கிணைப்பு, கிராபிக் சித்திரம், அலங்காரத் திட்டமிடல், சிற்பம் நிருமாணித்தல் போன்ற பயிற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்துதல் வேண்டும். அதேபோல் இவ் விடயத்திற்குரிய விசேட கலைச்சொற்கள் வசனத்தின் கருத்துக்கள் பற்றிய சிறந்த விளக்கத்தைப் பெற்றுக் கொடுத்தல், சித்திரக் கலைக்குரிய விசேட கோட்பாடுகளை வளர்த்துக் கொள்ளுதல், பல்வேறு உபகரணங்களைக் கையாளுதல் தொடர்பான விளக்கத்தை வளர்த்துக் கொள்ளுதலின் பொருட்டு மாணவர்களை ஈடுபடுத்தல் வேண்டும்.

இந்த விளக்கங்களை பெறுவதற்கு உரிய செயன்முறைப் பயிற்சிகளில் ஈடுபடுத்தும் பொழுது, தூரதரிசனம், பிரமாணம், முப்பரிமாண இயல்பு போன்ற கோட்பாடுகளை வெளிப்படுத்தும் தலைப்புக்களைக் கொண்ட சித்திரப் படவாக்கங்களில் ஈடுபடுத்துதல், வர்ணத்துடன் தொடர்புபட்ட மூல விளக்கங்களைப் பெறக்கூடிய வகையில் வர்ணம் தொடர்பான பயிற்சிகளில் ஈடுபடுத்துதல், பல்வேறு சம்பிரதாயச் சுவர்ச் சித்திர ஆக்கங் களின் மூலம் பாரம்பரிய சித்திரக் கோட்பாடுகள் தொடர்பான அறிவை வளர்த்துக் கொள்ளல், போஸ்டர் சித்திரம், வர்த்தக விளம்பரம், சுற்றுறை போன்ற வெவ்வேறு அலங்கார ஆக்கங்களில் ஈடுபடுத்துவதன் மூலம் கிராபிக் அலங்காரம் தொடர்பான அடிப்படை அறிவையும் விளக்கத்தையும் பெறக்கூடிய வகையில் தேவையான வழிவகை களைச் செய்தல் வேண்டும். மனித உருவம், பிராணிகள் வடிவங்களைப் பிரமாணத்துடன் வரைந்து கொள்வதற்கு ஏற்ற விளக்கத்தைப் பெறும் வகையில், பல்வேறு மனித வடிவத்தைக் கொண்ட மெய்நிலைகளைக் கற்கும் வாய்ப்புக்களை மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். அதேபோல் சித்திரக் கலைப் பாடத்திட்டத்தின் மூலம் தேசிய சர்வதேச சித்திரக்கலை வரலாறு தொடர்பான விடயங்களை நயக்கும் இரசனை மனப்பாங்கை மாணவரிடத்து வளர்த்துக் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. இங்கு சித்திரக்கலையின் ஆரம்பம் பரவல், பல்வேறு சித்திரக் கலை யுகங்கள், பல்வேறு கலை ஆக்கங்கள், அவற்றின் கலைப்பண்புகள், அவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுப் பெறுமதி, அவற்றில் தாக்கத்தை ஏற்படுத்திய சமயம், சர்வதேச ஆதிக்கம் தொடர்பான இரசனையில் மாணவர்களை ஈடுபடுத்துதல் முக்கியமாகும்.

சித்திரக் கலையைக் கற்பிக்கும் நுட்ப முறையை செயற்படுத்தும் பொழுது மாணவர் களுடைய உடல், உள, வளர்ச்சி தொடர்பாகவும் ஆசிரியர் அவதானத்தில் கொள்ளுதல் வேண்டும். விசேடமாக சிறுவர் சித்திரக் கலையில் அபிவிருத்திக் காலம் தொடர்பான சிறந்த ஞானம் ஆசிரியரிடத்து இருத்தல் வேண்டும். அதற்கு ஏற்ப கொடுக்கப்படும் சித்திரத் தலைப்பும், கற்பிக்கும் நுட்பமுறையும் வேறுபடுதல் வேண்டும்.

சித்திரக்கலை கற்கும், கற்பிக்கும் முறைகளின் பொருட்டு பொருத்தமான நுட்பமுறைகள் பலவற்றைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

- **பாட ஆரம்பத்தின் பொருட்டு**
    - அறிவுத்திறன் விருத்தி செய்தல்
    - விவாதம்
    - தொலைக்காட்சி கொண்ட வீடியோ நாடாக்கள்
    - கட்புலச் சாதனங்கள்

- **ஆய்வு அடிப்படையில் சித்திரக்கலையை கற்பிக்கும் முறை**
    - குழுமுறை
    - பிரச்சினைகள் விடுவிக்கும் முறை
    - திறந்த முறை
    - தகவல் முறை
    - துறைக்குரிய (விடயம்) சுற்றுலா
    - சித்திரக் கண்காட்சிகளை ஒழுங்கு செய்தல்
    - ஒப்படை
    - செயற்றிட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.7 கற்றல் வளர்ச்சியின் பொருட்டு பாடசாலை இணைப் பாடவிதான வேலைத்திட்டங்கள்

**கண்காட்சி**

- தேசிய மட்டத்தில் கண்காட்சிகளுக்கு ஆக்கங்களை அளித்து பங்களிப்புச் செய்தல்.
- மற்றைய அழகியல் விடயங்களின் வேலைத்திட்டங்களுக்குச் சமமாக சித்திரக் கண்காட்சிகளை நடாத்துதல்.
- வகுப்பு ரீதியான காட்சிகளை நடாத்துதல்.

**போட்டி**

- இல்லம், மாவட்டம், தேசிய மட்டங்களில் போட்டிகளுக்குப் பங்களிப்பைச் செய்தல்.
- சர்வதேசப் போட்டிகளுக்கும் பங்களிப்பை வழங்குதல்.

**சுற்றுலா**

- கலைப் பெறுமானங்களைக் கொண்ட வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இடங்களைப் பார்வை இடச் சுற்றுலாக்களை ஒழுங்கமைத்தல்.
- ஆய்வுகளுக்கான சுற்றுலாக்களை ஒழுங்கமைத்தல்.

**வேறு**

- தற்காலக் கலைஞர்களின் கண்காட்சிகளைப் பார்வையிடல்.
- பாடத்திற்குரிய கருத்தரங்குகளில் பங்குபற்றல்.
- வகுப்பறையையும், சுற்றாடலையும் அலங்கரிப்பதற்கு சிறு செயற்றிட்டம்
- பாடசாலைத் தோட்டத்தை அலங்காரம் செய்யும் செயற்றிட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2.0 கற்றல் - கற்பித்தல் முறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2.1 அறிமுகம்

இந்த பாடத்திட்டத்திற்கு ஏற்ப கற்றல் - கற்பித்தல் முறைகளைத் தீர்மானிக்கும் பொழுது ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களின் திறனை உருவாக்குவதற்கு ஏற்றதாக கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளைத் திட்டமிட்டுக் கொள்ளுதல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு உள்ளது. தேர்ச்சி மட்டத்தை அடிப்படையாகக் கொண்ட கல்விக்கு தயாராகும் பொழுது ஆசிரியர் செயற்பாங்கில் தெளிவான மாற்றம் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆரம்பத்தில் இருந்து எமது வகுப்பறையில் பரவலாகச் செயற்படுத்தப்பட்டு வந்த "இடமாற்றல் செயற்பாங்கும்" (Transmission Role) பிற்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல் செயற்பாங்கு (Transaction Role) என்பன தற்காலத்திலும் வகுப்பறையில் காணப் படுகின்றன. பாடசாலையை விட்டு விலகும் பிள்ளைகளின் சிந்தனைத் திறன், சமூக திறன்களில் இன்று காணப்படும் நலிவுநிலை பற்றி அவதானிக்கும் பொழுது, கற்றல் - கற்பித்தல் முறைமைகளில் செயற்பட வேண்டிய அபிவிருத்தி மாற்றங்களையும், அவை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதையும் இனங்கண்டு கொள்வது கடினமல்ல.

இடமாற்றல் செயற்பாங்கில் கற்பிக்கப்பட வேண்டிய யாவற்றையும் ஆசிரியர் அறிந்து கொண்டவர் போலும், மாணவர்கள் இவ்விடயங்கள் எதையும் அறியாதவர் எனவும், கருத்திற் கொண்டு, மாணவர்களுக்கு அறிவு மாற்றத்தை செலுத்தும் ஒருவராக ஆசிரியச் செயல் உள்ளது. இது ஆசிரியரிடம் இருந்து மாணவர்க்கு ஊட்டப்படுவதற்கு மட்டும், மட்டுப்படுத்தப்பட்ட விரிவுரை முறையைக் கொண்ட கற்றல் - கற்பித்தல் செயன்முறைமை யாகும். இது மாணவர்களது சிந்தனையைத் தட்டி எழுப்புதற்கோ அல்லது மாணவர்களின் தனியாள் திறனை, சமூகத்திறனை, அபிவிருத்தி செய்வதற்கோ தேவையான அளவு பங்களிப்பை தருவதில்லை.

ஆசிரியர் வகுப்பறையில் உருவாக்கிக் கொள்ளும் "இருபக்கக் கொடுக்கல் வாங்கல்" செயல்பாங்கின் ஆரம்பநிலையாக அமைகிறது. ஆசிரியரால் வகுப்பிற்கும், வகுப்பால் ஆசிரியருக்கும் செல்லும் கருத்துக்களுக்கு மேலாக, மாணவர்களுடன் இடைத் தொடர் பாடல் ஏற்படுத்தப்பட்டு கருத்துப் பரிமாற்றம் நடைபெறுவதுடன் இது தர்க்கரீதியான கலந்துரையாடலாக மாற்றம் பெறும். தெரிந்ததில் இருந்து தெரியாததற்கும், எளியதில் இருந்து சிக்கலானதற்கும், தூல விடயத்தில் இருந்து கருத்து நிலைக்கும் மாணவர்களை இட்டுச் செல்வதால் ஆசிரியர் தொடர்ச்சியாக வினா எழுப்புவதில் ஈடுபட்டு இருப்பார்.

தேர்ச்சி மட்டத்தை அடிப்படையாகக் கொண்ட கல்வியில் மாணவர் செயற்பாடுகள் வலுவான இடத்தைப் பெறுவதோடு, வகுப்பில் உள்ள சகல மாணவரும் அந்த தேர்ச்சி மட்டத்தை சிறிதளவாவது அண்மித்த நிலைக்கு இட்டுச் செல்வதற்கு ஏற்ற ஒரு வளவாளராக (Resource



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Porson) மாறுவார். கற்றலுக்குத் தேவையான உபகரணங்களும், மற்றும் தேவையான வசதிகளும் கொண்ட கற்றல் கற்றல் சூழலொன்றைத் திட்டமிடுதல், மாணவர் கள் கற்கும் விதத்தை அருகிலிருந்து அவதானித்தல், மாணவர்களின் இயலும், இயலாமை களை இனங்காணுதல், தேவையான முன்ஊட்டல், பின்ஊட்டலை அளிப்பதன் மூலம் மாணவர்களது கற்றலை விருத்தி செய்வதுடன், வகுப்பறைக்கு வெளியிலும் மாணவர்கள் கற்பதற்கும் கற்பித்தல், செயன்முறை தொடர்ச்சியாக செயல்படுத்துவதற்குப் பொருத்தமான உபகரணங்களைத் தயாரித்துக் கொள்வதும், ஆசிரியரால் செயல்படுத்தப்பட வேண்டிய முக்கிய செயல்களாகும். இவ்வாறான ஆசிரிய செயல்பாட்டிற்கு ஏற்ப கட்டி எழுப்பப்பட்ட ஆசிரிய செயற்பாங்கு **"மாற்றம் பெற்ற செயற்பாங்கு"** (Transformation Role) எனப் பெயர் பெறும்.

இந்த ஆசிரிய வழிகாட்டல் நூலின் முதற்பகுதியாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பாடத் திட்டமும் செயற்படுத்துவதற்கு பயன்படுத்தக்கூடிய செயற்பாட்டுத் தொகுதி இரண்டாம் பகுதியாக உள்ளடக்கப்பட்டு உள்ளன. இச் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் குறைந்தது மூன்று படிகளைக் கொண்டதாக விருத்தி செய்யப்பட்டு உள்ளன. செயற்பாட்டின் முதற் படியில் மாணவர்களைக் கற்றலுக்குத் தயார் செய்வதில் ஈடுபடுத்திக் கொள்வது எதிர் பார்க்கப்படுகின்றது. இவ்வாறு மாணவர்களைத் தயார் செய்து கொள்ளும்படி (Engagement step) ஈடுபடுத்தும்படி எனப் பெயர் பெறும். இதன் ஆரம்பப் படியில் ஆசிரியர் "கொடுக்கல் வாங்கல் செயற்பாங்கின்" மூலம் மாணவர்களுடன் கலந்துரையாடலை ஆரம்பிப்பார். பின்னர் மாணவர்கள் விடயங்களை நன்கு ஆராய்ந்து செயற்படுத்துவதற்குத் தேவையான முன்னறிவை மீட்கும் வகையிலும், செயற்பாட்டுக்குத் தேவையான சாடையைக் கொடுக் கும் வகையிலும் கலந்துரையாடலை விரிவுபடுத்திக் கொள்வார். இக் கலந்துரையாடலில் கருத்துப் பரிமாற்றலுக்குத் தேவையான நுட்பங்கள் ஆசிரியரிடம் இருத்தல் வேண்டும். வினாக்களை வினவுதல், படங்கள், பத்திரிகை விளம்பரங்கள், அறிவித்தல்கள், காட்சி அட்டைகள் (Flash Card) போன்ற ஆர்வம் ஊட்டுவனவற்றைப் பயன்படுத்தல் / பிரச்சினைகள், புதிர்கள், விடய ஆய்வுகள் / கலந்துரையாடல், நடித்தல், கவிதைகள், பாடல்கள், செய்து காட்டல் (Demonstrations), கட்புல, செவிப்புலச் சாதனங்கள் போன்றன பயன்படுத்துவதும் இதில் அடங்கும். முதலாம் படி பின்வரும் மூன்று நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- வகுப்பு மாணவர்களது கவனத்தை ஈர்த்துக் கொள்ளல்.
- தேவையான முன்னறிவை மீட்டுக் கொள்வதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பத்தை வழங்குதல்.
- செயற்பாட்டின் இரண்டாம்படியில் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் ஆய்வு ரீதியான கண்டுபிடிப்புக்களுக்குத் தேவையான ஆரம்ப விடயங் களை வழங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களுக்கு ஆய்வு ரீதியான பேறுகளைக் கண்டு பிடிப்பதற்குச் (Exploration) சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. மாணவர்கள் பேறுகளைக் கண்டுபிடிப்பது அதற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தல் படிவத்தினை அடிப்படையாகக் கொண்டதாகும். பிரச்சினையோடு தொடர்பான பல்வேறு விடயங்களை யும் கூட்டாகச் செயற்பட்டு ஆராய்ந்து குழுவாகக் கற்பதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் செயற்பாட்டைத் திட்டமிடல் வேண்டும். வழங்கப்பட்டுள்ள உபகரணங்களையும், மற்றும் வளங்களையும் பயன்படுத்தித் தெளிவான விளக்கத்துடன் தர்க்கரீதியான கலந்துரையாட லுடன் ஆராய்ந்து பேறுகளைக் கண்டுபிடிப்பது போன்றன இப்படிமுறையில் எதிர்பார்க்கப் படும் முக்கிய பண்புகள் சிலவாகும். இவ்வாறான செயற்பாடுகளில் மாணவர்கள் தொடர்ந்து ஈடுபடுவதால் சுயகட்டுப்பாடு, ஒழுக்கம், ஏனையோரின் கருத்துக்களுக்கு செவிமடுத்தல், ஏனையோருடன் இணைந்து செயற்படல், ஏனையோருக்கு உதவுதல், நேர முகாமைத்துவம், உயர்தரத்துடனான உயர் உற்பத்தியைப் பெறல், நேர்மை போன்ற அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான முக்கிய பண்புகளை விருத்தி செய்து கொள்வதற்கு மாணவர்களுக்கு ஆற்றல் கிடைக்கும்.

மாணவர்கள் கண்டுபிடிப்புக்களில் ஈடுபடும்போது குழுத்தலைவர்களைத் தெரிவு செய்வதை ஆசிரியர் தவிர்த்துக் கொள்வதோடு, தலைவர் குழுவிலிருந்து உருவாவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கக்கூடிய பின்னணியை மட்டும் ஆசிரியர் ஏற்படுத்துதல் வேண்டும். மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கும் தலைமைத்துவத்தைப் பெறக்கூடிய சந்தர்ப்பமும் இதன் மூலம் மாணவர்க்குக் கிடைக்கும்.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டுபிடிப்புக்களையும் பேறுகளையும் ஏனைய மாணவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் வகுப்பில் சமர்ப்பிப்பதற்கு ஒவ்வொரு குழுவிற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பிக்கும்போது அக்குழுவின் ஒவ்வொரு அங்கத்தவரும் பங்கெடுத்துக் கொள்ளும் வகையில் வேலையைப் பகிர்ந்தளிப்பது பயனுடையதாகும். கண்டுபிடிப்புக்களுக்கான விளக்கத்தை அளித்தல் (Explanation) இப்படியின் முக்கிய எதிர்பார்ப்பாகும். வகுப்பறையில் வழக்கமாக ஒலிக்கும் ஆசிரியர் குரலுக்கு மேலதிகமாக மாணவர்களின் குரல்களும் கருத் துள்ளவாறு ஒலிக்கத் தொடங்குகிறது. இதுவே இப்படியில் உள்ள முக்கிய அம்சமாகும்.

செயற்பாட்டின் நான்காவது படியில் குழுக்களின் கண்டுபிடிப்புக்களையும் பேறுகளையும் மேலும் விருத்தி செய்து ஆழமாக விளங்கிக் கொள்வதற்கு (Elaboration) மாணவர்களுக்குக் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பித்த பின் அவற்றை மேலும் அபிவிருத்தி செய்யும் வகையிலான கருத்துக்களை வழங்குவதற்கு முதலில் அக்குறிப்பிட்ட குழுவின் அங்கத்தவர்களுக்கும், பின்னர் ஏனைய குழுக்களின் அங்கத்தவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல் மூலம் இது நிறைவேற்றப்படுகிறது. எவ்வாறாயினும் இறுதியில் பேறுகளைத் தொகுப்பது ஆசிரியரின் பொறுப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்போது மாணவர்கள் ஆராய்ந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்ட முக்கிய விடயங்கள், எண்ணக்கருக்கள், கோட்பாடுகள், விதிகள் போன்றவற்றை மாணவர்களிடையே உறுதிப்படுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது.

வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயன்முறை எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் வெற்றிகரமாக நடைபெற்றதா என தொடர்ந்து தேடிப்பார்ப்பது இம்முறையின் கீழ் ஆசிரியரது பிரதான கடமையாகும். இதன் பொருட்டு கணிப்பீட்டு மதிப்பீட்டு முறையைப் பயன்படுத்திக் கொள்வதுடன் அதன் பொருட்டு தேவையான அளவு கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினுள் இடம் பெறுவதற்கு திட்டமிட்ட செயற்பாடுகளைத் தயாரிப்பதற்குரிய சந்தர்ப்பத்தை ஆசிரியருக்கு வழங்குகிறது. செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்கள் விடயங்களை ஆராயும்போது கணிப்பீட்டையும் (Assessment) செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் அவர்களது பேறுகளை விளக்கும்போது கணிப்பீட்டோடு சார்ந்த மதிப்பீட்டையும் (Evaluation) நிகழ்த்துவதற்கு ஆசிரியருக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான விளக்கம் வேறாகத் தரப்பட்டுள்ளது.

இதுவரை விவரிக்கப்பட்ட கற்றல் - கற்பித்தல் முறைமை 'மாற்றம் பெற்ற செயற்பாங்கை' செய்வதற்கு ஆசிரியரை உட்படுத்துகிறது. இங்கு குழு ஆய்வுக்கு முதலிடம் அளிக்கப் படுவதோடு கொடுக்கல் வாங்கல், தர்க்கரீதியான கலந்துரையாடல் என்பவற்றோடு சிறிதளவு ஆசிரியரின் விரிவுரைக்கும் இடமுண்டு. பாட ஆரம்பத்தின்போது கொடுக்கல் வாங்கல், கலந்துரையாடல் முறை என்பன நடைபெறுவதோடு இறுதிப்படியில் தொகுப்பின் கீழ் சிறிய விரிவுரைக்கும், அத்தோடு எண்ணக்கருவை உருவாக்குவதற்கும் இடம் ஏற்படுகிறது.

புதிய ஆயிரமாம் ஆண்டின் முதலாவது பாடத்திட்ட மறுசீர் அமைப்பின் கீழ் தயாரிக்கப் பட்ட இப்பாடத் திட்டத்துடன் தொடர்பான கற்றல் - கற்பித்தல் முறைமைகளை அபிவிருத்தி செய்யும் போது இடமாற்றல் செயற்பாங்கிலும், கொடுக்கல் வாங்கல் செயல்பாங்கிலும் காணப்படக்கூடிய முக்கிய இயல்புகள் பற்றியும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளமை இம் முறையின் விசேட தன்மை எனக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.2 ஆசிரியருக்கு ஆலோசனைகள்

- செயற்பாட்டை செயல்படுத்தும்பொழுது வழமை போல் நேர முகாமைத்துவத்தை கடைப்பிடித்துக் கொள்க.

- செயற்பாட்டு மாதிரியில் காணப்படும் கோட்பாடுகளைப் பின்பற்றிக் கொண்டு, செயற்பாட்டை வேறு வகையில் தயாரித்துக் கொள்வதற்கு உமக்கு சுதந்திரம் உண்டு.

- குறித்த செயற்பாடுகளுக்கு உரிய தர உள்ளீடுகளை தவணை ஆரம்பத்திலேயே பெற்றுக் கொள்வதற்கு முயற்சி எடுத்துக் கொள்க.

- குறித்த தர உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாத சந்தர்ப்பத்தில் மாற்று முறையைப் பயன்படுத்திக் கொள்வதற்க உரிய நடவடிக்கைகளை நீர் எடுத்தல் வேண்டும்.

- ஆய்வு / செயல் அறிவுறுத்தல் படிவத்தை மாணவர்களுக்கு தனித்தனியாக பகிர்ந் தளிக்க முடியாத சந்தர்ப்பத்தில் படிவத்தை காட்சிப்படுத்துதல் போன்ற பொருத்த மான செயன்முறையைப் பின்பற்றிக் கொள்க.

- வாசிப்புப் படிவத்தின் பொருட்டும் அதேபோல் பொருத்தமான செயன்முறையைப் பின்பற்றுக.

- வாசிப்புப் படிவத்தில் விடய கருத்துக்கள் சுருக்கமாகவே உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும் கருத்துக்களை விரிவுபடுத்திக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்க.

- செயற்பாட்டு இறுதியில் உள்ள கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளைப் பயன்படுத்தி அல்லது அதுபோல் விடயத்திற்கு ஏற்ப நியதிகளைத் தயாரித்து பொருத்தமாகப் புள்ளிகளை வழங்குவதற்கும், உயர்தர முகாமைத்துவ தேவைக்கும் புள்ளிகளை மாற்றி முன்வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்க.

- தரப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் செயன்முறையை தொடர்ச்சிப்படுத்தும் கருவியை மாதிரியாகக் கொண்டு, மற்றைய நிலைக்குத் தேவையான கற்றல் - கற்பித்தல் செயன்முறையை தொடர்ச்சிப்படுத்தும் கருவியை தயாரித்துக் கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.3 செயற்பாடுகளைத் தவணைகளுக்குப் பிரித்தல்

| தவணை | தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| முதலாம் தவணை | 1.0<br>2.0<br>3.0<br>4.0<br>6.0<br>7.0 | 1.1<br>2.1, 2.2<br>3.1<br>4.1<br>6.2<br>7.1<br>7.3 | 1.1.1, 1.3.1<br>2.1.1, 2.3.1, 3.1.1<br>3.1.2, 4.1.1, 2.1.2<br>6.2.2, 7.3.1<br>7.1.1 |
| இரண்டாம் தவணை | 1.0<br>2.0<br>3.0<br>4.0<br>5.0<br>6.0<br>7.0 | 1.1<br>1.2<br>1.4<br>2.1<br>3.1<br>3.2<br>4.1<br>5.1<br>5.2<br>6.1, 7.1 | 1.1.2<br>1.1.3, 1.2.4<br>1.4.1, 2.1.3<br>2.1.4, 3.2.1, 2.2.2<br>4.1.2, 5.1.1<br>5.2.1, 6.2.1<br>7.1.3, 7.1.4<br>7.2.1 |
| மூன்றாம் தவணை | 1.0<br>2.0<br>3.0<br>4.0<br>6.0<br>7.0 | 1.1<br>2.1<br>3.2<br>4.2<br>5.2<br>7.1<br>7.2 | 1.2.1, 1.2.2, 1.2.3<br>2.1.5, 2.1.6<br>3.2.2, 3.2.3<br>3.2.4, 4.2.1<br>5.2.2<br>6.1.1<br>7.1.5, 7.1.2 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.4 செயற்பாட்டுத் தொகுப்பு

**தேர்ச்சி 1.0** : **இயற்கைச் சூழலுடன் தொடர்புடைய விடங்களை கருத்து வெளிப்பாட்டுடன் வெளிப்படுத்துவர்.**

**தேர்ச்சி மட்டம் 1.1** : இயற்கைச் சூழலை அடிப்படையாகக் கொண்ட கருத்துக்கள் வெளிப்படுத்தும் சித்திரம் வரைவர்.

**செயற்பாடு 1.1.1** : இறங்குதுறை

**நேரம்** : 3 பாடவேளைகள்.

**தர உள்ளீடுகள்** :

- இறங்கு துறையுடன் தொடர்புடைய மாதிரி சித்திரங்கள்.
- பல மனித மெய்நிலைகள் காட்டப்படும் மாதிரி உருவம்.
- நீர் வர்ணம்/பெஸ்டல்/போஸ்டர் வர்ணம்/பலவித ஊடகங்களைப் பயன்படுத்தி வரையப்பட்ட சித்திரங்கள்.
- வரைதற் தாள்கள், பென்சில், பெஸ்டல், நீர்வர்ணம், தூரிகை, பல அளவுகளில் உள்ள (நிறமூட்டுவதற்காக)
- கருப்பொருளுக்குப் பொருத்தமான புகைப்படங்கள்.
- 1.1.1இல் உள்ள ஆய்வு செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தின் ஒரு பிரதி

**கற்றல் கற்பித்தற் செயற்பாடு :**

**படி 1.1.1.1** :

- இறங்கு துறையுடன் தொடர்புடைய சம்பவங்கள் பற்றி கலந்துரையாடி பாடத்தில் பிரவேசிக்கவும்.

- இறங்கு துறையுடன் தொடர்புடைய சம்பவங்களைச் சித்தரிக்கும் சித்திரங்களைக் காண்பிக்கவும்.

- பல நிற ஊடகங்களைப் பயன்படுத்தி வரையப்பட்ட சித்திரங் களை காண்பிக்கவும்.

- தலைப்புக்குப் பொருத்தமாக வரையும் போது பொருத்தமான சம்பவங்களையும், சந்தர்ப்பங்களையும் பற்றி மாணவருடன் கலந்துரையாடுக.

- கீழேயுள்ள விடயங்கள் மீது கவனஞ் செலுத்தி கலந்துரை யாற்றுக.

> - இறங்குதுறையொன்றில் பல மனித செயற்பாடுகளையும் விலங்குகளின் கொள்நிலைகளையும் காணலாம் என்பது.
> - இறங்குதுறை ஒன்றின் இயற்கையைப் போலவே செயற்கை சூழலையும் காணக் கூடியதாக இருக்கும் என்பது.
> - இறங்குதுறையில் மனித நடத்தைகளில் பல உணர்வுகளை யும் செயற்பாடுகளையும் காணக் கூடியதாக இருக்கும் என்பது.

**(15 நிமிடங்கள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 1.1.1.2 : • 1.1.11 இல் உள்ள ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தைக் காட்டுக.

• இறங்குதுறையுடன் தொடர்புடைய பலநிகழ்வுகள், செயற்பாடு கள் அடங்கிய சித்திரங்களைக் காட்டுக.

• கருப்பொருளுக்கேற்ப மனிதனின் கொள்நிலைகள், நுட்ப முறைகள் பற்றி நுணுக்கமாக ஆராய்க.

• கோட்டுச் சித்திரங்களை வர்ணம் தீட்டும் போது அதற்கான நுட்பமுறைகளைப் பயன்படுத்தும்படி மாணவர்களுக்குஅறிவுரை வழங்குக.

• வர்ணங்களை உபயோகிக்கும் போது பொருத்தமான நுட்ப முறைகளைப் பயன்படுத்தும்படி அறிவுரை வழங்குக.

• வரைந்து முடிந்தவற்றை வகுப்பில் காண்பிக்க உரிய ஏற்பாடுகளைச் செய்க.

**(15 நிமிடங்கள்)**

படி 1.1.13 : • மாணவர்களின் ஆக்கங்களை வகுப்பில் காண்பிக்கவும்.

• தமது ஆக்கங்களை சுயமாக மதிப்பிடச் சந்தர்ப்பம் வழங்குக.

• ஏனைய ஆக்கங்கள் பற்றி ஆக்கபூர்வமான கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குக.

• கீழே உள்ள விடயங்கள் மீது கவனம் செலுத்தி கலந்துரை யாடுக.

- இறங்குதுறை எனும் கருக்பொருளை சித்தரிக்கும் பொழுது பல சந்தர்ப்பங்களையும், சம்பவங்களையும் கருதலாம் என்பது.
- தரத்தை அதிகரித்துக் கொள்ளலாம் என்பது.
- இறங்கு துறை எனும் சித்திரிக்கும்போது பரிமாணம், தூர தரிசனம், முப்பரிமாணம், சமநிலை என்பன உபயோகித்தல் பலன்மிக்கது.
- ஆக்கத்திறனை அதிகரிப்பதற்காக உரிய பண்புகளையும், அறிவையும் பயன்படுத்துவதால் சித்திரத்தின் கருத்து மேலும் தெளிவாகும் என்பது.

**(15 நிமிடங்கள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீடு மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- இறங்குதுறையில் காணக் கூடிய சம்பவங்களைக் கூறுவர்.
- இறங்குதுறையுடன் தொடர்புடைய பல மனித செயற்பாடுகளில் காணப்படும் வேறுபாடு களைக் கூறுவர்.
- இறங்குதுறை எனும் கருப்பொருளைக் கொண்ட சித்திரம் வரைவர்.
- சித்திரம் வரைவதில் பெற்ற அனுபவத்தைக் கொண்டு பல வரைதற் போட்டிகளுக்கு தமது ஆக்கங்களைச் சமர்ப்பிப்பர்.
- ஆக்கத்தின் போது தமக்குரிய பாணிகளை (Style) வெளிப்படுத்துவர்.

**இணைப்பு 1.1.1.1**

## ஆய்வு/ செயற்பாட்டுப் படிவம் "இறங்குதுறை"

- வகுப்பில் காண்பிக்கப்படும் இறங்குதுறையுடன் தொடர்புடைய பல நிகழ்வுகளை உள்ளடக்கிய சித்திரங்களை நன்றாக நோக்குக.
- காண்பிக்கப்பட்ட மாதிரிச் சித்திரங்களை உற்று நோக்கிய பின் முப்பரிமாணம், தூரதரிசனம், பரிமாணம், சமநிலை போன்ற பண்புகளைக் கவனத்திற் கொண்டு கருப்பொருளுக்குப் பொருத்தமான சித்திரத்தை வரைக.
- சித்திரத்தை வர்ணம் தீட்டும் பொழுது சித்திர நுட்பமுறைகளைப் பயன்படுத்துக.
- நிறைவு செய்யப்பட்ட சித்திரத்தை வகுப்பில் காட்சிப்படுத்த உரிய ஏற்பாடுகளைச் செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 1.0** : **இயற்கைச் சூழலுடன் தொடர்புடைய விடயங்களை கருத்து வெளிப்பாட்டுடன் வெளிப்படுத்துவர்.**

**தேர்ச்சி மட்டம் 1.1** : இயற்கைச் சூழலை அடிப்படையாகக் கொண்ட கருத்துக்கள் வெளிப்படுத்தும் சித்திரம் வரைவர்.

**செயற்பாடு 1.1.2** : **"சேனைப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள்."**

**நேரம்** : 3 பாடவேளைகள்.

**தர உள்ளீடுகள்** :
- 1.1.2.1இல் உள்ள ஆய்வு செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்கள்.
- சேனைப் பயிர்ச் செய்கையைச் சித்தரிக்கும் மாதிரிப் படங்கள்.
- பல செயற்பாடுகள் காட்டும் பரும்படிப் படங்கள்.
- பல ஊடகங்களைப் பயன்படுத்தி வரையப்பட்ட மாதிரி சித்திரங்கள்.
- வரைதற் தாள்கள், கறுப்புத்தாள், பெஸ்டல், நீர்வர்ணம், பென்சில், தூரிகை.

**கற்றல் கற்பித்தற் செயற்பாடு :**

**படி 1.1.2.1** :
- சேனைப் பயிர்ச் செய்கை வரண்ட பூமியில் செய்யப்படுகிறன்றது எனக் கூறிப் பாடத்தில் பிரவேசிக்கவும்.
- சேனைப் பயிர்ச் செய்யும் வரண்ட பூமியில் வேறுபாட்டைப் பற்றி மாணவரிடம் வினாவுக.
- கீழ்க்காணப்படும் கருத்துக்களை அவதானித்துக் கலந்துரையாடுக.

| |
|---|
| • சேனைப்பயிர்ச் செய்கை வரண்ட பூமியில் வாழும் மக்களின் பிரதான தொழிலாகும்.<br>• கஷ்டப்பட்டு உழைக்கும் சேனைப் பயிரிடும் விவசாயிகள் சூழலுடன் இணைந்து பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுவர்.<br>• சேனைப் பயிர்ச்செய்கை மூலம் கிராமியச் செயற்பாடுகளை சிறப்பாகச் சித்தரிக்க முடியும். |

**(15 நிமிடங்கள்)**

**படி 1.1.2.2** :
- **சித்திரம் வரைவதற்குத் தேவையான உபகரணங்களை மாணவர்களுக்கு வழங்குக.**
- சேனைப் பயிர்ச்செய்கை தொடர்புடைய பலநிகழ்வுகள், செயற்பாடு கள் அடங்கிய சித்திரங்களைக் காட்டுக.
- கருப்பொருளுக்கேற்ப மனிதனின் கொள்நிலைகள், நுட்பமுறைகள் பற்றி நுணுக்கமாக ஆராய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கோட்டுச் சித்திரங்களை வர்ணம் தீட்டும் போது அதற்கான நுட்பமுறைகளைப் பயன்படுத்தும்படி மாணவர்களுக்குஅறிவுரை வழங்குக.

- வர்ணங்களை உபயோகிக்கும் போது பொருத்தமான நுட்ப முறைகளைப் பயன்படுத்தும்படி அறிவுரை வழங்குக.

- பல நிற ஊடகங்களைப் பயன்படுத்தி வரையப்பட்ட சித்திரங்களை காண்பிக்கவும்.

- தலைப்புக்குப் பொருத்தமாக வரையும் போது பொருத்தமான சம்பவங்களையும், சந்தர்ப்பங்களையும் பற்றி மாணவருடன் கலந்துரையாடுக.

- வரைந்து முடிந்த சித்திரங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்து வதற்கு ஒழுங்கு செய்க.

**(90 நிமிடங்கள்)**

**படி 1.1.2.3** :

- மாணவர்களின் சித்திரங்களை வகுப்பறையில் காட்சிப் படுத்துக.

- ஆக்கங்கள் தொடர்பாக சுய மதிப்பீட்டிற்கு சந்தர்ப்பம் வழங்குக.

- சித்திரங்கள் தொடர்பான கருத்துக்களைக் கூறுவதற்கு ஏனைய மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குக.

- கீழேயுள்ள விடயங்கள் மீது கவனஞ் செலுத்தி கலந்துரை யாற்றுக.

  - அசைவுகளைக் காட்டும் வடிவங்கள் முக்கியம்.
  - சேனைப்பயிர்ச் செய்கையுடன் பல்வேறு நிகழ்வுகள் கருத்துடனும் கோட்பாடுகளுடனும் நிர்மானிக்கப்படல் வேண்டும்.
  - இரேகைகள் மூலம் வெளிக்கொணரப்படும் நிகழ்வுகள் வர்ணப் பயன்பாட்டின்போது பல்வேறு நுட்பங்களைப் பயன்படுத்தலாம்.
  - சித்திரத்தை கருத்துடன் வெளிப்படுத்தும்போது உருவங்களும் வர்ணங்களும் பொருத்தமானதாகவும், சூழலில் காணப்படும் குணப்பண்புகள் காட்டப்படல் வேண்டும்.

**(15 நிமிடங்கள்)**



3. S. P. C. 081055

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீடு மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- சேனைப்பயிர்ச் செய்கையின் போது பல நிகழ்வுகளைப் பெயரிடுவர்.
- அச்சந்தர்ப்பங்களில் பல்வேறு நிகழ்வுகளையும் சூழலையும் விபரிப்பர்.
- கருத்துடன் கோட்பாடுகளையும் பயன்படுத்துவர்.
- மற்றவர்களின் நிர்மாணங்களை இரசிப்பர்.
- மனித நிர்மாணங்கள் பற்றி பல்வேறு வேறுபாடுகளை வெளிப்படுத்துவர்.

**இணைப்பு 1.1.2.1**

### ஆய்வு/ செயற்பாட்டுப் படிவம்
### "சேனைப்பயிர்ச் செய்கையின் ஈடுபடும் பெண், ஆண் விவசாயிகள்"

- வகுப்பறையில் காட்சிப்படுத்திய சேனைப்பயிர்ச்செய்கை தொடர்பான சித்திரங்கள்/ புகைப்படங்களை நன்றாக அவதானிக்குக.

- சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற நிகழ்வுகளையும் மனித அசைவுகளையும் அதன் தன்மைகளையும் சூழலையும் அவதானிக்குக.

- வகுப்பறையில் காட்சிப்படுத்திய பல்வேறு செயற்பாடுடைய மனித உருவங்களையும் குறிப்புப் படங்களாக வரைந்து கொண்டு கருத்துடன் சித்திரத்தை வரைக.

- நிகழ்வுகளைக் காட்டும்போது கருத்துக்களையும், கோட்பாடுகளையும் பயன்படுத்துக.

- வர்ணம் தீட்டும்போது பல்வேறு நுட்பமுறைகளை பயன்படுத்துவதற்குக் காட்சிப்படுத்திய சித்திரங்களில் இருந்து கற்றவற்றை பயன்படுத்துக.

- உமது ஆசிரியர்/ஆசிரியையின் உதவியை பெற்றுக்கொள்க.

- நிறைவு செய்யப்பட்ட சித்திரங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்த ஒழுங்கு செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 1.0** : **இயற்கைச் சூழலுடன் தொடர்புடைய விடயங்களை கருத்து வெளிப்பாட்டுடன் வெளிப்படுத்துவர்.**

**தேர்ச்சி மட்டம் 1.1** : இயற்கைச் சூழலுடன் தொடர்புடைய விடயங்களை கருத்து வெளிப்பாட்டுடன் வெளிப்படுத்துவர்.

**செயற்பாடு 1.1.3** : **"யாத்திரைக்கு செல்லும் குழுவினர்."**

**நேரம்** : 3 பாடவேளைகள்

**தர உள்ளீடுகள்** :

- மலையுச்சியில் அமைந்த புனிதத்தவம் ஒன்றுக்கு யாத்திரை செல்லும் பக்தர்களையும் அத்துடன் தொடர்புடைய பல நிகழ்வுகளையும் காட்டும் மாதிரிச் சித்திரம்.
- பல மனித மெய் நிலைமைகளைக் காட்டும் படங்கள்.
- பல நுட்பமுறைகளை பயன்படுத்தி வரையப்பட்ட மாதிரிச் சித்திரங்கள்.
- இணைப்பு 1.1.3.1 இல் அடங்கிய ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்களின் பிரதிகள்.
- வரைதற் தாள், பென்சில், பெஸ்டல், நீர் வர்ணம்.

**கற்றல் கற்பித்தற் செயற்பாடு :**

**படி 1.1.3.1** :

- மலையுச்சியில் அமைந்த புனிதத்தலம் ஒன்றுக்கு யாத்திரை செல்லும் பக்தர்களையும், அத்துடன் தொடர்புடைய பல நிகழ்வுகளையும் காட்டும் மாதிரி சித்திரங்களைக் காண்பித்து தலைப்புக்குள் பிரசேவிக்குக.

- மாதிரிச் சித்திரங்களைக் காண்பித்து தலைப்புக்குள் பிரவேசிக்குக.

- மாதிரிச் சித்திரங்களை நோக்கி தலைப்புக்குப் பொருத்தமான விடயங்களைக் கற்க.

- மாதிரிச் சித்திரங்களையும் மாணவர்களின் அனுபவங்களையும் கொண்டு மலையுச்சிக்கு யாத்திரை செல்லும் பக்தர்கள் பற்றியும் அவற்றுடன் தொடர்புள்ள வேறு நிகழ்வுகள் பற்றியும் கலந்துரை யாடுக.

- அந்த நிகழ்வுகளில் அவதானிக்கக் கூடிய நடத்தைக் கோலங்கள் பற்றியும் மனித மெய் நிலைகள் பற்றியும் அவற்றின் வேறுபாடு பற்றியும் வினாவுக.

- கீழேயுள்ள விடயங்களைக் கலந்துரையாடுக.

> - மலையுச்சிகளில் அமைந்த பல புனிதத் தலங்களை நாடி பக்தர்கள் யாத்திரை செல்வது பற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- யாத்திரைக்கு செல்பவர்கள் பல வயதுகளுக்குட்பட்டவர் என்பது.
- புனிதத் தலங்களை அண்டிய சூழல் மனதைக் கவர்ந்த வையாக இருக்கிறது என்பது.
- சித்திரம் வரையத் தேவையான கருப்பொருள், சித்திரப் பண்பு போன்றவற்றை மலையுச்சிக்கு யாத்திரை செல்லும் பக்தர்கள் மூலமும் அத்துடன் தொடர்புடைய நிகழ்வுகள் மூலமும் வெளிப்படையாகிறது என்பது.
- அவற்றுடன் தொடர்புடைய சம்பவங்களை கலைத்திறமை யுடன் வரையலாம் என்பது.

**(15 நிமிடங்கள்)**

**படி 1.1.3.2** :
- இணைப்பு 1.1.3.2 அடங்கிய ஆய்வு அறிவுறுத்தல் படிவங்களை வழங்குக.
- மாதிரி சித்திரங்களைக் காண்பிக்குக.
- தலைப்பிற்குப் பொருத்தமான விடயத்தை பென்சிலை உபயோகித்து வரையச் செய்க.
- செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களின் உருவப் படங்களை காண்பிக்குக.
- மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- பூர்த்தி செய்யப்பட்ட ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்த ஏற்பாடு செய்க.
- வரைந்து முடிந்தவற்றை வகுப்பில் காண்பிக்க உரிய ஏற்பாடு களைச் செய்க.

**(90 நிமிடங்கள்)**

**படி 1.1.3.3** :
- மாணவர்களின் ஆக்கங்களை வகுப்பில் காண்பிக்கவும்.
- ஆக்கங்களை சுய மதிபபீடு செய்யச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய ஆக்கங்கள் பற்றி ஆக்கபூர்வமான கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குக.
- கீழே உள்ள விடயங்களைக் கலந்துரையாடுக.

- மலையுச்சியில் அமைந்த புனிதத் தலங்கள் மனதைக் கவர்ந்த இயற்கை சூழலைக் கொண்டது என்பது.
- மதங்களுக்கேற்ப பக்தர்களின் பூசை வழிபாடுகளும், செயற்பாடுகளும் வேறுபடுகிறது என்பது.
- மதத்தின் தனித்துவப் பண்பு, சூழல் வேறுபாடு, பல மனிதச் செயற்பாடுகள், மனித நடத்தைக் கோலங்கள், யாத்திரிகை கள், போன்றவற்றை நுட்பமுறைகளைப் பயன்படுத்தி கருத்து வெளிப்பாட்டுடன் நிர்மாணம் செய்ய முடியும் என்பது. .
- ஆக்கத்திறனை அதிகரிப்பதற்காக உரிய பண்புகளையும், அறிவையும் பயன்படுத்துவதால் சித்திரத்தின் கருத்து மேலும் தெளிவாகும் என்பது.

**(15 நிமிடங்கள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிப்பீடு மதிப்பீட்டுக்குமான நியதிகள்**

- மலையுச்சியிலுள்ள புனிதத் தலத்துக்கு யாத்திரை செல்லும் சந்தர்ப்பங்களை விபரிப்பர்.
- அந்நிகழ்வின் போது காணக் கூடிய மனித நடத்தைகளை விளக்குவர்.
- அடிப்படைக் கோட்பாடுகளைப் பயன்படுத்தி சித்திரம் வரைவர்.
- பொறுமையாகவும், சிறப்பாகவும் செயற்பாட்டில் ஈடுபடுவர்.
- தனிப்பட்ட தேவைகளில் பயன்படுத்துவர்.

**இணைப்பு 1.1.3.1**

## ஆய்வு / செயற்பாட்டுப் படிவம்.
## "யாத்திரைக்குச் செல்லும் குழுவினர்."

- வகுப்பில் காண்பிக்கப்பட்ட மலையுச்சியில் அமைந்த புனிதத் தலத்துக்கு யாத்திரை செல்லும் பக்தர்களின் மாதிரிச் சித்திரத்தை நோக்குக.

- யாத்திரைக்குச் செல்லும் பக்தர்களுடன் தொடர்புள்ள விரும்பிய ஏதாவதொரு நிகழ்வை சித்திரமாக வரைக.

- வர்ணஊடகங்களையும், நுட்ப முறைகளையும் பயன்படுத்தி சித்திரங்களின் முப்பரிமாணம், சமநிலை, தூரதரிசனம் போன்ற பண்புகள் கருத்துடன் வெளிப்படும் விதத்தில் வர்ணம் தீட்டுக.

- மாணவர்களது ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்த உரிய ஏற்பாடுகளை செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 1.0** : **சூழலுடன் சேர்ந்த விடயங்களைக் கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமாக வெளிப்படுத்துவர்.**

**தேர்ச்சி மட்டம் 1.2** : செயற்கைச் சூழலில் காணப்படும் தலைப்புக்களின் கீழ் கருத்து வெளிப்பாட்டுச் சித்திரங்களை வரைக.

**செயற்பாடு 1.2.1** : **"சமயத்துடன் தொடர்புடைய நிகழ்வு"**

**நேரம்** : 3 பாடவேளைகள்.

**தர உள்ளீடுகள்** :

- 1.2.1.1உள்ள ஆய்வு அறிவுறுத்தல் படிவங்களின் பிரதிகள்.
- சமய நிகழ்வுகளுடன் தொடர்புபட்ட மாதிரிச். சித்திரங்கள்.
- மனிதச் செயற்பாடுகளை வெளிப்படுத்தும் நிலைகளைக் கொண்ட படங்கள்.
- பல ஊடகங்களைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட மாதிரிச் சித்திரங்கள்.
- வரைதற் தாள், பெஸ்டல், நீர் வர்ணம், போஸ்டர் வர்ணம், தூரிகை, பென்சில்.

**கற்றல் கற்பித்தற் செயற்பாடு :**

**படி 1.2.1.1** :

- சமயத்துடன் தொடர்புபட்ட நிகழ்வுகள் முன்கொணர்ந்து தலைப்புக்குள் பிரவேசிக்குக.
- சமயத்துடன் தொடர்புபட்ட பல்வேறு மாதிரிச் சித்திரங்களை யும், புகைப்படங்களையும் காண்பித்து உரையாடுக.
- பல சமய நிகழ்வுகளுடன் தொடர்புடைய செயற்பாடுகளும், நிலைகளையும் பற்றி வினாவுக.
- சமயத்துடன் தொடர்புடைய சமூக சூழல் நிலைகள் பற்றி கலந்துரையாடுக.
- கீழே காணப்படும் விடயங்களுடன் கலந்துரையாடுக.

| |
|---|
| • சமய வழிபாடுகளுடன் தொடர்புடைய பல நிகழ்வுகளைக் காணலாம் என்பது.<br>• சமய வழிபாட்டு முறைகள் பிரதேசத்திற்கேற்ப வேறுபட்ட தனித்துவப் பண்புகளைக் கொண்டுள்ளது என்பது.<br>• இந்நிகழ்வுகளைச் சித்திரிக்கும் போது பல நுட்ப முறைகளைப் பயன்படுத்தலாம் என்பது. |

**(15 நிமிடங்கள்)**

**படி 1.2.1.2** :

- இணைப்பு 1.2.1.1 அடங்கிய ஆய்வு /செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்களை மாணவர்களுக்கு வழங்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சித்திரம் வரையத் தேவையான உபகரணங்களை மாணவர் களுக்கு வழங்குக.
- மேலுள்ள தலைப்பில் ஒரு நிகழ்வை சித்திரமாக வரையத் தேவையான அறிவுரைகளை வழங்குக.
- வர்ணம் தீட்டும் போது சாந்த வர்ணங்களையும், குளிர் வர்ணங்களையும் பயன்படுத்த மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குக.
- ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்த ஆயத்தங்களைச் செய்க.

**(95 நிமிடங்கள்)**

படி 1.2.1.3 :

- மாணவர்களின் ஆக்கங்களை வகுப்பில் காண்பிக்கவும்.
- ஆக்கங்களை சுய மதிப்பீடு செய்யச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய ஆக்கங்கள் பற்றி ஆக்கபூர்வமான கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குக.
- கீழே உள்ள விடயங்களைக் கலந்துரையாடுக.

> - சமய வழிபாடொன்றைச் சித்தரிக்கும் போது மனிதச் செயற்பாடுகள், ஆடையணிகள், சோடனைகள், பழக்க வழக்கங்கள் என்பன பொருந்தும்படி அமைய வேண்டும் என்பது.
> - மனித உருவங்களை வர்ணம் தீட்டும் போது உரிய நுட்பமுறைகளைப் பயன்படுத்த வேண்டும் என்பது.
> - குளிர் வர்ணங்களைப் பயன்படுத்துதல், பக்தி சார்ந்த அமைதி போன்ற பண்புகளை வெளிப்படுத்த உகந்தது என்பது.
> - வெவ்வேறு நுட்பங்கள் மூலம் வர்ண ஊடகங்களைப் பயன்படுத்தலாம் என்பது.
> - வர்ண ஊடகங்களைப் பயன்படுத்துகையில், பல நுட்ப முறைகளைக் கையாளலாம் என்பது.
> - சித்திரத்தில் கருத்து வெளிப்பாட்டுத் தன்மை வெளிப் படுத்த பொருத்தமான நுட்பமுறைகளைப் பயன்படுத்து வது அவசியம் என்பது.

**(15 நிமிடங்கள்)**

## கணிப்பீடு மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- பல சமய வழிபாட்டு முறைகளைக் கூறுவர்.
- கருப்பொருளுக்குப் பொருத்தமான மனிதச் செயற்பாடுகளையும் வர்ண உபயோகத்தையும் விளக்குவர்.
- நுட்ப முறைகளைப் பயன்படுத்தி சித்திரங்களை வரைவர்.
- பொறுமையாகவும், சிறப்பாகவும் செயற்பாட்டில் ஈடுபடுவர்.
- வர்ண நுட்ப முறைகளினூடாகப் பெற்றுக் கொண்ட அறிவை வேறு ஆக்கங்களில் பயன்படுத்துவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைப்பு 1.1.2.1**

## ஆய்வு / செயற்பாட்டுப் படிவம்.
## "சமய வழிபாட்டுச் சடங்குகளுடன் தொடர்புடைய ஒரு நிகழ்வு"

- வகுப்பில் காணப்பிக்கப்பட்ட சமய நிகழ்வுகளுடன் தொடர்புடைய மாதிரிச் சித்திரம், புகைப்படங்கள், உருவப் படங்கள் என்பனவற்றை நன்றாக நோக்குக.

- பல புண்ணிய கருமங்கள்.

  i. இல்லங்களில் நடைபெறும் புண்ணிய நிகழ்வு
  ii. கோவில் அன்னதானம்.
  iii. கோவில்களில் பூசை வழிபாடு
  iv. கோவில் மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வு
  v. தண்ணீர்ப் பந்தல்.
  vi. முதியோர் / சிறுவர் இல்லத்திற்கு வழங்கப்படும் அன்னதானம்

- இந்நிகழ்வுகளில் காணப்படும் மனித நடத்தைகள், பண்புகள், சூழல், நிலைகள் போன்றவற்றை அறிந்து கொள்க.

- வகுப்பில் காண்பிக்கப்பட்ட மாதிரிப் படங்களைக் கொண்டு தலைப்பிற்குப் பொருத்த மான சித்திரங்களை வரைக.

- வர்ணம் தீட்டும் போது பல நுட்ப முறைகளையும் பொருத்தமான நிறங்களையும் பயன்படுத்துக.

- உங்கள் ஆசிரியர்களின் அறிவுறுத்தல்களையும், வழிகாட்டல்களையும் பெற்றுக் கொள்க.

- சித்திரங்களை வகுப்பில் காட்சிப்படுத்துவதற்கான ஆயத்தங்களைச் செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 1.0** : **சூழலுடன் சேர்ந்த விடயங்களைக் கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமாக வெளிப்படுத்துவர்.**

**தேர்ச்சி மட்டம் 1.2** : செயற்கைச் சூழலில் காணப்படும் தலைப்புக்களின் கீழ் கருத்து வெளிப்பாட்டுச் சித்திரங்களை வரைக.

**செயற்பாடு 1.2.1** : **"துக்ககரமான நிகழ்வு"**

**நேரம்** : 3 பாடவேளைகள்.

**தர உள்ளீடுகள்** :

- பல துக்ககரமான நிகழ்வுகளை சித்தரிக்கும் மாதிரிப் படங்கள் மாதிரி உருவங்கள்.
- இணைப்பு 1.2.2.1இல் அடங்கிய ஆய் செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்களின் பிரதிகள் போதியளவு.
- பல மனிதச் செயற்பாடுகளையும், மெய்நிலைகளையும் காண்பிக்கும் உருவங்கள்.
- பலநுட்ப முறைகளுக்கேற்ப பல ஊடங்களைப் பயன்படுத்தி ஆக்கப்பட்ட மாதிரிச் சித்திரங்கள்.
- வரைதற் தாள், பென்சில், பெஸ்டல், நீர் வர்ணம், போஸ்டர் வர்ணம், தூரிகை.

**கற்றல் கற்பித்தற் செயற்பாடு :**

**படி 1.2.2.1** :

- மாணவர் எதிர்நோக்கிய துக்ககரமான நிகழ்வுகளைப் பற்றி வினவுவதோடு, பாடத்துக்குள் பிரவேசிக்குக.

- பல துக்ககரமான நிகழ்வுகளை சித்திரிக்கும் மாதிரிச் சித்திரங்களைக் காண்பித்து தலைப்பில் அவதானம் செலுத்தும்படி செய்க.

- அவ்வாறான மேலும் பல துக்ககரமான முக்கிய நிகழ்வுகள் பற்றி கலந்துரையாடுக.

- துக்ககரமான சம்பவங்களின் போது காணக் கூடிய மனிதச் செயற்பாடுகள், நடத்தைகள் சூழல் நிலைகள் பற்றியும் கலந்துரையாடுக.

- கீழே காணப்படும் விடயங்களுடன் கலந்துரையாடுக.

> - மனித வாழ்க்கையில் பல துக்ககரமான நிகழ்வுகளை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும் போது.
> - அந்நிகழ்வுகளிலே பலவித மனித செயற்பாடுகள், நடத்தைகள் காணலாம் என்பது.
> - அவ்வாறான துக்ககரமான நிகழ்வுகளின் போது சூழலில் நிலைகளையும், சோடனைகளையும் சித்திரிக்கலாம் என்பது.

**(15 நிமிடங்கள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 1.2.2.2 :

- இணைப்பு 1.2.2.1 அடங்கிய ஆய்வு /செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்களை மாணவர்களுக்கு வழங்குக.
- சித்திரம் வரையத் தேவையான உபகரணங்களை மாணவர்களுக்கு வழங்குக.
- துக்ககரமான நிகழ்வுகளை சித்தரிக்கும் பல சித்திரங்கள், புகைப்படங்கள், உருவங்கள் போன்றவற்றின் மாதிரி அமைப்புக்களை மாணவர்களுக்கு காண்பிக்குக.
- துக்ககரமான நிகழ்வுக்கு பொருத்தமான பல மனிதனின் மெய்நிலைகளை ஒழுங்கிணைத்தலும், உகந்த வர்ணங் களைப் பயன்படுத்தலும் பற்றி அவதானம் செலுத்துக.
- பொருத்தமான நுட்பமுறைகளைப் பயன்படுத்தி துக்ககர மான நிகழ்வுகளைச் சித்தரிக்க வாய்ப்பு அளிக்குக.
- பல மாதிரிச் சித்திரங்களைக் காண்பித்து, அவற்றில் மனதைக் கவர்ந்த ஒரு நுட்பமுறைபை் பயன்படுத்தி ரேகை சித்திரத்தை வர்ணம் தீட்ட வழி நடத்துக.
- வரையப்பட்ட சித்திரங்களை வகுப்பில் காட்சிப்படுத்த ஒழுங்குகளை செய்க.

**(95 நிமிடங்கள்)**

படி 1.2.2.3 :

- மாணவர்களின் ஆக்கங்களை வகுப்பில் காண்பிக்கவும்.
- ஆக்கங்களை சுய மதிபபீடு செய்யச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய ஆக்கங்கள் பற்றி ஆக்கபூர்வமான கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குக.
- கீழே உள்ள விடயங்களைக் கலந்துரையாடுக.

> - துக்ககரமான நிகழ்வுகளை சித்தரிக்கும் பொழுது அதற்குப் பொருத்தமான மனிதச் செயற்பாடுகளை பயன்படுத்த வேண்டும் என்பது.
> - சூழலின் தன்மை, மனித உருவங்கள், போன்றவற்றை நுட்பமான முறைகளைப் பயன்படுத்தி வர்ணம் தீட்ட வேண்டும் என்பது.
> - பொருத்தமான வர்ணங்களைப் பயன்படுத்துவதால், துக்க கரமான நிகழ்வுகள் தெளிவாக வெளிப்படும் என்பது.
> - பயன்படுத்தப்படும் பல வர்ண ஊடகங்களுக்கு ஏற்ப, பல நுட்ப முறைகளையும் பயன்படுத்தலாம் என்பது.
> - மனித உருவங்களில் உணர்வுகளைத் தெளிவாக வெளிப் படுத்துவதால் சித்திரத்தின் கருத்து வெளிப்படும் தன்மை அதிகரிக்கும் என்பது.

**(10 நிமிடங்கள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீடு மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- துக்ககரமான நிகழ்வுகளைக் கூறுவர்.
- கருப்பொருளுக்குரிய உபகரணங்களையும், வர்ண உபயோகத்தையும் விளக்குவர்.
- அடிப்படைக் கோட்பாடுகளைப் பயன்படுத்தி சித்திரங்களை வரைவர்.
- ஆக்கத்தில் ஈடுபடும் போது பல நுட்ப முறைகளைச் செய்து பார்ப்பர்.
- மற்றவர்களது ஆக்கங்களை இரசிப்பர்.

**இணைப்பு 1.2.2.1**

## ஆய்வு / செயற்பாட்டுப் படிவம்.
## "துக்ககரமான நிகழ்வொன்று"

- வகுப்பில் காண்பிக்கப்பட்ட துக்ககரமான நிகழ்வுகளைக் கொண்ட மாதிரிச் சித்திரங்களை அவதானித்து, உங்களது அனுபவங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள்.

- பல துக்ககரமான நிகழ்வுகளுடன் தொடர்புடைய சம்பவங்கள், நடத்தைகள், உணர்ச்சிகள், வர்ண உபயோகம், சூழலின் நிலை போன்ற பண்புகளை இனங்காண்க.

- வகுப்பில் காண்பிக்கப்பட்ட மனிதனின் மெய்நிலைகள் அடங்கிய உருவப்படங்கள், மாதிரிச் சித்திரங்கள், போன்றவற்றை நோக்கி சித்திரங்களை வரைவதில் ஈடுபடுக.

- வர்ணம் தீட்டுவதற்காக பலநுட்ப முறைகளைப் பயன்படுத்துக.

- காண்பிக்கப்பட்ட சித்திரங்களை நோக்கி பொருத்தமான வர்ணங்களைப் பயன்படுத்துக.

- ஆக்கத்தில் ஈடுபடும் போது ஆசிரியரின் வழிகாட்டலைப் பெறுக.

- ஆக்கப்பட்டவற்றை வகுப்பில் காண்பிக்க ஆயத்தங்களைச் செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 1.0** : **இயற்கைச் சூழலுடன் சேர்ந்த விடயங்களை கருத்து வெளிப்பாட்டுடன் வெளிப்படுத்துவர்.**

**தேர்ச்சி மட்டம் 1.2** : செயற்கைச் சூழலுடன் சேர்ந்த விடயங்களைக் கருத்து வெளிப்பாட்டுடன் வெளிப்படுத்துவர்.

**செயற்பாடு 1.2.3** : **"பஸ் தரிப்பு நிலையம் அல்லது புகையிரத நிலையம்"**

**நேரம்** : 3 பாடவேளைகள்.

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 1.2.3.1இல் அடங்கும் ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்கள்.
- பஸ்தரிப்பு நிலையம், புகையிரத நிலையம் போன்ற வற்றுடன் தொடர்புடைய மாதிரி சித்திரங்கள்.
- மனிதனின் பல மெய் நிலைகளைக் காட்டும் உருவப் படங்கள்.
- வேறுபட்ட ஓவிய முறைகளையும், நுட்பங்களையும் கொண்டு வரையப்பட்ட மாதிரிச் சித்திரங்கள்

**கற்றல் கற்பித்தற் செயற்பாடு :**

**படி 1.2.3.1** :

- பஸ்தரிப்பு நிலையம், புகையிரத நிலையம் ஒன்றின் சுபாவம் பற்றி வினாவுவதோடு தலைப்புக்குள் பிரவேசிக்குக.

- பஸ்தரிப்பு நிலையம், புகையிரத நிலையம் போன்ற வற்றின் மாதிரிச்சித்திரங்களின் உள்ள விசேட பண்பு களை நோக்குக.

- பல அம்சங்களுடன் தொடர்புள்ள செயற்பாடுகளில் காணக்கூடிய மனிதனின் நிலைகள், சூழலில் நிலைகள் பற்றி வினவுக.

- கீழே காணப்படும் விடயங்களுடன் கலந்துரையாடுக.

| |
|---|
| • பஸ்தரிப்பு நிலையத்தில், புகையிரத நிலையத்தில் பல சம்பவங்களைக் காணலாம் என்பது.<br>• அவ்வாறான இடம் பரப்பரப்பாகக் காணப்படும் என்பது.<br>• பலவித கட்டடங்கள், வீதிகள் கொண்டதாக அவை காணப்படும் என்பது.<br>• பல மனித செயற்பாடுகளையும், சம்பவங்களையும் கொண்டதாக பஸ்தரிப்பு நிலையம், புகையிரத நிலையம் ஒன்றை, சிறப்பான முறையில் சித்தரிக் கலாம் என்பது.<br>• நாளாந்தப் போக்குவரத்துத் தேவைகளுடன் தொடர்பு பட்ட செயற்பாடுகள் அடங்கிய ஒரு சூழலை சித்தரிக் கலாம் என்பது. |

**(10 நிமிடங்கள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 1.2.3.2 :
- இணைப்பு 1.2.3.1 அடங்கிய ஆய்வு /செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்களை மாணவர்களுக்கு வழங்குக.
- மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- நிர்மாணங்களுக்குத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்கி வழிகாட்டுக.
- ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்த ஏற்பாடு செய்க.

படி 1.2.3.3 :
- காட்சிக்கு வைக்கப்பட்ட மாணவர்களது ஆக்கங்களை சுயமதிப்பீடு செய்யச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய ஆக்கங்கள் பற்றி ஆக்கபூர்வமான கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குக.
- கீழே உள்ள விடயங்களைக் கலந்துரையாடுக.

> - இயற்கைச் சூழலில் காண முடியாத செயற்கைப் பண்புகள், புகையித நிலையத்தில் அல்லது பஸ்தரிப்பு நிலையத்தில் காணலாம் என்பது.
> - பஸ் தரிப்பு நிலையத்திலும், புகையிரத நிலையத்திலும், காணப்படும் மனிதர்கள் பல செயற்பாடுகளில் ஈடுபட்டிருப்பர் என்பது.
> - சூழலிலுள்ள செயற்கை வடிவங்களை அர்த்தமுடன் பயன்படுத்தி, தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தின் தரத்தைக் கூட்டலாம் என்பது.

(15 நிமிடங்கள்)

## கணிப்பீடு மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- பஸ்தரிப்பு நிலையத்தில், புகையிரத நிலையத்தில் காணக் கூடிய நிகழ்வுகளைக் கூறுவர்.
- கருப்பொருளுக்குப் பொருத்தமான மனிதச் செயற்பாடுகளை விபரிப்பர்.
- அடிப்படைக் கோட்பாடுகளைப் பயன்படுத்தி சித்திரங்களை வரைவர்.
- பொறுமையாகவும் சிறப்பாகவும் செயலில் ஈடுபடுவர்.
- உபகரணங்களைச் சரியாகப் பயன்படுத்துவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பு 1.2.3.1

## ஆய்வு / செயற்பாட்டுப் படிவம்.
## "பஸ் தரிப்பு நிலையம், புகையிரத நிலையம்."

- வகுப்பில் காண்பிக்கும் புகையிரத நிலையத்தின், பஸ்தரிப்பு நிலையத்தின் பல சம்பவங்களை நன்றாக நோக்குக.

- தலைப்பையும் மனித உருவங்களின் செயற்பாடுகளையும் நன்றாக நோக்குக.

- செயற்கைச் சூழலில் காணக் கூடிய கட்டடங்கள், வாகனங்கள் போன்றவற்றின் வடிவங்களை நோக்குக.

- தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை வரைக.

- கீழேயுள்ள விடயத்தைக் கவனதிற் கொண்டு சித்திரத்தை வர்ணம் தீட்டுக.

- வர்ண உபயோகம், தூரதரிசனம், முப்பரிமாணம், தடிப்பம், சமநிலை பூர்த்தி செய்யப்பட்ட சித்திரங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 1.0** : **இயற்கைச் சூழலுடன் சேர்ந்த விடயங்களை கருத்து வெளிப்பாட்டுடன் வெளிப்படுத்துவர்.**

**தேர்ச்சி மட்டம் 1.2** : செயற்கைச் சூழலுடன் சேர்ந்த விடயங்களைக் கருத்து வெளிப்பாட்டுடன் வெளிப்படுத்துவர்.

**செயற்பாடு 1.2.4** : **"தொழிற்சாலை" யின் உள்ளே**

**நேரம்** : 2 பாடவேளைகள்.

**தர உள்ளீடுகள்** :
- இணைப்பு 1.2.4.1 உள்ளடக்கிய ஆய்வு / செயற்பாட்டு படிவத்தின் பிரதிகள்.
- தொழிற்சாலைக்குள் காணக் கூடிய காட்சிகள் உள்ள மாதிரிச் சித்திரங்கள்.
- வரைதற் தாள், பெஸ்டல், நீர்வர்ணம்.

**கற்றல் கற்பித்தற் செயற்பாடு :**

**படி 1.2.4.1** :

- தொழிற்சாலையொன்றுடன் தொடர்புடைய இயந்திரங்கள், உட்சுபாவம், சூழல்நிலை, செயற்பாடுகள் பற்றி வினவுவதுடன் பாடத்துக்குள் பிரவேசிக்குக.

- தொழிற்சாலை ஒன்றுக்குள் காணப்படும் காட்சிகள் அடங்கிய மாதிரிச் சித்திரங்களைக் காண்பிக்குக.

- தொழிற்சாலையொன்றைப் பார்வையிடச் சென்ற ஒரு சந்தர்ப்பத்தை நினைவுபடுத்துக.

- மாணவர்களுடைய அனுபவங்களுடன் தொழிற்சாலை ஒன்றில் நடைபெறும் இயந்திரங்களினதும், மனிதர்களினதும் செயற்பாடுகளையும், சூழல் நிலைகளையும் பற்றிக் கலந்துரையாடுக.

- கீழே காணப்படும் விடயங்களுடன் கலந்துரையாடுக.

> - தொழிற்சாலையொன்றில் இயற்கை சூழலைவிட முற்றிலும் மாறுபட்ட செயற்கை சூழலைக் காணலாம் என்பது.
> - தொழிற்சாலை ஒன்றுக்குள் வேலையில் ஈடுபட்டுள்ளவர் களில் பல மெய்நிலைகளை அவதானிக்கலாம் என்பது.
> - தொழிற்சாலையொன்றில் காணப்படும் பரபரப்பான சூழல் பல அசைவுகளையும், சந்தங்களையும் கொண்டது என்பது.
> - வடிவங்களை உபயோகித்து சோடனைகள் செய்யலாம் என்பது.

**(10 நிமிடங்கள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 1.2.4.2 :

- இணைப்பு 1.2.4.1 அடங்கிய ஆய்வு /செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்களை மாணவர்களுக்கு வழங்குக.
- தேவையான கருவிகளை மாணவர்களுக்கு வழங்குக.
- மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- நிறைவு செய்யப்பட்ட ஆக்கங்களை வகுப்பில் காட்சிப் படுத்த ஏற்பாடு செய்க.

**(15 நிமிடங்கள்)**

படி 1.2.4.3 :

- மாணவர்களின் ஆக்கங்களை வகுப்பில் காண்பிக்கவும்.
- ஆக்கங்களை சுய மதிப்பீடு செய்யச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய ஆக்கங்கள் பற்றி ஆக்கபூர்வமான கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குக.
- கீழே உள்ள விடயங்களைக் கலந்துரையாடுக.

> - தொழிற்சாலையொன்றில் பல இயந்திரங்களும், உதிரிப்பாகங்களும் இயங்குவதைக் காணலாம் என்பது.
> - மனிதர்களுக்கும், இயந்திரங்களுக்கும் இடையிலுள்ள தொழிற்பாடு உற்பத்தி தொழிற்பாட்டை நோக்கமாகக் கொண்டுள்ளது என்பது.
> - பங்களிப்பு, சமநிலை, தூரதரிசனம், போன்றவற்றின் மீது கவனம் செலுத்துவதால் தலைப்புக்குப் பொருத்தமான சிறந்த ஆக்கம் ஒன்றை உருவாக்கலாம் என்பது.

**(55 நிமிடங்கள்)**

## கணிப்பீடு மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- தொழிற்சாலை ஒன்றுக்குள் உற்பத்தித் தொழிற்பாட்டின் பல நிகழ்ச்சிகளைக் கூறுவர்.
- அவ்வாறான சூழலில் காணக் கூடியவற்றை சித்திரமாக வரையலாம் என்று ஏற்றுக் கொள்வர்.
- செயற்கைச் சூழலில் காணக் கூடிய மனிதனின் மெய்நிலைகளை சித்திரமாக நிர்மாணம் செய்வர்.
- மனிதர்களினதும், இயந்திரங்களினதும் செயற்பாடுகளின் வேறுபாட்டை விளங்கிக் கொள்வர்.
- நோக்குவதன் மூலம் காரணங்களை விளங்கிக் கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வு / செயற்பாட்டுப் படிவம்.
## "தொழிற்சாலை உள்ளே"

- வகுப்பில் காண்பிக்கப்பட்ட மாதிரிச் சித்திரங்களை நன்றாக நோக்குக.

- தொழிற்சாலையொன்றில் பணியாற்றும் பணியாளர்களின் மெய்நிலைகளை நன்றாக நோக்குக.

- ஆடை ஆணிகள், இயந்திரங்கள், உபகரணங்கள் போன்றவற்றின் சுபாவம் மீது கவனம் செலுத்துக.

- கீழேயுள்ள விடயத்தைக் கவனத்திற் கொண்டு தொழிற்சாலையொன்றை சித்திரமாக வரைக.
  - செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள மனிதனின் மெய்நிலைகள்.
  - பொருள்கள் இயந்திரங்கள் கருவிகள்
  - வினைத்திறன் மிக்க தன்மை.

- விரும்பிய வர்ண ஊடகத்தையும், நுட்பமுறைகளையும் பயன்படுத்தி சித்திரத்தை நிர்மாணம் செய்க.



4. S. P. C. 081055

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 1.0** : **இயற்கைச் சூழலுடன் சேர்ந்த விடயங்களை கருத்து வெளிப்பாட்டுடன் வெளிப்படுத்துவர்.**

**தேர்ச்சி மட்டம் 1.3** : தமக்குரிய பாணியில் சித்திரக் கோட்டுகளைப் பின்பற்றி சித்திரம் வரைவர்.

**செயற்பாடு 1.3.1** : "இயற்கை வனப்பு "

**நேரம்** : 3 பாடவேளைகள்.

**தர உள்ளீடுகள்** :
- இணைப்பு 1.3.1.1 உள்ளடக்கிய ஆய்வு / செயற்பாட்டு படிவத்தின் பிரதிகள்.
- கண்டிக் காலத்துச் சித்திரமாகிய திவ்ய (தெய்வீக) விலங்கு, தாவர(ஜீவி) நிர்ஜீவி வகையை கொண்டு நிர்மாணிகக்ப்பட்ட அலங்கார சித்திரங்களின் மாதிரிகளும் உருவப் படங்களும்.
- நிறந்தீட்டப்பட்ட கண்டிக் காலத்துக்கு பாரம்பரிய மாதிரி சித்திரங்கள்.
- இயற்கைச் சூழலை தமக்குரிய பாணியில் வரையப்பட்ட/ நிர்மாணிக்கப்பட்ட மாதிரிச் சித்திரங்கள்.
- வரைதற் தாள், பெஸ்டல், போஸ்டல் வர்ணம், நீர்வர்ணம், பென்சில் தூரிகை

**கற்றல் கற்பித்தற் செயற்பாடு :**

**படி 1.3.1.1** :
- கண்டிய பாரம்பரிய கலை நுட்பம் பயன்படுத்தி சூழலில் அழகை மையமாகக் கொண்டு வரையப்பட்ட மாதிரிச் சித்திரங்களை வகுப்பில் காண்பிக்குக.
- அச்சித்திரங்களில் காணக் கூடிய விசேட பண்புகளை வினவுவதுடன், பாடத்துக்குள் பிரவேசிக்குக.
- திவ்ய (தெய்வீக) விலங்கு, தாவர, நிர்ஜீவ்ய அலங்கார உருவப் படங்களை ஆதாரமாகக் கொண்டு மிகவும் எளிய முறையில், நுட்பமாக இயற்கை சூழலைக் காண்பிக்கப்பட்டுள்ள விதத்தை கலந்துரையாடுக.
- கீழே காணப்படும் விடயங்களுடன் கலந்துரையாடுக.

> - தத்ரூபமாகவும், நவீன பாங்குடனும் இயற்கையின் வனப்பை கலை அம்சத்துடன் காட்டலாம் என்பது.
> - இயற்கைச் சூழலிலுள்ள வடிவங்களை நுட்பமான முறையில் உருவாக்கப்பட்டிருப்பதை பாரம்பரிய சித்தரங்களில் காணக்கூடியது என்பது.
> - இயற்கையின் வனப்பை கண்ணுக்குத் தெரியாக உணர்ச்சிகளை மிகவும் எளிய கேத்திர கணித கோலங்களால் நுட்பமான முறையில் காண்பிக்கலாம் என்பது.

**(10 நிமிடங்கள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 1.3.1.2 :

- மாணவர்களைக் குழுக்களாக்கி இணைப்பு 1.3.1.1 அடங்கிய ஆய்வு /செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்களை மாணவர் களுக்கு வழங்குக.
- பாரம்பரிய மாதிரிச் சித்திரங்கள், அலங்காரங்களின் உருவப் படங்கள் நோக்குவதன் மூலம் காட்டின் வனப்பு சித்திரமாக வரையக் கூடியதை விளக்குக.
- திவ்ய (தெய்வீக) விலங்கு, தாவரம், நிர்ஜீவி வடிவங்களைக் கொண்டு காட்டின் வனப்பை கேத்திர கணித உபகரணங் களைப் பயன்படுத்தி கோலம், சந்தம் என்பன பேணும் விதத்தில் வரையக் செய்க.
- காண்பிக்கப்பட்ட பாரம்பரிய சித்திரங்களின் வர்ணங்களை யும் கோடுகள் கொண்டு அமைக்கப்பட்ட கோலங்களையும் உருவாக்கப் போதியளவு வழிகாட்டுக.
- நிறைவு செய்யப்பட்ட ஆக்கங்களை வகுப்பில் காட்சிப் படுத்த ஏற்பாடுகளை செய்க.

**(95 நிமிடங்கள்)**

படி 1.3.1.3 :

- மாணவர்கள் குழுக்களாகச் செய்த ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- ஆக்கங்களை சுய மதிப்பீடு செய்யச் சந்தர்ப்பம் வழங்குக.
- குழுக்களின் ஆக்கங்கள் பற்றி ஆக்கபூர்வமான கருத்துக் களை தெரிவிக்க வாய்ப்பளிக்குக.
- கீழே உள்ள விடயங்களைக் கலந்துரையாடுக.

> - நுட்பமான முறையில் இயற்கை சூழலின் வடிவங்களை கேத்திரகணித கோலத்துக்கு ஏற்புடயதாக ஒழுங்கமைக்கலாம் என்பது.
> - இயற்கையாக உள்ள சித்திரக் கோட்பாடுகள் நுட்பமான முறையில் காண்பிக்கையில் மாறுபடுகின்றன என்பது.
> - தூர தரிசனம், முப்பரிமாணம் போன்ற பண்புகள் குறை வாகப் பயன்படுத்தலாம் என்பது.
> - வர்ண சாயலைக் குறைத்து, தட்டையாகவும், நுட்பமான முறையிலும் இலகுவாக சித்திரங்களை வரையலாம் என்பது.
> - கருத்து வெளிப்படுத்துவதற்கு கோடுகள், உபயோகிக்கப் படும் விதம் முக்கியத்துவம் வாய்ந்தது என்பது.
> - நுட்பமான முறையில் வரையும் போது வெற்றிடத்தை நிறப்பொருள்கள், பூக்கள் அடங்கிய கோலங்களை இடுவதால் கலை உருவாக்கத்தின் சமநிலையைப் பேணலாம் என்பது.

**(10 நிமிடங்கள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிப்பீடு மதிப்பீட்டுக்குமான நியதிகள்**

- இயற்கைச் சூழலில் வடிவங்களை நுட்பமான சித்திரங்களை உருவாக்க பயன்படுத்தலாம் என்று விளங்கிக் கொள்வர்.
- பாரம்பரிய அலங்கார உருவங்கள் பற்றிய அறிவை பல நிர்மாண வேலைகளுக்காகப் பயன்படுத்துவர்.
- தமக்குரிய பாணியில் இயற்கை வனப்பை சித்திரமாக வரைவர்.
- வேறுபட்ட பாணியில் வரையப்பட்ட சித்திரங்களை இரசிப்பர்.
- குழு மனப்பாண்மையுடன் செயற்பாட்டில் ஈடுபடுவர்.

**இணைப்பு 1.2.4.1**

## ஆய்வு / செயற்பாட்டுப் படிவம்.
## "இயற்கை வனப்பு"

- வகுப்பில் காண்பிக்கப்படும் பாரம்பரிய நுட்பமுறையை அண்டிய இயற்கை வனப்பை சித்தரிக்கும் மாதிரிச் சித்திரங்களையும் உருவப் படங்களையும் ஒப்பிட்டளவில் நோக்குக.
- ஆசிரியர்களின் அறிவுறுத்தல்களுக்கேற்ப குழுக்களாகி தேவையான உபகரணங்களை பகிர்ந்து கொள்க.
- இயற்கைச் சூழலிலுள்ள சிக்கலான வடிவங்களை நுட்பமான முறையில் வெளிப்படுத்த கேத்திர கணித உபகரணங்களையும், கணித அறிவையும் பயன்படுத்துக.
- வரையும் போதும், வர்ணம் தீட்டும் போதும் இயற்கைத் தன்மையில் இருந்து விடுபட்டு தமக்குரிய பாணியைப் பின்பற்றுக.
- ரேகைகளை முழுமையாகக் பயன்படுத்தும் போதும் தட்டையாக வர்ணம் தீட்டும் போதும் அதிக கவனம் செலுத்துக.
- சித்திரத்தின் சமநிலையைப் பேணவும், இடைவெளிகளை நிரப்பவும் பொருள்களையும், பூக்களையும் கொண்ட கோலங்களைப் பயன்படுத்துக.
- குழு ஆக்கத்தின் போது ஆசிரியரின் அறிவுரைகளை போதியளவு பெற்றுக் கொள்க.
- பூர்த்தி செய்யப்பட்ட ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்த உரிய ஏற்பாடுகளைச் செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 1.0** : **இயற்கைச் சூழலுடன் சேர்ந்த விடயங்களை கருத்து வெளிப்பாட்டுடன் வெளிப்படுத்துவர்.**

**தேர்ச்சி மட்டம் 1.4** : கற்பனைத் தலைப்பின் கீழ் சித்திரம் வரைவர்.

**செயற்பாடு 1.4.1** : **"கற்பனை தலைப்பு"**

**நேரம்** : 3 பாடவேளைகள்.

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 1.4.11 அடங்கிய ஆய்வு செயற்பாடு அறிவுறுத்தல் படிவங்கள்.
- தேவதைக் கதைகள், நாட்டார் கதைகள் கொண்ட மாதிரிப் படங்களும், சித்திரங்களும்.
- பல நுட்ப முறைகளைப் பயன்படுத்தி நிறந்தீட்டப்பட்ட சித்திரங்கள்.
- தெய்வலோகக் கதைகள் காண்பிக்கப்படும் (C.D) இருவெட்டுக்களும், கணனிகளும்.
- ஓவியர்களால் வரையப்பட்ட கற்பனைத் தலைப்புக்களைக் கொண்ட மாதிரி சித்திரங்கள்.
- வரைதற் தாள், பெஸ்டல், போஸ்டல் வரணம், நீர்வர்ணம், பென்சில் தூரிகை

**கற்றல் கற்பித்தற் செயற்பாடு :**

**படி 1.4.1.1** :

- தேவதைக் கதைகள், நாட்டார் கதைகள், கண்ட கனவு களுடன் தொடர்புடைய மாதிரி சித்திரங்கள், இருவெட்டுகள் காண்பித்து பாடத்துக்குள் பிரவேசிக்குக.

- மாணவர்கள் கண்ட கனவுடன் தொடர்பான அனுபவங்கள் தேவதைக் கதைகள், நாட்டார் கதைகள் உடன் தொடர்பு டைய நினைவுகளை கலந்துரையாடுக.

- கற்பனையில் உருவாக்கக் கூடிய, நிறைவேற்ற முடியாத ஆசைகளையும், கண்ணுக்குத் தெரியாத ஆனால் மனதால் உணரக்கூடிய சம்பவங்களையும் கருப்பொருளாகக் கொண்ட சித்திரங்களை வரையச் செய்க.

- கீழே காணப்படும் விடயங்களுடன் கலந்துரையாடுக.

> - தேவலோகக் கதைகள், கனவு போன்றவற்றுடன் தொடர்பு டைய சம்பவங்கள் உண்மைக்குப் புறம்பான கற்பனை என்பது.
> - அவ்வாறான கற்பனை சம்பவங்கள், மாணவர் மனதில் சிறப்பான ஆக்கத்தினை உருவாக்கும் என்பது.
> - அவ்வாறான சம்பவங்களும், படங்களும் கற்பனை உணர் வுகளை வெளிப்படுத்தி சித்திரமாக வரையலாம் என்பது.

**(10 நிமிடங்கள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படி 1.4.1.2** :

- இணைப்பு 1.4.1.1இல் அடங்கிய ஆய்வ செயற்பாடு அறிவுறுத்தல் படிவங்களை மாணவருக்கு வழங்குக.
- சித்திரம் ஆக்கத்திற்குத் தேவையான உபகரணங்களை மாணவர்களுக்கு வழங்குக.
- கற்பனைக் கருப்பொருளை மையமாகக் கொண்டு ஓவியர்களால் வரையப்பட்ட ஓவியங்கள், தேவலோகக் கதைகள், ஆதாரமாகக் கொண்ட மாதிரிச் சித்திரங்களை மாணவர்களுக்கு காண்பிக்கவும்.
- வரையும் போதும் வர்ணம் தீட்டும் போதும் தேவையான அறிவுறுத்தல்களையும், வழிகாட்டல்களையும் வழங்குக.
- நிறைவு செய்யப்பட்ட ஆக்கங்களை வகுப்பில் காட்சிப் படுத்த ஏற்பாடுகளை செய்க.

**(90 நிமிடங்கள்)**

**படி 1.4.1.3** :

- மாணவர்கள் குழுக்களாகச் செய்த ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- குழுக்களின் ஆக்கங்கள் பற்றி ஆக்கபூர்வமான கருத்துக் களை தெரிவிக்க வாய்ப்பளிக்குக.
- கீழே உள்ள விடயங்களைக் கலந்துரையாடுக.

> - கற்பனைக் கருப்பொருளை மையமாகக் கொண்டு சித்திரம் வரையும் போது தேவலோகக் கதைகள், நாட்டார் கதைகள், கனவு போன்றவற்றுடன் பெறும் அனுபவங்களை சித்திரமாக வரையலாம் என்பது.
> - இயற்கைக்குப் புறம்பான கருத்துக்களை ஆக்கத்திறனுடன் வெளிப்படுத்த பல வடிவங்களையும், வர்ணங்களையும் பயன்படுத்தலாம் என்பது பற்றி
> - தூரதரிசனம், முப்பரிமாணம், பரிமாணம் போன்ற அடிப்படை கோட்பாடுகளைப் பயன்படுத்தத் தேவையில்லை என்பது பற்றி
> - கற்பனை சித்திரத்தை நிர்மாணிகக் பல வர்ணத் தொகுதிகளையும், பல நுட்ப முறைகளையும் பயன்படுத் தலாம் என்பது பற்றி.

**(15 நிமிடங்கள்)**

## கணிப்பீடு மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- கற்பனைக் கருப்பொருள்களைக் கூறுவர்.
- கற்பனைக் கருப்பொருளில் அடங்கிய சம்பவங்களை விளக்குவர்.
- கற்பனைக் கருப்பொருள் கொண்ட ஆக்கங்களை இரசிப்பர்.
- ஆக்கச் செயற்பாட்டுக்காக மனதைப் பயன்படுத்துவர்.
- கற்பனைக் கருப்பொருளில் அடங்கும் பல நிகழ்வுகளை உருவப் படங்கள், வர்ணங்கள் கொண்டு உருவாக்குவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வு / செயற்பாட்டுப் படிவம்.
## "கற்பனைக் கருப்பொருள் கொண்ட சித்திரம்"

- வகுப்பில் காண்பிக்கப்படும் கற்பனைக் கருப்பொருளை மையமாகக் கொண்ட தெய்வ லோகக் கதைகள், நாட்டார் கதைகள், கனவு போன்றவற்றுடன் தொடர்புடைய மாதிரிச் சித்திரங்களை நன்றாக நோக்குக.

- உண்மைக்குப் புறம்பான பல சம்பவங்களை சித்தரிக்கும் போது வடிவங்களையும், வர்ண பயன்பாட்டையும் உபயோகிக்கும் விதம் பற்றி கலந்துரையாடுக.

- காண்பிக்கப்படும் ஆவணங்களையும், மாதிரிச் சித்திரங்களையும், கனவு அனுபவங் களையும் கொண்டு கற்பனைக் கருப்பொருளை மையமாகக் கொண்டசித்திரங்களை வரைக.

- வடிவங்களையும், வர்ணங்களையும் பயன்படுத்தும் போது சித்திரத்தின் கோட்பாடு களையும், சித்திரங்களையும் தமது பாணிக்கு ஏற்ப பயன்படுத்துக.

- சித்திரம் நிர்மாணம் செய்யும் போது உங்கள் ஆசியரியரின் அறிவுறுத்தல்களையும், வழிகாட்டல்களையும் பெற்றுக் கொள்க.

- உங்கள் ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்த ஏற்பாடுகளைச் செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 2.0** : **சூழலில் உள்ள பொருள்களை ஒன்று சேர்த்து சித்திரத்தை ஆக்குவர்.**

**தேர்ச்சி மட்டம் 2.1** : கோடுகள், வர்ணங்கள் பயன்படுத்தி பாவனைப் பொருள்கள் அடங்கிய சித்திரங்களை வரைவர்.

**செயற்பாடு 2.1.1** : **"கோடுகளின் தன்மைகளைக் காட்டுவோம்."**

**நேரம்** : 1 பாடவேளைகள்.

**தர உள்ளீடுகள்** :

- 2.1.1 இல் உள்ள அறிவுறுத்தல் படிவங்கள் போதியளவு வழங்குதல்.
- காட்போட் பெட்டி 12"x8"x6' அளவில்
- இளநீர், பப்பாசி, மட்டை அகற்றிய தும்புடன் கொண்ட தேங்காய் ஒன்று
- வரைதல் பலகை, (பொருள்கள் வைக்க) வரைதற் தாள்கள், பென்சியல் 4B / 6B

**கற்றல் கற்பித்தற் செயற்பாடு :**

**படி 2.1.1.1** :

- காட்போட் பெட்டி, தேங்காய், பப்பாசிக்காய் அல்லது இளநீர் போன்வற்றை பார்வையிடச் சந்தர்ப்பம் வழங்குக.
- அப்பொருள்களின் வடிவம், பரிமாணம் போன்றவற்றை மாணவரிடம் கேட்டறிக.
- கீழேயுள்ள விடயங்கள் மீது கவனஞ் செலுத்தி கலந்துரை யாடுக.

> - நோக்குவதற்காக கொடுத்த பொருள்களின் தன்மை இயற்கையாகவே வேறுபடுகின்றது என்பது பற்றி.
> - அவற்றின் மேற்பரப்பின் வேறுபட்ட தன்மை பற்றி.
> - மேற்குறிப்பிட்டவையை நோக்கிக் கோடுகள் மூலம் அவற்றை வேறுபடுத்திக் காட்டலாம் என்று.

**(10 நிமிடங்கள்)**

**படி 2.1.1.2** :

- 2.1.1.1இல் உள்ள ஆய்வு அறிவுறுத்தல் படிவங்கள் மாணவர்களுக்கு வழங்குக.
- வரைதற் தாள், பென்சில் போன்றவற்றை மாணவருக்கு வழங்குக.
- அறிவுறுத்தல் படிவங்களுக்கேற்ப மாணவர்களை ஆக்கச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- அனைத்து ஆக்கங்களையும் வகுப்பில் காண்பிப்பதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்க.

**(60 நிமிடங்கள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீடு மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- பொருள்களின் வடிவங்கள் பற்றி விளக்குவர்.
- கோடுகளை பலவிதங்களில் உபயோகித்து பொருள்களின் வடிவம் பரிமாணம் பண்பு பற்றிய இயல்புகளை வெளிப்படுத்தலாம் என்பதை ஏற்றுக் கொள்வர்.
- பொருள் கூட்டத்தை கோடுகள் வரைந்து காண்பிப்பர்.
- கோட்பாடுகளைச் சரியாகப் பயன்படுத்துவர்.
- வரையப்பட்ட கோட்டு சித்திரங்களை இரசனைக்கு உட்படுத்துவர்.

**இணைப்பு 2.1.1.1**

### ஆய்வு / செயற்பாட்டுப் படிவம். "கோட்டின் மகிமையை வெளிப்படுத்துவோம்."

- உங்கள் முன்னால் உள்ள பொருள்களை உற்று நோக்குக.
- அவற்றின் பரிமாணம், ஒளித்தோற்றம், பண்புபள், முப்பரிமாணம் பற்றிக் கவனம் செலுத்துக.
- கவனம் செலுத்திய பின் கவனித்த விடயங்கள் நன்றாக தோன்றும் விதத்தல் பென்சிலை உபயோகித்து வரைக.
- வரையும் போது முப்பரிமாணம், ஒளித்தோற்றம், பண்பு வெளிப்படும் விதத்தில் செயற்படுக.
- உங்கள் ஆக்கங்களை வகுப்பில் காண்பிக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 2.0** : **சூழலில் உள்ள பொருள்களை ஒன்று சேர்த்து சித்திரத்தை ஆக்குவர்.**

**தேர்ச்சி மட்டம் 2.1** : கோடுகள், வர்ணங்கள் பயன்படுத்தி பாவனைப் பொருள்கள் அடங்கிய சித்திரங்களை வரைவர்.

**செயற்பாடு 2.1.2** : **" நிறங்களைப் பயன்படுத்தி பொருள்களுக்குரிய இயற்கைப் பண்புகளை வெளிப்படுத்துவோம்."**

**நேரம்** : 2 பாடவேளைகள்.

**தர உள்ளீடுகள்** :
- 2.2.1 க்குரிய அறிவுறுத்தல் படிவங்களின் போதியளவு வழங்குக.
- அகன்ற இலைகளைக் கொண்ட ஒரு தாவரம் (சேமை, கொகில, கனாஸ்)
- களிமண் அல்லது சீமெந்துச் சாடி ஒன்று (விட்டம் 8" அளவில்)
- வரைதல் பலகை, (பொருள்கள் வைக்க) வரைதற் தாள்கள், தூரிகைகள்
- நீர்/வர்ணம் பெஸ்டல்

**கற்றல் கற்பித்தற் செயற்பாடு :**

**படி 2.1.2.1** :
- வழங்கப்பட்ட அகன்ற இலைகள் கொண்ட பூச்சாடிகளை மாணவர்களுக்கு காண்பிக்கவும்.
- அவற்றின் வேறுபாடுகள் பற்றிய கருத்துக்களை வினாவுக.
- கீழேயுள்ள காரணங்கள் மீது கவனஞ் செலுத்தி கலந்துரையாடுக.

> - பொருள்கள் மீது ஒளி படர்வதால் அவற்றின் பண்புகள் நன்றாக வெளிப்படுகிறது என்பது.
> - பூச்சாடியிலும், தாவரத்திலும் உள்ள வெளித் தோற்றத் தின் பண்புகள் பற்றி
> - மேலுள்ளவற்றை நோக்குவதன் மூலம் அவற்றை சித்திரமாகக் காட்டலாம் என்பது பற்றி.

**(10 நிமிடங்கள்)**

படி 2.1.2.2 :
- போதியளவு அறிவுறுத்தல் படிவங்கள் மாணவர்களிடம் வழங்குக.
- வரைதற் தாள், தூரிகை, நீர் வர்ணம், பெஸ்டல் போன்ற வற்றை மாணவருக்கு வழங்குக.
- மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- அனைத்து ஆக்கங்களையும் மாணவர்களுக்கு பார்வையிடச் சந்தர்ப்பம் வழங்குக.

**(50 நிமிடங்கள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 2.1.2.3 :

- மாணவர்களது ஆக்கங்களை பார்வையிடச் சந்தர்ப்பம் வழங்குக.
- குறைபாடுகளைப் பூர்த்தி செய்யும்படியான அல்லது விருத்தி செய்யக்கூடியவாறு அமைந்த கருத்துக்களைத் தெரிவிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- கீழேயுள்ள விடயங்கள் மீது கவனத் செலுத்திக் கலந்துரையாடுக.

> - பொருள் மீது ஒளி படர்வதற்கு ஏற்ப அதன் முப்பரிமாணம், பண்பு, இருள், ஒளி போன்றவை வேறு படுகிறது என்பது.
> - தாவரத்தினதும், பூச்சாடியினதும் வெளிப்புறத் தோற்றம் வேறுபடுகிறது என்பது பற்றி
> - பொருள்களின் பண்புகளை நன்றாக வெளிப்படுத்த நிறங்கள் முக்கியத்துவம் வகிக்கின்றது என்பது.

**(20 நிமிடங்கள்)**

## கணிப்பீடு மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- பொருள்களின் அடிப்படை வடிவங்கள் பற்றிய அறிவு அவற்றை சித்திரமாக வரைய உதவும் என்பது பற்றி கூறுவர்.
- கோடுகளைப் போலவே வர்ணங்களும், அவற்றின் பண்புகளைக் காட்ட உதவும் என்பது பற்றி ஏற்றுக் கொள்வர்.
- வரையப்பட்ட சித்திரங்களை நிறந்தீட்டுவர்.
- கோட்பாடுகளைச் சரியாகப் பயன்படுத்துவர்.
- மற்றவர்களது ஆக்கங்களை இரசனைக்குட்படுத்துவர்.

**இணைப்பு 2.1.2.1**

## ஆய்வு / செயற்பாட்டுப் படிவம்.
## "பல வர்ணங்களின் திறன் வெளிப்படும் வகையில் பல பொருள்களின் பண்பாட்டை வெளிப்படுத்தல்."

- உங்கள் முன்னால் உள்ள பொருள்களை உற்று நோக்குக.
- அவற்றின் பரிமாணம், வெளிப்புறத் தோற்றம், மீது கவனம் செலுத்துக.
- கவனம் செலுத்திய விடயங்கள்ளைக் கொண்டு சித்திரம் வரைக.
- பெஸ்டல், நீர் வர்ணம், உபயோகித்து நிறந்தீட்டுக.
- உங்கள் ஆக்கங்களை வகுப்பில் காண்பிக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 2.0** : **சூழலில் உள்ள பொருள்களை ஒன்று சேர்த்து சித்திரத்தை ஆக்குவர்.**

**தேர்ச்சி மட்டம் 2.1** : கோடுகள், வர்ணங்கள் பயன்படுத்தி பாவனைப் பொருள்கள் அடங்கிய சித்திரங்களை வரைவர்.

**செயற்பாடு 2.1.3** : **" பல வடிவங்களைக் கொண்ட பொருள்களை சித்திரமாக வரைவோம்."**

**நேரம்** : 2 பாடவேளைகள்.

**தர உள்ளீடுகள்** :

- 2.2.3.1 இல் உள்ள ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்களின் பிரதிகள் போதியளவு.
- வெற்று ஜேம் போத்தல் (Jam Bottle)
- தடிப்பமுடைய இரு புத்தகங்கள். (12" x 8" x 1")
- சிறிய பந்து (டெனிஸ் / இறப்பர்)
- படம் வரையும் பலகை, (பொருள் வைப்பதற்காக)- (drawing board)/வரைதற் தாள்.
- பெஸ்டல் நீர் வணம்.
- தூரிகை (சேபல் மயிர் கொண்ட $N^0$-2, $N^0$-5 தூரிகை)

**கற்றல் கற்பித்தற் செயற்பாடு :**

**படி 2.1.3.1** :

- வெற்று ஜேம் போத்தல், தடிப்பமுடைய இரண்டு புத்தகங்கள்,
- அவற்றின் வேறுபாடுகள் பற்றிய கருத்துக்களை வினாவுக.

- கீழேயுள்ள காரணங்கள் மீது கவனஞ் செலுத்தி கலந்துரையாடுக.

> - நோக்குவதற்காக கொடுத்த பொருள்களின் பண்பு வடிவம் பரிமாணம் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றது என்பது.
> - பொருள்களின் மேற்பரப்பின் விசேட பண்புகள் இருப்பது என்பது பற்றி
> - பொருள்களை உற்று நோக்கி, கோடுகள் வர்ணங்கள் மூலம் சித்திரங்களை ஆக்கலாம் என்பது பற்றி

**(10 நிமிடங்கள்)**

**படி 2.1.3.2** :

- 2.1.3.2 இல் உள்ள ஆய்வு / அறிவுறுத்தல் படிவங்களை மாணவருக்கு வழங்குக.
- சித்திரம் வரைதற் தாள்கள், பென்சில், வர்ணங்கள், மாணவருக்கு வழங்குக.
- அனைத்து ஆக்கங்களையும் வகுப்பில் காண்பிக்கவும்.

**(50 நிமிடங்கள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 2.1.3.3 :

- மாணவர்களால் வரையப்பட்டவைகளை வகுப்பில் ஏனைய வர்களுக்கு காண்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- அவற்றின் திறமைகளைப் பாராட்டுவதோடு அவற்றின் விருத்தி செய்ய வேண்டியவற்றை எவ்வாறு எப்படி செய்ய வேண்டும் என்பது பற்றிய கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குக.
- கீழேயுள்ள விடயங்கள் மீது கவனம் செலுத்திக் கலந்துரை யாற்றுக.
- பொருள்களை நன்றாக உற்றுநோக்கி அவற்றின் வடிவங்கள் பற்றி அறிவைப் பெற்றுக் கொள்ளலாம் என்பது பற்றி.
- பொருள்கள் மீது படும் ஒளியின் வேறுபாட்டினால் அவற்றின் பண்புகள், முப்பரிமாணம், ஒளிபடும் தன்மை பற்றி அறியலாம் என்பது பற்றி

- கண்ணாடியால் ஆன பொருள்களில் ஊடுருவும் தன்மை பளபளக்கும் தன்மை காணக் கூடியதாக இருக்கும் என்பது.
- கோடுகள், வடிவங்கள், வர்ணங்கள் பலமுறைகளிலும் உரிய முறையிலும் பாவித்து சிறப்பான சித்திரம் ஒன்றை உருவாக்கலாம் என்பது.

**(20 நிமிடங்கள்)**

## கணிப்பீடு மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- பொருள்களின் வடிவங்கள் பற்றிக் கூறுவர்.
- கோடுகள் மூலமும் வர்ணங்கள் மூலமும் பொருள்களின் வடிவம், பரிமாணம், பண்பு போன்றவற்றை வெளிப்படுத்துவர்.
- பொருள் கூட்டத்தை கோடுகள் மூலம் வரைந்து நிறந்தீட்டுவர்.
- கோடுகளைச் சரியாகப் பயன்படுத்துவர்.
- வரையப்பட்ட சித்திரங்களை இரசிப்பர்.

**இணைப்பு 2.1.3.1**

## ஆய்வு / செயற்பாட்டுப் படிவம்
## "பல வடிவங்களைக் கொண்டு பொருள்களை சித்திரமாக வரைவோம்."

- முன்னால் வைக்கப்பட்டுள்ள பொருள்களை நன்றாக நோக்குக.
- அவற்றின் பரிமாணம், சுபாவம், முப்பரிமாணம் போன்ற பண்புகளை உற்று நோக்குக.
- பென்சிலைக் கொண்டு வரையப்பட்டதை நீர் வர்ணம் பெஸ்டல் வர்ணம் பயன்படுத்தி நிறந்தீட்டுக.
- உங்கள் ஆக்கங்களை வகுப்பில் காண்பிக்க உரிய ஏற்பாடுகளைச் செய்யவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 2.0** : **சூழலில் உள்ள பொருள்களை ஒன்று சேர்த்து சித்திரத்தை ஆக்குவர்.**

**தேர்ச்சி மட்டம் 2.1** : கோடுகள், வர்ணங்கள் பயன்படுத்தி பாவனைப் பொருள்கள் அடங்கிய சித்திரங்களை வரைவர்.

**செயற்பாடு 2.1.4** : **" பல வடிவங்களைக் கொண்ட பொருள்களை சித்திரமாக வரைவோம்."**

**நேரம்** : 2 பாடவேளைகள்.

**தர உள்ளீடுகள்** :

- 2.2.4.1இல் உள்ள ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்களின் பிரதிகள் போதியளவு.
- தனிநிறமுடைய துணித்துண்டு ( 1m நீளமுடைய)
- பிளாஸ்டிக் பூக்கொத்து, வரைதற் பலகை வரைதற் தாள், பென்சில்.
- சிறிய பந்து (டெனிஸ் / இறப்பர்)
- பெஸ்டல் நீர் வணம்.
- தூரிகை

**கற்றல் கற்பித்தற் செயற்பாடு :**

**படி 2.1.4.1** :

- துணித் துண்டையும், பிளாஸ்டிக் பூக்கொத்தையும் மாணவர் களுக்கு அவதானிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- அவற்றின் பண்புகள், சுபாவம் பற்றி மாணவர்களிடம் கேட்டறிக.
- கீழேயுள்ள விடயங்கள் மீது கவனஞ் செலுத்தி கலந்துரையாடுக.

| |
|---|
| • நோக்குவதற்காக கொடுத்த பொருள்களின் பண்புகள் வேறுபடுவது பற்றி.<br>• துணிகளிலுள்ள மடியும் தன்மை, பிளாஸ்டிக்கில் மேற்பரப்பில் உள்ள விசேட தன்மை பற்றி<br>• துணியிலுள்ள (மடியும் தன்மை) மடிப்பு, பிளாஸ்டிக் பூக்கொத்தில் உள்ள பண்பு போன்றவற்றை நோக்கி சித்திரம் வரையலாம் என்பது பற்றி |

**(10 நிமிடங்கள்)**

**படி 2.1.4.2** :

- 2.1.4.2 இல் உள்ள ஆய்வு / அறிவுறுத்தல் படிவங்களை மாணவர்களிடம் வழங்குக.
- வரைதற் தாள்கள், பென்சில், வர்ணங்கள், மாணவருக்கு வழங்குக.
- ஒழுங்கமைப்பில் உள்ளபடி பொருட்களை ஒழுங்குபடுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆய்வு செயற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கேற்ப மாணவர் களை ஆக்கத்தில் ஈடுபடுத்துக.
- அனைத்து ஆக்கங்களையும் வகுப்பில் காண்பிக்க ஏற்பாடு செய்க.

**(50 நிமிடங்கள்)**

படி 2.1.4.3 :

- மாணவர்கள் வரைந்த சித்திரங்களை வகுப்பில் காண்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.
- அவ்வாக்கங்களின் பண்புகள், குறைபாடுகள் என்பவற்றை காண்பித்து அவற்றை விருத்தி செய்யக் கூடிய வகையில் கருத்துக்களை வழங்க மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குக.
- கீழேயுள்ள விடயங்கள் மீது கவனம் செலுத்திக் கலந்துரை யாற்றுக.

> - துணித் துண்டையும், பூக்கொத்தையும் நன்றாக நோக்கி அவற்றின் வடிவங்கள் பண்புகள் பற்றிய அறிவைப் பெறலாம் என்பது பற்றி.
> - துணிகளில் உள்ள மடிப்புத் தன்மைக்கு ஏற்ப பல வடிவங்கள் வெளிப்படையாகும் என்பது
> - பிளாஸ்டிக் பூக்கொத்தில் கூட பல இயற்கைப் பண்புகள் வெளிப்படையாகின்றது என்பது.
> - கோடுகள், வடிவங்கள், வர்ணங்கள் பலவிதங்கள் உடையனவையாக இருந்த போதும் அவற்றை சரியான முறையில் பயன்படுத்தி அழகிய சித்திரம் ஒன்றை ஆக்கலாம் என்பது பற்றி

**(20 நிமிடங்கள்)**

**கணிப்பீடு மதிப்பீட்டுக்குமான நியதிகள்**

- துணிகளில் உள்ள மடிபடும் தன்மை பற்றி விளக்குவர்.
- கோடுகள், வர்ணங்கள் பயன்படுத்தி பல சுபாவங்கள் பண்புகள் வெளிப்படுத்த முடியும் என்பதை ஏற்றுக் கொள்வர்.
- துணித் துண்டையும், பூக்கொத்தையும் கோடுகள் மூலம் வரைந்து வர்ணம் தீட்டுவர்.
- கோட்பாடுகளை சரியான முறையில் பயன்படுத்துவர்.
- ஆக்கிய சித்திரங்களை இரசிப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வு / செயற்பாட்டுப் படிவம்.
## "பல வடிவங்களைக் கொண்ட பொருள்களை சித்திரமாக வரைவோம்."

- முன்னால் வைக்கப்பட்டுள்ள பொருள்களை நன்றாக நோக்குக.
- அவற்றின் பல பண்புகள் பற்றி அவதானம் செலுத்துக.
- பென்சிலைக் கொண்டு வரையப்பட்டதை சித்திரத்தை நீர் வர்ணம் பெஸ்டல் வர்ணம் மூலம் நிறந்தீட்டுக.
- உங்கள் ஆக்கத்தை வகுப்பில் காண்பிக்க உரிய ஏற்பாடுகளைச் செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 2.0** : **சூழலில் உள்ள பொருள்களை ஒன்று சேர்த்து சித்திரத்தை ஆக்குவர்.**

**தேர்ச்சி மட்டம் 2.1** : கோடுகள், வர்ணங்கள் பயன்படுத்தி பாவனைப் பொருள்கள் அடங்கிய சித்திரங்களை வரைவர்.

**செயற்பாடு 2.1.5** : **" கேத்திர கணித வடிவங்களை படமாக வரைவோம்."**

**நேரம்** : 2 பாடவேளைகள்.

**தர உள்ளீடுகள்** :
- 2.2.5.1இல் உள்ள ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்களின் பிரதிகள் போதியளவு.
- நான்முகி
- கோளம்
- சதுரமுகி
- வரைதற் பலகை (படம்)
- நீர் வர்ணம்

**கற்றல் கற்பித்தற் செயற்பாடு :**

**படி 2.1.5.1** :
- நான்முகி, கோளம், சதுரமுகி போன்றவற்றை நோக்க சந்தர்ப்பம் வழங்குக.
- அப்பொருள்களின் வடிவங்கள், பரிமாணங்கள் பற்றி மாணவரிடம் கேட்டறிக.
- கீழேயுள்ள விடயங்கள் மீது கவனஞ் செலுத்தி கலந்துரையாடுக.

> - நோக்கிய பொருள்களின் அடிப்படை வடிவங்கள் வேறு படுகின்றது என்பது.
> - பொருள்கள் மீது படும் ஒளியின் காரணமாக அவற்றின் அழகைக்காணலாம் என்பது.
> - மேலே உள்ள பண்புகளை நோக்கி சித்திரம் வரையலாம் என்பது.

**(10 நிமிடங்கள்)**

**படி 2.1.5.2** :
- 2.1.5.2 இல் உள்ள ஆய்வு / அறிவுறுத்தல் படிவங்களை மாணவர்களிடம் வழங்குக.
- வரைதற் தாள்கள், பென்சில், வர்ணங்கள், மாணவருக்கு வழங்குக.
- அனைத்து ஆக்கங்களையும் வகுப்பில் காண்பிக்க ஏற்பாடு செய்க.

**(50 நிமிடங்கள்)**



5. S. P. C. 081055

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அவ்வாக்கங்களின் பண்புகள், குறைபாடுகள் என்பவற்றை காண்பித்து அவற்றை விருத்தி செய்யக் கூடிய வகையில் கருத்துக்களை வழங்க மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குக.

- கீழேயுள்ள விடயங்கள் மீது கவனம் செலுத்திக் கலந்துரை யாற்றுக.

| |
|---|
| • பொருள்களை நன்றாக நோக்கி அவற்றின் கேத்திர கணித வடிவங்கள் பற்றிய அறிவை பெறலாம் என்பது.<br>• பொருள்கள் மீது ஒளி படுவதால் அவற்றின் முப்பரிமாணம், ஒளி, இருள் போன்றவை நன்றாக தெரிகிறது என்பது.<br>• ஒரு வர்ணத்தை மட்டும் பயன்படுத்தி சிறப்பாக சித்திரத்தை ஆக்கலாம் என்பது. |

**(20 நிமிடங்கள்)**

**கணிப்பீடு மதிப்பீட்டுக்குமான நியதிகள்**

- பொருள்களிலுள்ள கேத்திர கணித வடிவங்களை குறிப்பிடுவர்.
- ஒரு வர்ணத்தை மட்டும் பயன்படுத்தி முப்பரிமாணம், இருள், ஒளி போன்ற பண்புகளை காண்பிக்கலாம் என்று ஏற்றுக்கொள்வர்.
- கோடுகளால் வரையப்பட்ட சித்திரத்தை நிறம் தீட்டுவர்.
- கோட்பாடுகளை சரியாப் பயன்படுத்துவர்.
- மற்றைய ஆக்கங்களை பாராட்டுவர்.

**இணைப்பு 2.1.5.1**

## ஆய்வு / செயற்பாட்டுப் படிவம்.
## "பல வடிவங்களைக் கொண்ட பொருள்களை சித்திரமாக வரைவோம்."

- முன்னால் வைக்கப்பட்டுள்ள நான்முகி, கோளம், சதுரமுகி போன்றவற்றை நோக்குக.

- அவற்றின் பரிமாணம், தூர தரிசனப் பண்புகள், முப்பரிமாணப் பண்புகள் , ஒளி, இருள் போன்றவை மீது கவனம் செலுத்துக.

- 4B/போன்ற தூரிகைகளைப்பயன்படுத்தி அவற்றை வர்ணம் தீட்டுக.

- பென்சிலை உபயோகித்து அவற்றை வரைக. நீரவர்ணத்தில் ஒன்றை மட்டும் பயன்படுத்தி நிறம் தீட்டுக.

- உங்கள் ஆக்கங்களை வகுப்பில் காண்பிக்க ஏற்பாடுகளை செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 2.0** : **சூழலில் உள்ள பொருள்களை ஒன்று சேர்த்து சித்திரத்தை ஆக்குவர்.**

**தேர்ச்சி மட்டம் 2.1** : கோடுகள், வர்ணங்கள் பயன்படுத்தி பாவனைப் பொருள்கள் அடங்கிய சித்திரங்களை வரைவர்.

**செயற்பாடு 2.1.6** : **" கேத்திர கணித வடிவங்களும், இயற்கை வடிவங்களும் சேர்த்து சித்திரத்தை ஆக்குவோம்."**

**நேரம்** : 1 பாடவேளைகள்.

**தர உள்ளீடுகள்** :
- 2.2.6.1இல் உள்ள ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்களின் பிரதிகள் போதியளவு.
- கனவுரு வடிவம் கொண்ட ஒரு பெட்டி
- ஒரு கண்ணாடிக்குவளை (பெரியது)
- சிறிய இலைகளை உடைய ஒரு கிளை (குரோட்டன்)
- வரைதற் பலகை, வரைதற்தாள்
- தூரிகை 4B/6B/8B

**கற்றல் கற்பித்தற் செயற்பாடு :**

**படி 2.1.6.1** :
- பெட்டி, கிளை, குவளை போன்றவற்றை நோக்க சந்தர்ப்பம் வழங்குக.
- அவற்றின் அடிப்படை வடிவங்கள் பற்றி கேட்டறிக.
- கிளையின் இலையொழுங்கு பற்றிய கருத்துக்களை அறிக.
- கீழேயுள்ள விடயங்கள் மீது கவனஞ் செலுத்தி கலந்துரையாடுக.

| |
|---|
| • நோக்கக்கொடுத்த பொருள்களின் பல பண்புகளை காணலாம் என்பது.<br>• கிளையின் இலைகள் ஒழுங்கை அமைந்திருப்பது என்பது.<br>• கோடுகளைப் பயன்படுத்தி சித்திரத்தை உருவாக்கலாம் என்பது. |

**(10 நிமிடங்கள்)**

**படி 2.1.6.2** :
- 2.1.6.2 இல் உள்ள ஆய்வு / அறிவுறுத்தல் படிவங்களை மாணவர்களிடம் வழங்குக.
- பொருள்களை வரைதற் பலகையில் வைத்து மாணவர் களுக்கு நோக்க சந்தர்ப்பம் வழங்குக.
- கண்ணாடிக் குவளைக்குள் பூங்கொத்தை நிலைக்குத்தாக வைக்கவும்.
- ஆய்வு, அறிவுறுத்தற் படிவங்களுக்கு ஏற்ப மாணவர்களை ஆக்கத்தில் ஈடுபடுத்துக.

**படி 2.1.6.3** :
- மாணவர்கள் வரைந்த சித்திரங்களை வகுப்பில் காண்பிக்க சந்தர்ப்பம் வழங்குக. **(50 நிமிடங்கள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 2.1.6.4 :

- மாணவர்கள் வரைந்த சித்திரங்களை வகுப்பில் காண்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.
- அவ்வாக்கங்களின் பண்புகள், குறைபாடுகள் என்பவற்றை காண்பித்து அவற்றை விருத்தி செய்யக் கூடிய வகையில் கருத்துக்களை வழங்க மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குக.
- கீழேயுள்ள விடயங்கள் மீது கவனம் செலுத்திக் கலந்துரையாற்றுக.

> - பொருள்களை நோக்குவதால் அவற்றின் வடிவங்கள், பண்புகள் பற்றி அறிவைப் பெறலாம் என்பது.
> - கோடுகள் பல விதத்தில் பயன்படுத்தி பொருள்கள் மீது படும் ஒளி வேறுபாடுகளைக் காட்டலாம் என்பது.
> - கோடுகள் மூலம் சிறந்த ஒரு சித்திரத்தை ஆக்கலாம் என்பது.

**(20 நிமிடங்கள்)**

**கணிப்பீடு மதிப்பீட்டுக்குமான நியதிகள்**

- பொருள்களின் அடிப்படை வடிவங்களைப் பற்றி விபரித்துக் கூறுவர்.
- கோடுகளை பல விதத்தில் பயன்படுத்தி பொருள்களின் பரிமாணம், ஒளி, இருள், தூர தரிசனப் பண்பு போன்றவற்றை காட்டலாம் என்று கற்றுக்கொள்வர்.
- பொருள் கூட்டத்தை கோடுகளைப் பயன்படுத்தி வரைவர்.
- மற்றவர்களின் ஆக்கங்களை இரசிப்பர்.

**இணைப்பு 2.1.6.1**

## ஆய்வு / செயற்பாட்டுப் படிவம்.
## "பல வடிவங்களைக் கொண்ட பொருள்களை சித்திரமாக வரைவோம்."

- முன்னால் வைக்கப்பட்டுள்ள பொருள்களை நன்றாக நோக்குக.
- அவற்றின் பரிமாணம், தூர தரிசனப் பண்புகள், முப்பரிமாணப் பண்புகள் பற்றி கவனம் செலுத்துக.
- 4B/போன்ற தூரிகைகளைப் பயன்படுத்தி அவற்றை வர்ணம் தீட்டுக.
- உங்கள் ஆக்கங்களை வகுப்பில் காண்பிக்க ஏற்பாடுகளை செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 0.3** : **பாவனைக்கு பொருத்தமான வகையில் திட்டமிட்டு அலங்காரங்களை ஆக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.1** : பாரம்பரிய அலங்காரங்களைக் கொண்டு மனிதத் தேவைகளுக்காக அலங்கார ஆக்கங்களை செய்வர்.

**செயற்பாடு 3.1.1** : **"அமைப்புக்களைக் கொண்ட குடைகள்"**

**நேரம்** : 3 பாடவேளைகள்.

**தர உள்ளீடுகள்** :

- 3.1.1இல் அடங்கிய ஆய்வு செயற்பாட்டுப் பத்திரத்தின் பிரதிகள்.
- 3.1.1.2இல் உள்ள படங்கள் அடங்கிய பிரதிகள்.
- FABRIC PAINT துணிக்கு தீட்டப்படும் வர்ணம் கொண்டு நிறந்தீட்டப் பட்ட அலங்கார வடிவங்களாலான குடை யொன்று.
- பிரிஸ்டல் போட் ஒன்றில் குடையின் 1/8 வெட்டப்பட்ட Blocks போதியளவு (குழுவுக்கு ஒன்று வீதம்)
- பிறிஸ்டல் போட், பிரதியிடும் திசுத்தாள்கள் (TRACING PAPERS), டிமை கடதாசிகள்.

**கற்றல் கற்பித்தற் செயற்பாடு :**

**படி 3.1.1.1** :

- அலங்கார வடிவில் அமைக்கப்பட்ட குடையை திடீரென மாணவர் முன் விரிக்கவும்.
- அங்குள்ள அலங்காரங்கள் பற்றி மாணவர் கருத்துக்களை வினவுக.
- இவ்வாறான அலங்காரத்திற்கு எப்படிப்பட்ட வடிவங்களைப் பயன்படுத்தலாம் என்பது பற்றி மாணவரிடம் வினாவுக.
- வடிவத்திற்குப் பொருத்தமான அலங்காரங்களை அமைந் திருக்கும் விதம் பற்றி வினாவுக.
- கீழேயுள்ள கருததுக்கள் புலப்படும் விதத்தில் உரையாடுக.

> - அனேகமான ஒரு குடைச்சேலை 8 பகுதிகளைக் கொண்டுள்ளது என்பது.
> - குடைச் சேலையை அலங்காரிக்கும் போது பாரம்பரிய சித்திரங்களிலுள்ள மலர் வடிவங்கள் பயன்படுத்தலாம் என்பது.
> - Fabric Paint பயன்படுத்தி தனிப்பட்ட முறையில் பயன் படுத்தும் குடை கூட அலங்கரித்துக் கொள்ளலாம் என்பது பற்றி

**(10 நிமிடங்கள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 3.1.1.2 :
- மாதிரி வடிவத்தைக் காட்டுக.
- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாக்குக. (ஒரு குழுவுக்கு எட்டுபேர் பொருத்தமானது)
- 3.1.1.1இல் உள்ள ஆய்வுச் செயற்பாட்டு பத்திரங்களை குழுவுக்கு ஒன்று வீதம் வழங்குக.
- 3.1.1.2இல் உள்ள படங்களைக் காண்பிக்குக.
- அமைத்துக் கொண்ட பகுதிகளின் ஒன்று வீதம் குழுக்களுக் கிடையில் வழங்குக.
- மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- ஆக்கங்களை சமர்ப்பிக்க ஏற்பாடு செய்க.

**(90 நிமிடங்கள்)**

படி 3.1.1.3 :
- குழுக்களின் ஆக்கங்களை வகுப்பறையில் காண்பிக்கவும்.
- ஆக்கம் பற்றிய கருத்துக்களைத் தெரிவிக்க அதே குழுவிலுள்ள மாணவருக்கும், ஏனைய குழுக்களிலுள்ள மாணவருக்கும் சந்தர்ப்பம் வழங்குக.
- கீழே உள்ள விடயங்களைக் கருத்திற் கொண்டு கருத்துரை வழங்குக.

> - பாரம்பரிய அலங்காரங்களிலுள்ள பலவித பூக்களின் வடிவங்களைக் கொண்டு ஒரு அலங்காரம் செய்ய முடியும் என்பது.
> - பாரம்பரிய அலங்காரங்களிலுள்ள பூக்கள், தாவரங்கள் உள்ள அலங்காரங்கள் தாவரவியல் வகைக்குரியது என்பது.
> - பலவித அலங்கார முறைகளில் பலவற்றில் இருந்து மிகப் பொருத்தமானதை தெரிவு செய்ய வேண்டும் என்பது.
> - நிறங்களை அளவுடன் பயன்படுத்தி கலை அம்சம் பொருந்திய அலங்காரமொன்றை உருவாக்கலாம் என்பது.
> - வெளிக்கோடுகள் மூலம் அலங்காரதின் ஒழுங்கு நிறைவு என்பன பூர்த்தியாகும் என்பது,
> - அன்றாடத் தேவைகளுக்காகவும்,இவ்விதமான பொருள் அலங்காரங்களை அமைக்கலாம் என்பது.

**(20 நிமிடங்கள்)**

## கணிப்பீடு மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- பாரம்பரிய அலங்காரங்களைக் குறிப்பிடுவர்.
- பாரம்பரிய பூக்களைக் கொண்டு அலங்காரங்களை ஆக்கலாம் என்று ஏற்றுக் கொள்வர்.
- பாரம்பரிய பூக்களைக் கொண்டு குடைச் சேலைக்கு பொருத்தமான அலங்காரமொன்றை ஆக்குவர்.
- குழுபான்மையுடன் செயற்படுவர்.
- ஒரு செயற்பாட்டினைத் திறமையாக நிறைவு செய்ய ஒத்துழைப்பு வழங்கி ஒன்றாகச் செயற்படுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைப்பு 3.1.1.1**


## செயற்பாட்டுப்படிவம்.
## ''வேலைப்பாடுகளுடன் கொண்ட குடைகள்''

- உங்களுக்கு முன்னாலுள்ள குடையை நன்றாக நோக்குங்கள்.
- உங்களுக்குத் தரப்பட்ட Black ஐ சித்திரக் கடதாசியில் வரைந்து கொள்க.
- குழுவில் ஒவ்வொரு மாணவரும் ஒன்று வீதம் (வரைந்து கொள்க)
- பாரம்பரிய பூக்களைக் கொண்டு டிமைக் கடதாசியில் அலங்காரம் ஒன்றை அமைத்துக் கொள்க.
- ஆக்கத்தில், பாரம்பரிய பூக்களை ஆக்கபூர்வமாக இடலாம்.
- தேவைக்கேற்ப கேத்திர கணித கருவிகளை பயன்படுத்துக.
- குழுவிலுள்ள ஒவ்வொரு மாணவரும் வரைந்த உருவத்தில் மிகவும் பொருத்தமான உருவை தெரிவு செய்க.
- தெரிவு செய்யப்பட்ட மிகப் பொருத்தமான உருவை (TRACING PAPERS) பயன்படுத்தி முதல் வரைந்த வடிவத்தின் மீது பதித்துக் கொள்க.
- வரையப்பட்ட உருக்களில் மிகப் பொருத்தமான இரண்டு உருக்களை மட்டும் தெரிவு செய்க.( அலங்கார வடிவங்களால் ஆன 8 உருவங்கள் அவசியம்)
- நீங்கள் தெரிவு செய்யப்பட்ட நிறங்களில் குழுவிலுள்ள அனைத்து ஆக்கங்களையும் ஒரே விதமாக வர்ணம் தீட்டுக.
- வெளிக்கோடுகள் வரைவதன் மூலம் வடிவங்கள் தெளிவாகத் தெரியும்படி செய்க.
- நிறம் தீட்டியபின் குழுவிலுள்ள 8 வடிவங்களையும், குழுவுக்கு வழங்கப்பட்ட பிறிஸ்டல் போட்டின் மீது விரித்து வைக்கப்பட்ட குடையின் உருவம் வெளியாகும்படி பக்குவமாக ஒட்டுக.
- குழுவின் ஆக்கத்தை வகுப்பில் காட்சிப்படுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வரைபடப் படங்களின் படிவம்
## பாரம்பரிய பூ அலங்காரம்




*வரைபடம்: இலங்கை ஓவியம் - L.T.P. மஞ்சுசிறி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 0.3** : **பாவனைக்கு பொருத்தமான வகையில் திட்டமிட்டு அலங்காரங்களை ஆக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.1** : பாரம்பரிய அலங்காரங்களைக் கொண்டு மனிதத் தேவைகளுக்காக அலங்கார ஆக்கங்களை செய்வர்.

**செயற்பாடு 3.1.2** : **"மிருகங்களின் உருவங்களைப் பயன்படுத்தி சாரம் (லுங்கி) ஒன்றினை அலங்கரிப்போம், நிர்மாணிப்போம்."**

**நேரம்** : 2 பாடவேளைகள்.

**தர உள்ளீடுகள்** :

- 3.1.2.1இன் ஆய்வுப்படிவம் / செயற்பாட்டுப்படிவம்
- 3.1.2.2இன் உருவப் படிவம்.
- மனித உருவங்களை கரை அலங்காரமாகக்கொண்ட சாரம்.
- நீர்வர்ணம், தூரிகை, வரைதற்தாள், அச்சுத்தாள், டிமைத்தாள்.

**கற்றல் கற்பித்தற் செயற்பாடு :**

**படி 3.1.2.1** :

- மனித உருவங்களை (பொம்மைகளை) கரை அலங்காரமாகக் கொண்ட சாரத்தினை மாணவர்களுக்கு காட்சிப்படுத்துக.

- சாரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள அலங்காரங்கள் தொடர்பாக வினாவுக.

- கீழ்வரும் விடயங்களுடன் கலந்துரையாடுக.

> - கரை அலங்காரம் என்பது ஆக்கமொன்றின் (Boarder) ஓரத்தில் பயன்படுத்தப்படும் அலங்காரமாகும்.
> - கரை அலங்காரங்களை ஆண்கள், பெண்கள் சிறுவர் அணியும் ஆடைகள், மேசை விரிப்பு, தளவிரிப்பு என்ப வற்றின் ஓரங்களை (Boarder) அலங்கரிப்பதற்கு பயன்படுத்த முடியும்.
>   - பாவனையின் தேவைக்கு ஏற்றவாறு மிருகங்களின் உருவங்களை பயன்படுத்த முடியும்.
>   - பாரம்பரிய அலங்காரங்களில் காணப்படும் விலங்கு உருவங்களை கரை அலங்காரங்களுக்குப் பயன்படுத்த முடியும்.
>   - வர்ணங்களை அளவாக மிருக உருவங்களுக்குப் பயன்படுத்தி அழகான கரை அலங்காரத்தினை அமைக்க முடியும்.

**(10 நிமிடங்கள்)**

**படி 3.1.2.2** :

- இணைப்பு 3.1.1.1 ஆய்வுப் படிவம், செயற்பாட்டுப் படிவத்தினை மாணவர்களுக்கு வழங்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இணைப்பு 3.1.1.2ற்குரிய உருவப்படத்தினை காட்சிப்படுத்துக.
- தேவையான உபகரணங்களை மாணவர்களுக்கு வழங்குக.
- மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- உரிய நேரத்தில் செயற்பாட்டைப் பூரணப்படுத்த மாணவர் களை வழிப்படுத்துக.
- மாணவர்களது ஆக்கங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்த ஒழுங்கு செய்க.

**(50 நிமிடங்கள்)**

**படி 3.1.2.3** :

- மாணவர்களது ஆகீகங்களை வகுப்பறையில் காட்சிப் படுத்துக.
- அவ்வாக்கங்களை மாணவர்கள் சுயமதிப்பீடு செய்ய சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய மாணவர்களது ஆக்கங்களை மதிப்பீடு செய்யச் சந்தர்ப்பம் வழங்குக.
- விருத்தி செய்வது தொடர்பாக தமக்கிடையே கருத்து வழங்க சந்தர்ப்பம் வழங்குக.
- கீழ் காணப்படும் கருத்துக்களுடன் கருத்துரை வழங்குக.

> - அலங்காரப் பகுதியென்பது முழு அலங்காரத்திலும் தொடர்ந்துவரும் பிரதான பகுதியாகும்.
> - அலங்காரங்களை அமைக்கும் போது பல அலங்காரங் களை உருவாக்கி அதில் மிகப் பொருத்தமானதையே தெரிவு செய்து பயன்படுத்தல் வேண்டும்.
> - தெரிவு செய்த பாரம்பரிய மிருக உருவங்களின் அலங்காரங்களை பிரதி செய்யும் போது பிரதி செய்யும் தாளை முறையாக பாவித்து வரைதற் தாளில் சரியாக பிரதிசெய்துகொள்ள வேண்டும்.
> - அலங்காரத்திற்குப் பொருத்தமான வகையில் அச்செடுத்த பகுதியை முறையாக விரிவுசெய்து தொடரவேண்டும்.
> - பொருத்தமான மாணவர்களை தெரிவு செய்ய வேண்டும்.
> - அலங்காரங்களை முறையாக அழகாக வர்ணந்தீட்டல் வேண்டும். உரிய நேரத்தினுள் ஆக்கத்தினை பூரணப் படுத்தல் வேண்டும்.

**(60 நிமிடங்கள்)**

## கணிப்பீடு மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- பாரம்பரிய மிருக உருவங்களைப் பயன்படுத்தி ஒரு அலங்காரப் பகுதியை அமைக்க முடியும் என ஏற்றுக் கொள்வர்.
- அச்சுத்தாளைப் (TRACING PAPERS) பயன்படுத்தி பிழையின்றி அச்சுப் பதித்தல் மூலம் அலங்காரங்களை அமைப்பர்.
- கொடுக்கப்பட்டுள்ள, வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை சரியாக பின்பற்றி ஆக்கச் செயற்பாட்டில் ஈடுபடுவர்.
- தேவைக்கேற்றவிதமான அலங்காரங்களைப் பயன்படுத்திக் கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## அறிவுறுத்தல்படிவம்/ செயற்பாட்டுப்படிவம். "மிருகங்களின் உருவங்களைப் பயன்படுத்தி சாரம் (லுங்கி) ஒன்றினை அலங்கரிப்போம், நிர்மாணிப்போம்."

- ஆசிரியர்களினால் காட்சிப்படுத்தப்பட்ட பாரம்பரிய அலங்காரங்களில் காணப்படும் மிருக உருவங்களைக் கொண்ட அலங்காரப் படிவங்களை ஆராய்க.
- டிமை கடதாசி (Drawing Paper )யைப் பயன்படுத்தி அலங்காரங்கள் சிலவற்றை உருவாக்குக.
- உருவாக்கப்பட்ட அலங்காரப் பகுதிகளில் சாரத்திற்குப் பொருத்தமானது எனத் தெரிவு செய்ததை அச்சுத்தாளினைப் பயன்படுத்தி வரைந்து கொள்க.
- அச்சுத்தாளில் வரையப்பட்ட அலங்கார உருவை வரைதாளில் சாரத்தின் கரைக்குப் பொருத்தமாக வரைந்து கொள்க.
- பொருத்தமான நான்கு (4) வர்ணங்களைத் தெரிவு செய்க.
- வர்ணங்களைத் தயார் செய்யும் போது நீரைக் குறைவாகப் பயளன்படுத்தி சிறிய முனையுள்ள தூரிகை மூலம் வெளிக் கோடுகளை வரைந்து அலங்காரப்படுத்துக.
- ஆக்கத்தினை உருவாக்கும் போது நேர்த்தியான செயற்பாட்டிற்கு (Neatness) முக்கியத்துவம் வழங்குக.
- ஆக்கங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்த ஒழுங்கு செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வரைபடப் படங்களின் படிவம்
## பாரம்பரிய மிருக உவங்கள்




*வரைபடம்: இலங்கை ஓவியம் - L.T.P. மஞ்சுசிறி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**வரைபடம்: இலங்கை ஓவியம் - *L.T.P.* மஞ்சுசிறி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 0.3** : **பாவனைக்கு பொருத்தமான வகையில் திட்டமிட்டு அலங்காரங்களை ஆக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.1** : பாரம்பரிய அலங்காரங்களைக் கொண்டு மனிதத் தேவைகளுக்காக அலங்கார ஆக்கங்களை செய்வர்.

**செயற்பாடு 3.1.3** : **"உடலுக்குச் சுகமானதும் கண்ணுக்கு கவர்ச்சியானதுமான வர்ணங்களைக் கொண்ட குஸன் கவர்" (Kushion Cover)**

**நேரம்** : 2 பாடவேளைகள்.

**தர உள்ளீடுகள்** :
- இணைப்பு 3.1.3.1இல் அடங்கிய ஆய்வுப்படிவம் / செயற்பாட்டுப்படிவம்
- இணைப்பு 3.1.3.2இல அடங்கிய உருவப் படிவம்.
- கேத்திர கணித உபகரணங்கள்.
- வரைதாள், அச்சுப் பதிப்புத் தாள்
- நீர்வர்ணம், தூரிகை, பெஸ்ரல் வர்ணம்.

**கற்றல் கற்பித்தற் செயற்பாடு :**

**படி 3.1.3.1** :
- உருண்டை வடிவமான நாடாக்களால் கட்டப்பட்ட அலங்கார மான குஷன் கவரினை மாணவருக்குக் காட்சிப்படுத்துங்கள்
- அதனைப் பற்றிக் கலந்துரையாடி அதனை அடையாளம் காணும் சந்தர்பப்த்தினை ஏற்படுத்துக.
- சில வினாடிகள் சுருள் செய்து வைத்திருந்த குஷன் கவரை விரித்துக் காட்டுக.
- கீழ்வரும் விடயங்களுடன் கலந்துரையாடுக.

> - அமர்ந்திருப்பதற்கும், உறங்குவதற்கும் சுகத்தை ஏற்படுத் தும் ஓர் அணைக்கு உறையாக காணப்படுகின்றது.
> - பல்வேறு வகையான நுட்பமுறைகளில் அலங்காரம் செய்வதனூடாக அதன் பெறுமதியை அதிகரிக்க முடியும்.
> - குஷன் கவரினை அலங்கரிப்பதற்கு பல்வேறு வகையான பாரம்பரிய அலங்கார முறைகளை பயன்படுத்த முடியும்.
> - வரைதல் கடதாசியில் மாதிரி குஷன் கவரினை வரைந்து கொள்ள முடியும்.
> - இவ்வாறான ஆக்கங்களை அன்றாட வீட்டுப் பாவனைக்கு பயன்படுத்திக் கொள்ள முடியும்.

**(20 நிமிடங்கள்)**

**படி 3.1.3.2** :
- இணைப்பு 3.1.3.1 இல் தரப்பட்டுள்ள ஆய்வுப் படிவம், செயற்பாட்டுப் படிவம்
- இணைப்பு 3.1.3.2 இல் தரப்பட்டுள்ள அலங்கார உருவங்கள் என்பவற்றை மாணவருக்கு வழங்குக / காட்சிப்படுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வரைதாள், டிமைன் கடதாசி, அச்சுத்தாள், வர்ணங்கள், பென்சில் என்பவற்றை மாணவர்களுக்கு வழங்குக.
- மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- மாணவர்களது ஆக்கங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்த ஒழுங்கு செய்க.

**(40 நிமிடங்கள்)**

படி 3.1.3.3 :

- மாணவர் ஆக்கங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்துக.
- சுயஆக்கங்கள் குறித்து கருத்துத் தெரிவிப்பதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பளியுங்கள்.
- மேம்படுத்த வேண்டிய அம்சங்கள் குறித்து மாணவருடன் கலந்துரையாடி ஆலோசனைகளை வழங்குங்கள்.
- கீழ் காணப்படும் விடயங்கள் வெளிப்படுமாறு உரையாடலை நடத்துங்கள்.

> - அலங்காரத்திற்கு பல்வேறு வகையான அலங்கார வடிவங்களை வரைந்து அதிலிருந்து ஒன்றைத் தெரிவு செய்ய முடியும்.
> - உறையின் வடிவத்திற்கு பொருந்தும் வகையில் அலங்காரம் செய்ய வேண்டும்.
> - அலங்காரத்திற்கு பயன்படுத்தவிருக்கும் அலங்காரங்கள் தெய்வீக (திவ்ய) நிர்ஜீவி வகையுள் அடங்குவனவாக இருத்தல் வேண்டும்.
> - உறைக்கு பயன்படுத்தும் அலங்காரங்களாக பூக்கள், மிருக வடிவங்கள் என்பவற்றையும் பயன்படுத்த முடியும்.
> - தெரிவு செய்த வடிவத்தை உறைக்குப் பொருத்தமான முறையில் திட்டமிட்டு அமைத்துக் கொள்ள வேண்டும்.
> - பிரதி செய்வதற்கு பொருத்தமான கடதாசியைப்பயன் படுத்துவதன் மூலம் சிறப்பான பிரதியைப் பெற்றுக் கொள்ள முடியும்.
> - சிறந்த வடிவமைப்பையும் வெளிப்பாட்டையும் பெற்றுக் கொள்ள முதல் நிலை வர்ணங்களுடன் 2ஆம் நிலை வர்ணங்களையும் பயன்படுத்த முடியும்.
> - குறிப்பிட்ட நேரத்தினுள் செயற்பாட்டை வெற்றிகரமாக செயற்படுத்துக.
> - சிறந்த ஆக்கத்திற்கு கேத்திர கணித உபகரணங்கள் பயன்படுத்தலும் அவசியமாகும்.

**(20 நிமிடங்கள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீடு மதிப்பீட்டுப் பிரமாணங்கள்

- பிரதான 2ஆம் நிலை வர்ணங்களைப் பெயரிடுவர்.
- பாரம்பரிய அலங்காரத்தினூடாக உறைக்கு பொருத்தமான ஆக்கத்தை உருவாக்க முடியும் என்பதை ஏற்றுக் கொள்வர்.
- முறையாகவும், தூய்மையாகவும் வடிவங்களை வரைந்து அலங்காரப்படுத்துவர்.
- அறிவுறுத்தல்களை சரியாக புரிந்து அதற்கேற்ப செயற்படுவர்.
- குறிப்பிட்ட நேரத்தினுள் செயற்பாட்டைப் பூரணப்படுத்துவர்.

**இணைப்பு 3.1.3.1**

### ஆய்வுப்படிவம் / செயற்பாட்டுப்படிவம். "உடலுக்குச் சுகமானதும் கண்ணுக்கு கவர்ச்சியானதுமான வர்ணங்களைக் கொண்ட குஸன் கவர்" (Kushion Cover)"

- வகுப்பறையில் காட்சிபப்டுத்தப்பட்ட ஆக்கத்தினை நன்கு அவதானித்து வடிவத்தை அமைக்கும் முறையினை கண்டுகொள்க.
- பிரதிசெய்யும் தாளினையும், கேத்திர கணித உபகரணங்களையும் தேவைக்கேற்ப பயன்படுத்துக.
- வரைதற் தாளில் மாதிரி குஷன் கவரினை வரைந்து கொள்க.
- இணைப்பு 3.1.3.2 இல் தரப்பட்டுள்ள உருக்களின் ஊடாக பொருத்தமான வகையில் வடிவமைப்பை அமைத்துக் கொள்க.
- அதில் சிறந்ததை தெரிவு செய்து கொள்க.
- வரைதற் தாளில் அவ்வலங்காரத்தினைப் பிரதி செய்து கொள்க.
- பொருத்தமான வர்ண ஊடகத்தினை தெரிவு செய்க.
- முதல் வர்ணம், 2ஆம் நிலை வர்ணங்கள் என்பவற்றில் பொருத்தமான நான்கு (4) வர்ணங்களைத் தெரிவு செய்து வர்ணம் தீட்டுக.
- உரிய முறையில் வெளிக்கோடுகளை வரைவதன் ஊடாக ஆக்கத்தின் அலங்கரிப்பை மேம்படுத்துக.
- ஒழுங்கு முறையாகவும், தூய்மையாகவும் ஆக்கங்கள் காணப்பட வேண்டும்.
- நிறைவு செய்த ஆக்கங்களை காட்சிப்படுத்த ஒழுங்கு செய்க.




6. S. P. C. 081055


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரைபடப் படங்களின் படிவம்
## பாரம்பரிய அலங்கார வடிவங்கள்.

தெய்வீக அலங்காரங்கள்.









பஞ்சநாரி கலசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவநாரி குஞ்சரம்





*வரைபடம்: பாரம்பரிய சிங்கள அலங்காரம் - எஸ்.பி. சாள்ஸ்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 0.3** : **பாவனைக்கு பொருத்தமான வகையில் திட்டமிட்டு அலங்காரங்களை ஆக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.2** : அமைக்கப்பட்ட பொருள்களின் வடிவங்களைப் பயன்படுத்தி ஆக்கத்திறன் கொண்ட திட்டங்களையும், அலங்காரங்களையும் செய்வர்.

**செயற்பாடு 3.2.1** : **"எறியப்பட்டதை - மீளப் பெறுவோம்."**
**"மெருகூட்டுவோம் - பயன்படுத்துவோம்."**

**நேரம்** : 3 பாடவேளைகள்.

**தர உள்ளீடுகள்** :

- 3.2.1.1 இல் உள்ள ஆய்வு செயற்பாட்டு அறிவித்தல் படிவங்களின் பிரதிகள் போதியளவு.
- பல குறியீடுகள் பயன்படுத்தி அழகுபடுத்தப்பட்ட மாதிரிப் பாத்திரங்கள் பலவும் ஒரு பக்கம் மட்டும் அழகு படுத்தப்பட்ட அகற்பபட்ட அல்லது வீசப்பட்ட ஒரு பாத்திரம்.
- லெக்கர், இமல்ஷன், பெனர் வர்ணம், தூரிகை, சாயம் டிமை கடதாசி, வரைதற் தாள்கள்

**கற்றல் கற்பித்தற் செயற்பாடு :**

**படி 3.2.1.1** :

- ஒரு பக்கம் மட்டும் அலங்கரிக்கப்பட்ட பாத்திரத்தின் அலங்கரிக்கப்படாத பகுதியை முதலில் மாணவர்களுக்கு காண்பிக்க. பின்பு சடுதியாக அலங்கரிக்கப்பட்ட பகுதியையும் காண்பிக்குக.
- அவ்வாக்கம் பற்றி மாணவர்களிடம் கருத்துக்களை வினவுக.
- கீழேயுள்ள காரணங்கள் மீது கவனஞ் செலுத்திக் கலந்துரையாடுக.

> - வீசப்படும் ஒரு பொருளின் அழகுபடுத்திய பின் பயனுள்ள பொருளாக மாற்றலாம்.
> - பல குறியீடுகளைப் பயன்படுத்தி பொருளை அழகாக அலங்கரித்துக் கொள்ளலாம்.
> - அவ்வாறான பொருலொன்று பல்வேறு தேவைகளுக்காக பயன்படுத்தலாம்.

**(10 நிமிடங்கள்)**

**படி 3.2.1.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களைக் குழுக்களாக்குக.
- 3.2.11 உள்ள ஆய்வு செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்களின் பிரதிகளை மாணவர்களுக்கு இடையில் பகிர்ந்து கொடுக்கவும்.
- செயற்பாட்டுக்குத் தேவையான பொருள்கள் கருவிகள் குழுக்களுக்கு இடையில் வழங்குக.
- மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- மாணவர்களது ஆக்கங்களை சமர்ப்பிக்க ஏற்பாடுகளைச் செய்க.

**(90 நிமிடங்கள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 3.2.1.3 :

- குழுக்களின் ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குக.
- மற்றைய குழுக்களின் ஆக்கங்களை மதிப்பிடவும், அவற்றை மேலும் மெருகூட்டக் கூடியவாறும் அமைந்த கருத்துகளை தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்குக.
- கீழே உள்ள காரணங்கள் மீது கவனம் செலுத்தி கலந்துரையாடுக.

> - குறியீடுகள் வரையும் போது பொருள்களின் பின்னணி வர்ணங்கள் நன்றாக உலர்ந்து இருக்க வேண்டும்.
> - அலங்காரச் செய்யப் பயன்படுத்தும் பொருளின் மேற்பரப்புக்கு பொருத்தமான அலங்காரங்களைப் பயன்படுத்த வேண்டும்.
> - குறியீடுகள் பயன்படுத்துகையில் சமநிலை பேணப்படல் முக்கியம்.
> - எதிர் வர்ணங்களை தெரிவு செய்து வேறுபாட்டை காட்டலாம்.
> - உங்களது ஆக்கம் ஒழுங்காக, குறிப்பிட்ட காலத்துக்குள் செம்மையாக முடிக்க வேண்டும் என்பது.

**(20 நிமிடங்கள்)**

## கணிப்பீடு மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- எதிர் வர்ணங்களைக் குறிப்பிடுவர்.
- பிறருடன் கருத்துக்களை மதித்து குறியீடுகளை தெரிவு செய்வர்.
- பல குறியீடுகளைப் பயன்படுத்தி வீசப்படும் ஒரு பொருளை அலங்கரிப்பர்.
- வீசப்படும் பொருள் பயனுள்ள விதத்தில் பயன்படுத்துவர்.
- மிக்க அமைதியாகச் செயற்படுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வு / செயற்பாட்டுப் படிவம்.
## "எறியப்பட்டதை - மீளப் பெறுவோம்."
## "மெருகூட்டுவோம் - பயன்படுத்துவோம்."

- உமக்கு வழங்கப்படும் மாதிரி மீது அவதானம் செலுத்துக.
- உமக்குக் கிடைத்த பொருளின் பின்னணிக்காக பொருத்தமான ஒரு வர்ணத்தைத் தெரிவு செய்து உலர விடுக.
- அலங்காரம் செய்யும் போது பொருளின் மேற்பரப்பிலுள்ள பழுதுகள் மீது அவதானம் செலுத்துக.
- (பாழடைந்த இடங்களை செப்பனிட்டு அவ்விடங்களை அதே விதத்தில் அலங்காரத்தின் ஒரு பகுதியாக பயன்படுத்தல் வேண்டும்.)
- கிடைத்த டிமை கடதாசி மிது குழுவில் உள்ள அனைவரும் எளிய குறியீடுகளை வரைக.
- அக்குறியீடுகளுக்கு விரும்பிய குறியீடுகள் / வடிவங்கள் பலவற்றை தெரிவு செய்க.
- தெரிவு செய்யப்பட்ட வடிவங்களைப் பயன்படுத்தி சமநிலை பேணும் படி பொருளின் மீது அலங்காரங்களைச் செய்க.
- இங்கு முதலில் வர்ணம் பூசப்பட்ட வர்ணத்துக்கு எதிர் வர்ணங்கள் அல்லது அயல் வர்ணம் பயன்படுத்துவது பற்றி கவனம் செலுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 0.3** : **பாவனைக்கு பொருத்தமான வகையில் திட்டமிட்டு அலங்காரங்களை ஆக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.2** : அமைக்கப்பட்ட பொருள்களின் வடிவங்களைப் பயன்படுத்தி ஆக்கத்திறன் கொண்ட திட்டங்களையும், அலங்காரங்களையும் செய்வர்.

**செயற்பாடு 3.2.2** : **"தபால்கள் வைக்கக்கூடிய பொருளை ஆக்குவோம்."**

**நேரம்** : 3 பாடவேளைகள்.

**தர உள்ளீடுகள்** :

- 3.2.2.1 இல் உள்ள ஆய்வு / செயற்பாட்டு படிவங்களின் பிரதிகள் போதியளவு.
- மாதிரி தபால் தாங்கியொன்று
- கத்தரிக்கோல், கேத்திர கணித உபகரணங்கள், Box Board, கம், டிமை கடதாசி.
- வர்ணம் (நீர் வர்ணம், பெஸ்டல்) தூரிகை.

**கற்றல் கற்பித்தற் செயற்பாடு :**

**படி 3.2.2.1** :

- பல தபால்களை மேசை மீது பரப்பி வைக்கவும்.
- அவற்றை பார்வையிடச் செய்து, அவற்றை ஒழுங்காக வைத்துக்கொள்ளக் கூடிய பல வழிகள் பற்றி மாணவர் களிடம் கேட்டறிக.
- மாதிரி தபால் தாங்கி ஒன்று வகுப்பில் காட்சிப்படுத்துக.
- கீழேயுள்ள விடயங்கள் மீது கவனஞ் செலுத்தி உரையாடலை நிகழ்த்துக.

> - தபால்களை ஒழுங்கான முறையில் வைத்துக் கொள்வதற் காக தபால் தாங்கியொன்று பயன்படுத்தலாம்.
> - Box Boardஐ பயன்படுத்தி அவ்வாறான ஒரு பொருளை அமைக்கலாம்.
> - இவ்வாறான ஆக்கங்கள் மூலம் பாடசாலை, இல்லம், அலுவலகம் போன்ற இடங்களை அழகாகவும், ஒழுங்காகவும் வைத்திருக்கலாம்.

**(10 நிமிடங்கள்)**

**படி 3.2.2.2** :

- காண்பிக்கப்பட்டட மாதிரிப் பொருளை வகுப்பிலுள்ள சுவரில் தொங்கவிடுங்கள்.
- 3.2.2.2 இல் உள்ள ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் பத்திரங்களை எல்லா மாணவர்களுக்கும் இடையில் பகிர்ந்து கொடுக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிரிஸ்டல் போட், டிமை கடதாசி, பிரதியிடப்படப் பயன்படுத்தப்படும் தாள்கள். கத்திரிக்கோல், வர்ணம், மாணவர்களுக்கிடையே வழங்குக.
- மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- மாணவர்களது ஆக்கங்களை சமர்ப்பிக்க ஏற்பாடுகளைச் செய்க.

**(90 நிமிடங்கள்)**

**படி 3.2.2.3** :

- மாணவர்களது ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- தங்களது ஆக்கம் பற்றிய கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய மாணவர்களது ஆக்கங்களை மதிப்பிடவும், சந்தர்ப்பம் வழங்குக.
- ஆக்கபூர்வமான கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குக.
- கீழே உள்ள விடயங்கள் மீது கவனம் செலுத்தி கலந்துரையாடுக.

> - கேத்திர கணித உபகரணங்களை சரியான முறையில் பயன்படுத்துவதால் தமது ஆக்கங்களை செம்மையாகச் செய்யலாம் என்பது.
> - நிற வேறுபாடு என்பது ஒரே நிறத்தின் பல நிலைகள் ஆகும்.
> - வடிவங்களைக் கொண்டு ஆக்கத்தை மேலும் மெருகூட்டலாம் என்பது.
> - ஆக்கத்திற்கு ஏற்றவாறு அலங்காரங்களை செய்ய வேண்டும் என்பது

**(20 நிமிடங்கள்)**

## கணிப்பீடு மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- தபால் தாங்கி ஒன்றின் தேவையை விபரித்துக் கூறுவர்.
- வர்ண வேறுபாடுகளை இனங்காண்பர்.
- காட்டுருக்களைக் கொண்டு அலங்காரங்களைச் செய்வர்.
- தரப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்பாட்டில் ஈடுபடுவர்.
- ஒழுங்கான முறையில் பொருள்களைப் பயன்படுத்துவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வு / செயற்பாட்டுப் படிவம்.
## ''தபால்கள் வைக்கக்கூடிய பொருளை ஆக்குவோம்.

- ஆசிரியர் காண்பித்த தபால் தாங்கியை நன்றாக நோக்குக.
- காண்ப்பிக்கப்பட்ட மாதிரியையும் மேலே உள்ள படத்தையும் நோக்குக.
- தபால் தாங்கி ஒன்றுக்கு பொருத்தமான அமைப்பை டிமை கடதாசியில் வரைந்து கொள்க.
- அவ்வமைப்பை உமக்குத் தரப்பட்ட பிரிஸ்டல் போட்டடைப் பயன்படுத்தி உருவாக்குக.
- நீங்கள் அமைத்த தபால் தாங்கிகளுக்குப் பொருத்தமான ஆக்கபூர்வமான அலங்காரங்களை டிமை கடதாசியில் வரைக.
- அவற்றுள் ஒரு அலங்கார உருவத்தை தெரிவு செய்து திட்டமிட்டு தபால் தாங்கியின் மேற்பரப்பு மீது பொருத்தமாக பிரதியிடுக.
- வர்ண பாகுபாட்டைப் பயன்படுத்தி வர்ணம் தீட்டுக.
- இதற்கான பொருத்தமான ஒரு ஊடகத்தை தெரிவு செய்து பயன்படுத்துக.
- ஆக்கத்தில் ஈடுபடும் போது தூய்மை பற்றி கவனத்திற் கொள்க.
- உங்களது ஆக்கத்தை வகுப்பில் காட்சிப்படுத்த உரிய ஏற்பாடுகளை செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 0.3** : **பாவனைக்கு பொருத்தமான வகையில் திட்டமிட்டு அலங்காரங்களை ஆக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.2** : அமைக்கப்பட்ட பொருள்களின் வடிவங்களைப் பயன்படுத்தி ஆக்கத்திறன் கொண்ட திட்டங்களையும், அலங்காரங்களையும் செய்வர்.

**செயற்பாடு 3.2.3** : **"விசிறியால் காற்று விசிறுவோம்."**

**நேரம்** : 3 பாடவேளைகள்.

**தர உள்ளீடுகள்** :

- ஆசிரியரால் அமைக்கப்பட்ட ஒரு விசிறி
- 3.2.3.1இல் அடங்கிய அய்வு செயற்பாட்டு அறிவுரைப் படிவங்கள் போதியளவு.
- கத்தரிக்கோல், கம்
- நிறக் கடதாசி (கீலங்கள் வெட்ட)

**கற்றல் கற்பித்தற் செயற்பாடு :**

**படி 3.2.3.1** :

- மாதிரியை மாணவர்களுக்கு காண்பித்து அதன் ஆக்கம் பற்றி மாணவர்களது கருத்தை அறிக.
- இவ்வாறான பொருளுக்காக பயன்படுத்தக் கூடிய பலவித கேத்திர கணித உருக்கள் பற்றி மாணவரிடம் வினாவுக.
- இவ்வாறான ஆக்கத்துக்காக இயற்கை சூழலில் இருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய பொருள்கள் பற்றி வினாவுக.
- கீழேயுள்ள காரணங்கள் மீது கவனஞ் செலுத்தி கலந்துரையாடுக.

> - விசிறி என்பது காற்று பெறுவதக்காகப் பயன்படும் ஒரு பொருள்.
> - இயற்கை பொருள்களைப் பயன்படுத்தி ஒரு விசிறியை கலை அம்சம் பொருந்தியதாக அமைக்கலாம்.
> - ஒழுங்காக அமைக்கப்பட்ட இவ்வாறான ஆக்கம் சுய பாவனைக்கு பயன்படுத்தலாம்.

**(10 நிமிடங்கள்)**

**படி 3.2.3.2** :

- மாதிரியைக் காட்சிப்படுத்துக.
- 3.2.3.1 இல் உள்ள ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் பத்திரங்களை எல்லா மாணவர்களுக்கும் இடையில் பகிர்ந்து கொடுக்கவும்.
- மாணவர்களை ஆக்கத்தில் ஈடுபடுத்துக.
- ஆக்கத்தைச் சமர்ப்பிக்கத் தயாராகுக.

**(90 நிமிடங்கள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படி 3.2.3.3** :

- மாணவர்களது ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- தங்களது சுயஆக்கங்களை விபரிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- மற்றறைய மாணவர்களது ஆக்கங்களை மதிப்பிடவும், அவை பற்றி ஆக்கபூர்வமான கருத்துக்களைத் தெரிவிக் கவும் சந்தர்ப்பம் வழங்குக.
- கீழே உள்ள விடயங்கள் மீது கவனம் செலுத்தி கலந்துரையாடுக.

> - சூழலில் இருந்து பெறப்படும் இயற்கைப் பொருள்களைப் பயன்படுத்தி இவ்வாறான பாவனைப் பொருள்கள் செய்யலாம்.
> - இயற்கைப் பொருள்களைப் பயன்படுத்தி கலையம்சம் நிறைந்த அலங்காரங்களை உருவாக்கலாம்.
> - தரப்பட்ட அறிவுறுத்தல்களை படிப்படியாக சரியான முறையில் பின்பற்றி, திறமையான படைப்பொன்றை செய்யலாம்.

**(20 நிமிடங்கள்)**

## கணிப்பீடு மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- ஆக்கத்திற்குப் பயன்படுத்தக் கூடிய இயற்கைப் பொருள்களைக் கூறுவர்.
- ஆக்கத்தை மெருகூட்டப் பொருத்தமான கேத்திர கணித வடிவங்களைத் தெரிவு செய்வர்.
- அறிவுறுத்தல்களை வாசித்து, புரிந்து கொண்டு ஆக்க வேலையில் ஈடுபடுவர்.
- குறித்த காலத்தில் ஆக்கத்தைச் செய்து முடிப்பர்.
- கேத்திர கணித உபகரணங்களை சரியான முறையில் பயன்படுத்துவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வு / செயற்பாட்டுப் படிவம்.
## "விசிறியால் காற்று விசிறுவோம்."

- உங்களுக்கு வழங்கப்பட்ட டிமைக் கடதாசியில் கேத்திர கணித வடிவங்களைக் கொண்டு விசிறிக்குப் பொருத்தமான உருவத்தை திட்டமிட்டுக் கொள்க. (கைப்பிடியும் அடங்கலாக)

- அவ்வுருவத்தை கருவிகளைப் பயன்படுத்தி பொருத்தமான அளவிடையுடன் Box Board மீது வரைந்து கொள்க.

- இவ்வாறு ஒரே வடிவம் கொண்ட இரு உருக்களை Box Board இல் வெட்டி எடுத்துக் கொள்க.

- கைப்பிடி பலமாக இருக்கும்படி, ஒரு பலகைத் துண்டையோ பொருத்தமான வேறு பொருளையோ விசிறியின் மதிய பகுதி வரை உள்ளே செல்லும்படி வைத்து, இரு பகுதிகளையும் ஒட்டிக் கொள்க.

- அமைக்கப்பட்ட வடிவத்தின் உறுதிக்காகவும், அழகுக்காகவும் அதைச்சுற்றி wool அல்லது வேறு பலம் கொண்ட இழை ஒன்றினால் Blanket தையல் முறையை பயன்படுத்தி தைத்துக் கொள்க. அல்லது ஓரங்கள் இரண்டையும் வேறுவிதமான அலங்காரங்களைப் பயன்படுத்தி ஒன்றுடன் ஒன்று சேரும்படி ஒட்டிக் கொள்க.

- சூழலில் இருந்து பெறப்பட்ட இயற்கைப் பொருளைப் பயன்படுத்தி அழகுபடுத்துக.

- ஆக்கத்தை வகுப்பில் காட்சிப்படுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 0.3** : **பாவனைக்கு பொருத்தமான வகையில் திட்டமிட்டு அலங்காரங்களை ஆக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.2** : அமைக்கப்பட்ட பொருள்களின் வடிவங்களைப் பயன்படுத்தி ஆக்கத்திறன் கொண்ட திட்டங்களையும், அலங்காரங்களையும் செய்வர்.

**செயற்பாடு 3.2.4** : **"(Scarf) ஒன்றை அலங்காரம் செய்வோம்."**

**நேரம்** : 2 பாடவேளைகள்.

**தர உள்ளீடுகள்** :

- 3.2.4.1 இல் உள்ள ஆய்வு / செயற்பாட்டு படிவங்களின் பிரதிகள் போதியளவு.
- பல குறியீடுகள் பயன்படுத்தி அழகுபடுதப்பட்ட தலையில் அணியப்படும் **Scarf**
- பெஸ்டல், வரைதற் தாள்கள், பிரதியிடக் கூடிய தாள்கள் (Tracing Papers) டிமைக் கடதாசி
- கேத்திர கணித உபகரணங்கள்

**கற்றல் கற்பித்தற் செயற்பாடு :**

**படி 3.2.4.1** :

- மாணவர்கள் பயன்படுத்தும் அல்லது வேறு **Scarf** மாணவர் களுக்கு காண்பிக்குக.
- அதன் அழகு, தேவை பற்றி கலந்துரையாடுக.
- கீழேயுள்ள விடயங்கள் மீது கவனஞ் செலுத்தி உரையாடலை நிகழ்த்துக.

| |
|---|
| • சுகாதாரத்தைப் பேண அணிவோம்.<br>• அவற்றை அலங்காரம் செய்வதால் மேலும் அழகுபடுத்தலாம்.<br>• அவற்றுக்கு முழுமையான அலங்காரம் மிகவும் பொருத்தமானது.<br>• வடிவங்களைப் பயன்படுத்தியும் அழகுபடுத்தலாம்.<br>• துணிகளை நிறமூட்டம் வர்ணங்கைளப் பயன்படுத்தியும், தனிநபர் தேவைக்காக அமைக்கலாம். |

**(10 நிமிடங்கள்)**

**படி 3.2.4.2** :

- 3.2.4.1 இல் உள்ள ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் பத்திரங்களின் பிரதிகளை மாணவர்களுக்கும் இடையில் பகிர்ந்து கொடுக்கவும்.
- வரைதற் தாள், வர்ணம், மாணவர்களுக்கிடையே பகிர்ந்தளிக்குக.
- மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- மாணவர்களது ஆக்கங்களை சமர்ப்பிக்க ஏற்பாடுகளைச் செய்க.

**(60 நிமிடங்கள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படி 3.2.4.3** :

- முடிவடைந்த ஆக்கங்களை வகுப்பில் காண்பிக்குக.
- மற்றறையவர்களது ஆக்கங்களை மதிப்பிடவும், அவை பற்றி ஆக்கபூர்வமான கருத்துக்களைத் தெரிவிவக்கவும் சந்தர்ப்பம் வழுங்குக.
- ஆக்கங்கள் பற்றி உங்கள் கருத்துக்களை தெரிவியுங்கள்.
- கீழே உள்ள விடயங்கள் மீது கவனம் செலுத்தி கலந்துரையாடுக.

> - அலங்காரம் ஒன்று செய்யும் போது பலவற்றை வரைந்த பின், மிகவும் பொருத்தமானதைத் தெரிவு செய்தல் வேண்டும்.
> - தெரிவு செய்த வடிவங்களை பிரதியிடும்போது (Trace பண்ணும் போது) அக்கடதாசியை சரியான முறையில் பயன்படுத்தி தேவையான கடதாசியில் பிரதியிட வேண்டும்.
> - Scarf இன் வடிவத்திற்கு பொருத்தமானவாறு அமைப்பை பரவலாக்க வேண்டும். அயல் வர்ணங்களை தெரிவு செய்வதன் மூலமும் வேறுபாடுகளை வெளிப்படுத்தலாம்.
> - வர்ணம் தீட்டும்போது ஒழுங்கான முறையில் நிறைவு செய்ய வேண்டும்
> - குறிப்பிட்ட நேரத்திற்குள் ஆக்கத்தை செம்மையாக முடிக்க வேண்டும்.
> - திறமையான ஆக்கமொன்றை செய்ய கேத்திர கணித உபகரணங்கள் பயன்படுத்தல் அவசியம்.

**(10 நிமிடங்கள்)**

## கணிப்பீடு மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- அயல் வர்ணங்களைக் குறிப்பிடுவர்.
- பரவுருப அலங்காரம் என்னவென்று குறிப்பிடுவர்.
- ஒழுங்காகச் செயற்பாட்டில் ஈடுபடுவர்.
- சுயமான ஆக்கங்களை அன்றாட வாழ்க்கைத் தேவைக்காக பயன்படுத்துவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வு / செயற்பாட்டுப் படிவம்.
## "(Scarf) ஒன்றை அலங்காரம் செய்வோம்."

- உங்களுக்கு வழங்கப்பட்ட மாதிரியை நன்றாக நோக்குக.
- படம் வரையும் மாள் மீது (18x18cm) அளவுடைளய சதுர வடிவம் (Scarf இன் அமைப்புக்கு ஒத்த) ஒன்றை வரைக.
- கேத்திர கணித உபகரணங்களை இதற்காகப் பயன்படுத்துக.
- உங்களுக்கு வழங்கப்பட்ட டிமை கடதாசியின் மீது தள வடிவங்களைப் பயன்படுத்தி அலங்காரம் ஒன்றை உருவாக்குக.
- அவ்வலங்காரங்களை பொருத்தமானவாறு வதைற் தாளில், நீங்கள் திட்டமிட்ட வடிவத்துக்குப் பொருத்தமானவாறு அலங்கரித்துக் கொள்க.
- அயல் வர்ணங்களைப் பயன்படுத்தி அலங்காரத்தை நிறம் தீட்டுக.
- ஆக்கத்தில் ஈடுபடும் போது தூய்மை பற்றி கவனத்திற் கொள்க.
- உங்களது ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்த ஏற்பாடு செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 4** : **உற்பத்திக்குத் தேவையான ‘கிறபிக்’ சித்திரங்களை நிர்மாணிப்பர்.**

**தேர்ச்சி மட்டம் 4.1** : அலங்கார எழுத்து வடிவங்களையும், சித்திரங்களையும் கொண்டு புத்தக உறையொன்றை நிர்மாணிப்பர்.

**செயற்பாடு 4.1.1** : சிறுவர் புத்தகமொன்றின் முன் அட்டை ஒன்றை அமைப்போம்.

**காலம்** : 04 பாடவேளைகள்

**தர உள்ளீடு** :

- இணைப்பு 4.1.1.1 அடங்கிய ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்களின் போதியளவு பிரதிகள்
- பல விதத்தில் அமைக்கப்பட்ட சிறுவர் நூல்களின் வெளிப்புற அட்டைகள்
- வரைதற்தாள், போஸ்டர் வர்ணம், பெஸ்டல், பென்சில், தூரிகை

**கற்றல் - கற்பித்தல் செயற்பாடு**

**படி 4.1.1.1** :

- பல விதத்தில் அமைக்கப்பட்ட சிறுவர் நூல்களின் வெளி அட்டைகள் பலவற்றை வகுப்பில் காண்பிக்கவும்.
- அவற்றைக்கொண்டு புதிய பாணியில் உருவாக்கக்கூடிய விதம் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுக.
- புத்தகங்களின் வெளிப்புற அட்டைகள் மனதைக் கவரும் விதத்தில் உருவாக்கும் விதம் பற்றி கலந்துரையாடுக.
- கீழே உள்ள விடயங்களுடன் கலந்துரையாடுக.

> - புத்தக வெளியுறை கிறபிக் வகையை சேர்ந்தது என்பது.
> - சிறுவர் நூல்களின் வெளிப்புற அட்டை அவர்களது வயது, உள வளர்ச்சிக்கு ஏற்றதாக படங்களாலும், வர்ணங்களாலும் அமைய வேண்டும் என்பது.
> - வெளிப்புற அட்டை எளிய முறையில் அமைய வேண்டும் என்பது.

**(15 நிமிடங்கள்)**

**படி 4.1.1.2** :

- இணைப்பு 4.1.1.1 இல் அடங்கிய ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்களை மாணவர்களுக்கு வழங்குக.
- வரைதற் தாள், கடதாசி, பதிக்கும் தாள், பெஸ்டல், நீர் வர்ணம், பென்சில், தூரிகை போன்றவற்றை மாணவர்களுக்கு வழங்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சிறுவர் நூல்களின் வெளிப்புற அட்டையை ஒழுங்கமைக்க வேண்டிய விதத்தை, பல நுட்பமுறைகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட மாதிரி சிறுவர் நூல்களின் அட்டைகளைக் காண்பித்தும் கரும்பலகையை பாவித்தும் விளக்குக.

- ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தின் அறிவுறுத் தல்களுக்கு ஏற்ப மாணவர்களை செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

- அமைக்கப்பட்ட சிறுவர் நூல்களின் வெளிப்புற அட்டைகளை வகுப்பில் காட்சிப்படுத்த உரிய ஏற்பாடுகளைச் செய்க.

**(120 நிமிடங்கள்)**

**படி 4.1.1.3** :

- மாணவர்களின் ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.

- அவ்வாக்கங்கள் பற்றிய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குக.

- விருத்திசெய்யக்கூடிய விடயங்கள் பற்றிக் கலந்துரையாடு வதுடன் அவற்றை மேம்படுத்தத் தேவையான மேலதிக அறிவுறுத்தல்களையும் வழங்குக.

- கீழே உள்ள விடயங்களுடன் கலந்துரையாடுக.

  - சிறுவர் கதைக்கு/நூலடக்கத்துக்குப் பொருந்தும் விதத் தில் பெயர் இடவேண்டும் என்பது.
  - வெளியட்டையில் இடும் எழுத்துக்கள் பொருத்தமாகவும், கலை அம்சத்துடனும் அமைய வேண்டும்என்பது.
  - வெளிப்புற அட்டைக்குப் பொருத்தமாக வர்ணம் தீட்ட வேண்டும் என்பது.
  - வெளிப்புற அட்டையின் முழுமையாக்கம் சிறப்பாக அமைய வேண்டும் என்பது.

**(25 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டுப் பிரமாணங்கள்

- சிறுவர் புத்தக வெளியுறை கிறபிக் வகையைச் சேர்ந்தது எனக் கூறுவர்.
- சிறுவர் மனதைக் கவரும் விதத்தில் ஆக்கம் அமைய வேண்டும் என ஏற்றுக்கொள்வர்.
- நூலடக்கத்துக்குப் பொருத்தமான வெளியுறையில் சித்திரங்களை ஒழுங்கமைப்பர்.
- சிறுவர் நூலின் வெளிப்புற அட்டையில் பயன்படுத்தும் படங்கள், எழுத்தமைப்புக்கள் ஏனைய ஆக்கங்களிலும் பயன்படுத்துவர்.
- தன்னுடையதைப் போலவே மற்றவர்களது ஆக்கங்களையும் இரசிப்பர்.



7. S. P. C. 081055

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைப்பு 4.1.1.1**

## ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்

- சிறுவர் நூலொன்றின் ''வெளிப்புற அட்டை''
  - உமக்கு காண்பிக்கப்படும் மாதிரி நூலின் வெளிப்புற அட்டையில் உள்ள படங்களை நன்றாக நோக்குக.
  - தரப்பட்ட வரைதற் தாளில் பரிமாணங்களுக்கு ஏற்ப வெளியுறையை திட்டமிட்டுக் கொள்க.
  - அதன் அளவுகளை A4 அல்லது பொருத்தமான வேறு அளவுத் திட்டத்தில் அமைத்துக் கொள்க.
  - பொருத்தமான எழுத்துக்களை பயன்படுத்துக.
  - பென்சிலால் வரையப்பட்ட சித்திரத்தை பிரதி பண்ணக்கூடிய தாளின் உதவியுடன் வரைதற் தாளில் பதித்துக்கொள்க.
  - பொருத்தமான வகையில் வர்ணம் தீட்டுக.
  - ஆக்கங்களைக் காட்சிப்படுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 4** : **உற்பத்திக்குத் தேவையான 'கிறபிக்' சித்திரங்களை நிர்மாணிப்பர்.**

**தேர்ச்சி மட்டம் 4.1** : அலங்கார எழுத்து வடிவங்களையும், சித்திரங்களையும் கொண்டு புத்தக உறையொன்றை நிர்மாணிப்பர்.

**செயற்பாடு 4.1.2** : வருடாந்த பாடசாலைச் சித்திரக் கண்காட்சியின் நினைவு மலர் ஒன்றுக்கு வெளிப்புற அட்டை ஒன்றை அமைப்போம்.

**காலம்** : 04 பாடவேளைகள்

**தர உள்ளீடு** :
- இணைப்பு 4.1.2.1 அடங்கிய ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்களின் போதியளவு பிரதிகள்
- பல நினைவு மலர்களின் வெளிப்புற அட்டைகள்
- வரைதற்தாள், போஸ்டர் வர்ணம், பெஸ்டல், பென்சில், தூரிகை

**கற்றல் - கற்பித்தல் செயற்பாடு**

**படி 4.1.2.1** :
- பாடசாலையினதும் பல நிறுவனங்களினதும் நினைவு மலர்களின் வெளிப்புற அட்டைகளை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- அந்நினைவு மலர்களின் வெளிப்புற அட்டைகளின் அமைப்புப் பற்றி கருத்துக்களைத் தெரிவிக்க மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குக.
- சித்திரக் கண்காட்சிக்குப் பொருத்தமான நினைவு மலரில் அடங்கும் படங்கள், சொற்கள், எழுத்து அமைப்புகள், வர்ணங்கள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுக.
- கீழே உள்ள விடயங்களுடன் கலந்துரையாடுக.

| |
|---|
| • நினைவு மலரின் வெளிப்புற அட்டை கிறபிக் சித்திர வகையைச் சேர்ந்தது என்பது.<br>• முன் அட்டை, பின் அட்டை இரண்டும் வெளிப்பற அட்டையில் அடங்கும் என்பது.<br>• சித்திரக் கண்காட்சிக்குப் பொருத்தமான படங்கள், எழுத்தமைப்புகள் கொண்டவாறு வெளிப்புற அட்டை ஒழுங்கமைக்க வேண்டும் என்பது.<br>• வெளிப்புற அட்டை கவரும் விதத்தில் அமைய வேண்டும் என்பது. |

**(15 நிமிடங்கள்)**

**படி 4.1.2.2** :
- இணைப்பு 4.1.2.1 இல் அடங்கிய ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்களை மாணவர்களுக்கு வழங்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வரைதற் தாள், கடதாசி, பதிக்கும் தாள், பெஸ்டல், நீர் வர்ணம், பென்சில், தூரிகை போன்றவற்றை மாணவர்களுக்கு வழங்குக.

- நினைவு மலர் ஒன்றுக்கு வெளியட்டை ஒன்றை ஒழுங்க மைக்கும் விதத்தை கரும்பலகையில் விளக்குக.

- ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நினைவு மலர் ஒன்றின் வெளிப்புறஅட்டையை நிர்மாணிப்பதில் மாணவர்களை ஈடுபடுத்துக.

**(120 நிமிடங்கள்)**

**படி 4.1.2.3**

- மாணவர்களின் ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.

- ஆக்கபூர்வமான கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குவதுடன் ஆக்கத்தில் ஈடுபடத் தேவையான அறிவுறுத்தல்களையும் வழங்குக.

- கீழே உள்ள விடயங்களுடன் கலந்துரையாடுக.

| |
|---|
| • நினைவு மலருக்குப் பொருத்தமான படங்கள், எழுத்துக்கள் அடங்க வேண்டும் என்பது.<br>• முன் அட்டை, பின் அட்டை இரண்டையும் திட்டமிட்டு ஒழுங்கமைத்து வர்ணம் தீட்ட வேண்டும் என்பது.<br>• கண்ணைக் கவரும் விதத்தில் அமைய வேண்டும் என்பது. |

**(25 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டுப் பிரமாணங்கள்

- நினைவு மலரின் வெளிப்புற அட்டை கிறபிக் சித்திர வகையைச் சேர்ந்தது எனக் கூறுவர்.
- நினைவு மலருக்குப் பொருத்தமான படங்கள், எழுத்துக்கள், வர்ணங்கள் அமைய வேண்டும் என ஏற்றுக்கொள்வர்.
- நினைவு மலருக்குப் பொருத்தமான வெளியட்டையை ஒழுங்கமைத்து வர்ணம் தீட்டி நிறைவு செய்வார்.
- நினைவு மலரின் ஆக்கத்தில் பெற்ற அனுபவங்களை ஏனையவற்றுக்காகப் பயன்படுத்துவார்.
- நிர்மாணங்களை இரசித்து மதிப்பிடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைப்பு 4.1.2.1**

## ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்

### வெளியட்டை ஒன்றை உருவமைப்போம்

- உங்களுக்குக் காண்பிக்கப்பட்ட பல நிறுவனங்களின் நினைவு மலர்களின் வெளியட்டையில் உள்ள படங்கள், எழுத்துக்கள், வர்ணங்கள் போன்றவற்றை நன்றாக நோக்குக.
- வரைதற் தாளில் சித்திரக் கண்காட்சிக்குப் பொருத்தமான படங்கள், எழுத்துக்கள் A4 அளவுத் திட்டத்தில் ஒழுங்கமைக்குக.
- ஒழுங்கமைக்கப்பட்ட நினைவு (ரேகைச் சித்திரம்)மலரின் வெளியட்டையை, பிரதியிடக்கூடிய தாளின் உதவியுடன் வரைதற் தாளில் அல்லது பிஸ்டல் போட் ஒன்றில் பிரதிபண்ணிக் கொள்க.
- பிரதியிடும்போது முதலில் படங்களை வரைதற் தாளில் அல்லது பிரிஸ்டல் போட்டில் பிரதிசெய்து கொள்க. அதன் பின், பின்னணிக்கு வர்ணம் தீட்டுக.
- பின்னர் எழுத்துக்களை ஒழுங்கமைத்து வர்ணம் தீட்டுக.
- நிறைவு செய்யப்பட்ட ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி 4 : **உற்பத்திக்குத் தேவையான 'கிறபிக்' சித்திரங்களை நிர்மாணிப்பர்.**

**தேர்ச்சி மட்டம் 4.2** : உற்பத்தி, சேவை விளம்பரத்துக்காக எழுத்தமைப் புக்களையும் படங்களையும் பயன்படுத்தி விளம்பரம் ஒன்றை நிர்மாணம் செய்வர்.

**செயற்பாடு 4.2.1** : விளம்பரம் ஒன்றை நிர்மாணிப்போம்.

**காலம்** : 04 பாடவேளைகள்

**தர உள்ளீடு** :
- இணைப்பு 4.2.1.1 அடங்கிய ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்களின் போதியளவு பிரதிகள்
- அச்சிடப்பட்ட பல மாதிரி விளம்பரங்கள்
- நீர் வர்ணம், போஸ்டர் வர்ணம், பெஸ்டல், பென்சில், தூரிகை, வரைதற் தாள், பிரதியிடப்பயன்படும் தாள், செலோடேப்

**கற்றல் - கற்பித்தல் செயற்பாடு**

**படி 4.2.1.1** :
- அச்சிடப்பட்ட பல விளம்பரங்களை மாணவர்களுக்குக் காண்பிக்குக.
- அவ்விளம்பரங்கள் பற்றிய கருத்துக்களைத் தெரிவிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- உரிய பொருளை அல்லது சேவையை விளம்பரப்படுத்த அவ்விளம்பரங்கள் எவ்வாறு பொருந்தியுள்ளன அல்லது எவ்வாறு கவர்ந்துள்ளன என்பன பற்றிக்கலந்துரையாடுக.

- கீழே உள்ள விடயங்களுடன் கலந்துரையாடுக.

| |
|---|
| • பொருள்களை, சேவைகளை விளம்பரப்படுத்த கவர்ச்சியான விளம்பரங்கள் நிர்மாணிக்கப்படுகிறது என்பது.<br>• விளம்பரம் கிறபிக் சித்திர வகையைச் சேர்ந்தது என்பது.<br>• உரிய பொருளை அல்லது சேவையைப் பெற விளம்பரம் ஊக்குவிக்கும் என்பது.<br>• பொருளை அல்லது சேவையை பெறும் நுகர்வோரின் வயதெல்லை, விருப்பு வெறுப்பு போன்றவற்றின் மீது கவனம் செலுத்தி விளம்பரத்தை உருவாக்க வேண்டும்என்பது.<br>• பொருளை அல்லது சேவையைக் கருதி பொருத்தமான படங்களையும், வர்ணங்களையும் எழுத்துக்களையும் இடவேண்டும் என்பது. |

**(15 நிமிடங்கள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 4.2.1.2 :

- இணைப்பு 4.2.1.1 இல் அடங்கிய ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்களை மாணவர்களுக்கு வழங்குக.
- வரைதற் தாள், கடதாசி, பதிக்கும் தாள், பெஸ்டல், நீர் வர்ணம், பென்சில், தூரிகை போன்றவற்றை மாணவர்களுக்கு வழங்குக.
- மாணவர்களை நான்கு குழுக்களாக்குக. கீழே உள்ள நான்கு தலைப்புகளை வழங்கி ஒவ்வொன்று வீதம் தலைப்புக்குப்
பொருத்தமான விளம்பரம் ஒன்றை நிர்மாணிக்கச் செய்க.
    1. ஒரு வகையான யோகட்டை அறிமுகப் படுத்துவதற்கான விளம்பரம்
    2. புதிய பாணியுடன் உருவாக்கிய தேயிலை பக்கெட்டை விளம்பரப்படுத்துவதற்கான விளம்பரம்
    3. ஒரு வகையான சொக்லெட்டை விளம்பரப்படுத்தப் பொருத்தமான விளம்பரம்
    4. வர்த்தக வங்கி ஒன்றில் சிறுவர் கணக்கு ஒன்றை விளம்பரப்படுத்தப் பொருத்தமான விளம்பரம்
- நிர்மாணிக்கப்பட்ட விளம்பரங்களை வகுப்பில் காட்சிப்படுத்த உரிய ஒழுங்குகளைச் செய்க.

**(120 நிமிடங்கள்)**

படி 4.2.1.3 :

- ஒவ்வொரு குழுவும் தமக்குக் கிடைத்த தலைப்புக்குரிய விளம்பரத்தைக் காட்சிப்படுத்துக.
- ஒவ்வொரு குழுவினருக்கும் தமது ஆக்கங்களைச் சுய மதிப்பீடு செய்யச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களின் ஆக்கங்கள் பற்றிய கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பு அளிக்குக.
- கீழே உள்ள விடயங்களுடன் கலந்துரையாடுக.

> - பொருள் அல்லது சேவை விளம்பரம் செய்யப் பொருத்தமானமதாக இருக்க வேண்டும் என்பது.
> - படங்கள், எழுத்தமைப்புகள், வர்ணங்கள் நுகர்வோரைக் கவரக்கூடியதாக இருக்க வேண்டும் என்பது.
> - விளம்பரம் தெளிவான வகையில் நிறைவு பெற்றிருக்க வேண்டும் என்பது.

**(25 நிமிடங்கள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீட்டு மதிப்பீட்டுப் பிரமாணங்கள்

- விளம்பரம் மூலம் பொருளை அல்லது சேசுவையை விளம்பரப்படுத்தலாம் என்று கூறுவர்.
- விளம்பரங்கள் நுகர்வோரைக் கவரும் விதத்தில் அமைய வேண்டும் என ஏற்றுக்கொள்வர்.
- பொருள்களை அல்லது சேவையை விளம்பரப்படுத்த விளம்பரம் ஒன்றை நிர்மாணிப்பர்.
- குழுவில் உள்ள அங்கத்தவர்களுடன் ஒத்துழைத்து செயற்பாட்டில் ஈடுபடுவர்.
- விளம்பரங்களை இரசித்து மதிப்பிடுவர்.

**இணைப்பு 4.2.1.1**

## ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்

### வர்த்தக விளம்பரமொன்றை நிர்மாணிப்போம்

- வகுப்பில் காண்பிக்கப்பட்ட விளம்பரங்களை நன்றாக நோக்குக.
- தெரிவுசெய்யப்பட்ட பொருளுக்கு அல்லது சேவைக்குப் பொருத்தமாக படங்கள், எழுத்துக்கள் போன்றவற்றை வரைதற் தாளில் ஒழுங்கமைத்துக் கொள்க.
- ஒழுங்கமைக்கப்பட்ட படங்களை மட்டும் முதலில் எண்ணெய்த் தாளின் துணையுடன் வரைதற் தாளில் அல்லது பிரிஸ்டல் போட்டில் பதித்துக்கொள்க.
- படங்களைப் பொருத்தமான வர்ணங்களைப் பயன்படுத்தி வர்ணம் தீட்டுக.
- வர்ணம் தீட்டப்பட்ட விளம்பரம் மீது எழுத்துக்களைப் பதித்துக்கொள்க.
- எழுத்துக்களையும் வர்ணம் தீட்டுக. (எழுத்துக்களை, பின்னணியின் ஊடாகத் தெளிவாகத் தெரியும் விதத்தில் வர்ணம் தீட்ட வேண்டும்.)
- பூர்த்தி செய்யப்பட்ட விளம்பரத்தை வகுப்பில் காட்சிப்படுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 5.0** : **பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி சிலைகள், சிற்பங்கள், போன்வற்றைச் செய்வர்.**

**தேர்ச்சி மட்டம் 5.1** : கட்டட அலங்காரத்துக்காக எளிய சுவர் சிற்பங்களை அமைப்பர்.

**செயற்பாடு 5.1.1** : **"அழகு வெளிப்படுத்தும் சுவர் சிற்பம்"**

**நேரம்** : 04 பாடவேளைகள்.

**தர உள்ளீடுகள்** :

- 5.1.1.1இல் அடங்கிய செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்கள் போதியளவு வழங்குதல்.
- மாதிரி சுவர் சிற்பம் காட்டப்படும் பல புகைப்படங்கள்.
- பாரம்பரிய அலங்காரங்களை வெளிப்படுத்தும் சில படங்கள்.
- னெஸ்டார்/அஸ்பெஸ்டோஸ் போன்ற மெல்லிய தகடுகள். (60x45cm)
- பதப்படுத்திய களி
- டிமை கடதாசி, பென்சில், தூரிகை, வர்ணங்கள் (Emulsion paint),வர்ணங்களை இடப் போதுமான பாத்திரங்கள்.

**கற்றல் கற்பித்தற் செயற்பாடு :**

**படி 5.1.1.1** :

- மாதிரிப் புகைப்படங்களையும், படங்களையும் மாணவர் களுக்குக் காண்பிக்குக.
- அவற்றைப் பற்றி மாணவரிடம் கருத்துக்களை கேட்டறிக.
- அவ்வாக்கங்கள் பற்றி மாணவர்களது கருத்துக்களை வினாவுக.
- கீழேயுள்ள காரணங்கள் மீது கவனஞ் செலுத்தி கலந்துரையாடலை நடத்துக.

> - சுவர் சிற்பங்கள் கட்டடம் ஒன்றில், வெளிப்புற அல்லது உட்புற சுவரை அழகுபடுத்த உன்னதமாக செய்யப்படும் ஒரு ஆக்கம் என்பது.
> - ஆக்கம் செய்யப்படும் இடத்துக்கு ஏற்ப அதன் கருப்பொருள் வேறுபட வேண்டும் என்பது.
> - சம்பிரதாயபூர்வமான அலங்காரங்கள் ஊடாக சுவர் சிற்பம் அமைக்க முடியும் என்பது.

**(10 நிமிடங்கள்)**

**படி 5.1.1.2** :

- 5.1.1.1 இல் உள்ளடக்கிய செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்களை மாணவர்களுக்கு வழங்குக.
- டிமை கடதாசி, பென்சில், தூரிகை, பதப்படுத்திய களி, வர்ணம், தகடுகள், பலகைகள் கொண்டு செய்யப்பட்ட கருவிகள் வழங்குக.
- மாணவர்களுக்குத் தேவையான அறிவுரை வழங்கி ஆக்கங் களை செய்ய வழிகாட்டுக.
- மாணவர்களது ஆக்கங்களை காட்சிப்படுத்த ஒழுங்குகளை மேற்கொள்க.

**(130 நிமிடங்கள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படி 5.1.1.3** :

- மாணவர்களது ஆக்கங்களைக் காட்சிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குக.
- தங்களது ஆக்கங்களை சுயமாக மதிப்பிட சந்தர்ப்பம் வழங்குக.
- மற்றவர்களின் ஆக்கங்கள் மெருகூட்டக் கூடியவாறு அமையும்படியான கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குக.
- கீழே உள்ள விடயங்களைக் கருத்திற் கொண்டு கலந்துரை யாடுக.

> - சுவர் சிற்ப ஆக்கத்தில் ஈடுபடும் போது களி, இலகுவான ஊடகமாக இருக்கின்றது.
> - உரிய கருவிகளைப் பயன்படுத்தி ஆக்கத்தை நுணுக்க மான முறையில் செய்யலாம்.
> - வர்ணம் தீட்டுவதன் மூலம் ஆக்கத்தின் அழகு அதிகரிக்கும்.
> - சம்பிரதாயபூர்வமான அலங்காரங்களைப் பயன்படுத்தி சுவர் சிற்பம் அமைக்கலாம்.

**(15 நிமிடங்கள்)**

## கணிப்பீடு மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- சுவர் சிற்பம் என்னவென்று விபரிப்பர்.
- களியை ஊடகமாகப் பயன்படுத்தி இலகுவாக உன்னதசிற்பத்தை ஆக்கலாம் என்று தெரிந்து கொள்வர்.
- அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றி செயற்பாட்டில் ஈடுபடுவர்.
- கருவிகளைச் சரியான முறையில் கையாள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைப்பு 5.1.1.1**

## ஆய்வு / செயற்பாட்டுப் படிவம்.
## "அழகு வெளிப்படுத்தும் சுவர் சிற்பம்"

- வகுப்பில் காண்பிக்கப்படும் மாதிரி சுவர் சிற்பம் உள்ள புகைப்படங்களை நன்றாக நோக்குக.
- டிமை கடதாசி, 60x45 cm அளவில் தயாரித்துக் கொள்க.
- டிமை கடதாசியின் மீது சம்பிரதாய அலங்காரங்களை உபயோகித்து சுவர் சிற்பத்துக்கான ஒரு திட்டத்தை அமைக்குக.
- பதப்படுத்திய களியை ஒரு அங்குல தடிப்பில் மெல்லிய தகட்டின் மீது தட்டி எடுக்குக.
- அமைக்கப்பட்ட களித்தட்டின் மீது டிமை கடதாசியில் வரைந்த அமைப்பை வைத்து பிரதி செய்து கொள்க.
- அமைப்பை செய்யும் போது களிமண்ணை சேர்த்தும், அகற்றியும் தேவையான வடிவத்தை உருவாக்குக.
- தேவையான சந்தர்ப்பங்களில் ஆசிரியரின் துணையுடன் கருவிகளை உபயோகித்து நுட்பமான முறையில் ஆக்கத்தை செய்க.
- ஆக்கம் நன்று உலர்ந்ததும் வர்ணம் தீட்டுக.
- உங்கள் குழுவின் ஆக்கத்தை வகுப்பில் காண்பித்து அதைப்பற்றிய கருத்துக்களை தெரிவிக்குக.
- வகுப்பில் ஏனைய குழுக்களினதும் ஆக்கங்களை மதிப்பீட்டுக்கு உள்ளாக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 5.0** : **பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி சிலைகள், சிற்பங்கள், போன்றவற்றைச் செய்வர்.**

**தேர்ச்சி மட்டம் 5.2** : எளிய வடிவங்களைப் பயன்படுத்தி பல்வேறு மனித நிலைகளை அமைப்பர்.

**செயற்பாடு 5.2.1** : **"ஓய்வெடுக்கும் ஒரு மனிதன்"**

**நேரம்** : 03 பாடவேளைகள்.

**தர உள்ளீடுகள்** :
- 5.2.1.1இல் அடங்கிய செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்கள் போதியளவு வழங்குதல்.
- ஓய்வெடுக்கும் ஒருவரது நிலை காட்டப்படும் படம் அல்லது புகைப்படம்.
- பதப்படுத்திய களி.
- பலகைத்துண்டுகள் (15x15x2cm)
- பலகைக் கீலங்கள், வாள் மற்றும் தேவையான கருவிகள்.
- டிமை கடதாசி, பென்சில், தூரிகை
- இமல்ஷன் வர்ணம் (சிலைகளுக்கு வர்ணம் பூசப் பொருத்தமான)

**கற்றல் கற்பித்தற் செயற்பாடு :**

**படி 5.2.1.1** :
- ஓய்வெடுக்கும் ஒருவரின் நிலை காணப்படும் படங்கள், புகைப்படங்கள் என்பவற்றை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- வகுப்பில் உள்ள மாணவன் ஒருவரை ஓய்வெடுக்கும் பல்வேறு வடிவங்களில் அமரச் செய்து காண்பிக்கச் செய்க.
- அதைப் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடி கருத்துப் பரிமாறச் செய்க.
- கீழேயுள்ள காரணங்கள் மீது கவனஞ் செலுத்தி கலந்துரையாடலை நடத்துக.

> - ஓய்வு மனித நடத்தையில் மிகவும் முக்கிய இடம் பெறுகிறது என்பது.
> - ஓய்வு எடுக்கும் போது பல்வேறுபட்ட மனித நிலைகளை அவதானிக்கலாம் என்பது.
> - ஓய்வு எடுக்கும் மனித நிலை சித்தரிக்கும் சிலைகள் கலைப்படைப்பாக பயன்படுத்தலாம் என்பது.
> - பாரிய அளவில் அமைக்கப்பட்ட சிலைகள், பூங்காக் களை அழகுபடுத்த பயன்படுத்தலாம் என்பது.

**(10 நிமிடங்கள்)**

**படி 5.2.1.2** :
- செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்களை மாணவர்களுக்கு வழங்குக.
- போதியளவு பொருட்களையும், கருவிகளையும் மாணவர் களுக்கு வழங்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தேவையான அறிவுறுத்தல்களை வழங்கி மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- மாணவர்களது ஆக்கங்களை காட்சிப்படுத்த ஒழுங்குகளை மேற்கொள்க.

**(90 நிமிடங்கள்)**

படி **5.2.1.3** :

- மாணவர்களது ஆக்கங்களைக் காட்சிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குக.
- தங்களது ஆக்கங்களை சுயமாக மதிப்பிட சந்தர்ப்பம் வழங்குக.
- மற்றவர்களின் ஆக்கங்கள் மெருகூட்டக் கூடியவாறு அமையும்படியான கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குக.
- கீழே குறிப்பிட்ட விடயங்களை கருத்திற் கொண்டு கருத்துரையாடலை மேற்கொள்ளுக.

> - பதப்படுத்திய களியை இலேசாக கையாளலாம் என்பது.
> - சிலை வடிக்கும் போது அதை இலகுபடுத்த கம்பிகளை ஆதாரமாகப் பயன்படுத்த வேண்டும் என்பது.
> - கருவிகளைப் Tools பயன்படுத்துவதால் நுட்பமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தலாம் என்பது.
> - சிலை வடிக்கும் போது சமநிலை பற்றி விசேட கவனம் செலுத்த வேண்டும் என்பது.

**(15 நிமிடங்கள்)**

## கணிப்பீடு மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- மனிதனின் ஓய்வு பல நிலைகள் மூலம் காணலாம் என்று கூறுவர்.
- சிலை வடிக்கும் போது களி இலகுவான ஊடகம் என ஏற்றுக் கொள்வர்.
- களி மண்ணைப் பயன்படுத்தி மனித உருவங்களை உருவாக்குவர்.
- படிப்படியாக அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்படுவர்.
- கருவிகளை சரியான முறையில் கையாள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வு / செயற்பாட்டுப் படிவம்.
## "ஓய்வெடுக்கும் ஒரு மனிதன்"

- வகுப்பில் காட்சிப்படுத்திய சித்திரங்களை/புகைப்படங்களை நேரடியாக அவதானிக்குக.
- ஓய்வெடுக்கும் மனிதனின் அசைவுகளை பரிமட்டாக வரைக.
- வெளியில் அகன்று செல்லும்/விரிந்து செல்லும் பகுதிகளை குறைத்துக் கொள்க.
- பதப்படுத்திய களியை ஒரு அங்குல தடிப்பில் மெல்லிய தகட்டின் மீது தட்டி எடுக்குக.
- அமைக்கப்பட்ட களித்தட்டின் மீது டிமை கடதாசியில் வரைந்த அமைப்பை வைத்து பிரதி செய்து கொள்க.
- அமைப்பை செய்யும் போது களிமண்ணை சேர்த்தும், அகற்றியும் தேவையான வடிவத்தை உருவாக்குக.
- தேவையான சந்தர்ப்பங்களில் ஆசிரியரின் துணையுடன் கருவிகளை உபயோகித்து நுட்பமான முறையில் ஆக்கத்தை செய்க.
- ஆக்கம் நன்று உலர்ந்ததும் வர்ணம் தீட்டுக.
- உங்கள் குழுவின் ஆக்கத்தை வகுப்பில் காண்பித்து அதைப் பற்றிய கருத்துக்களை தெரிவிக்குக.
- வகுப்பில் ஏனைய குழுக்களினதும் ஆக்கங்களை மதிப்பீட்டுக்கு உள்ளாக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 5.0** : **பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி சிலைகள், சிற்பங்கள், போன்றவற்றைச் செய்வர்.**

**தேர்ச்சி மட்டம் 5.2** : எளிய வடிவங்களைப் பயன்படுத்தி பல்வேறு மனித நிலைகளை அமைப்பர்.

**செயற்பாடு 5.2.2** : **"பாரம் சுமந்து செல்லும் ஒரு மனிதன்"**

**நேரம்** : 03 பாடவேளைகள்.

**தர உள்ளீடுகள்** :
- 5.2.2.1இல் அடங்கிய செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்கள் போதியளவு வழங்குதல்.
- பாரம் சுமந்து செல்லும் மனித வடிவங்கள் அடங்கிய படங்களின் பிரதிகள்
- பலகைத்துண்டுகள் (15x15x2cm)
- கம்பி, இரும்பு ஆணி, சுத்தியல், குரடு
- டிமை கடதாசி, பென்சில், தூரிகை, வர்ணம் போடத்தக்க பாத்திரங்கள்.
- Plaster of paris கரைத்துக் கொள்ளக்கூடிய அளவான பாத்திரங்கள்.

**கற்றல் கற்பித்தற் செயற்பாடு :**

**படி 5.2.2.1** :
- பாரத்தைச் சுமந்து செல்லும் ஒரு மனிதனின் நிலையை வகுப்பில் ஒரு மாணவனை அழைத்துச் செய்து காண்பிக்குக.
- அவ்வாறு காண்பிக்கப்படும் பல மாதிரி நிலைகளை மாணவர்களுக்குக் காண்பிக்குக.
- அவ்வாக்கங்கள் பற்றி மாணவர்களது கருத்துக்களை வினாவுக.
- கீழேயுள்ள காரணங்கள் மீது கவனஞ் செலுத்தி கலந்துரையாடலை நடத்துக.

> - பாரம் சுமந்து செல்லும்போது உடல் சமநிலையில் இருக்க வேண்டும் என்பது.
> - கம்பி, பிளாஸ்டர் ஒப் பெரிஸ் பயன்படுத்தி சிலை வடிக்கலாம் என்பது.
> - வீட்டில் அல்லது வெளியான இடத்தில் அழகை மெருகூட்ட சிலைகள் பயன்படுத்தலாம் என்பது.

**(10 நிமிடங்கள்)**

**படி 5.2.2.2** :
- 5.2.2.1 இல் உள்ளடக்கிய செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்களை மாணவர்களுக்கு வழங்குக.
- 5.2.2.2 இல் உள்ளடக்கிய படங்கள் கொண்ட பிரதிகளை மாணவர்களுக்குக் காண்பிக்குக.
- தேவையான பொருள்களும், கருவிகளும் மாணவர்களுக்கு வழங்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாணவர்களுக்குப் போதிய அறிவுரை வழங்கி ஆக்கத்தை செய்ய வழிகாட்டுக.
- மாணவர்களது ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்த ஒழுங்குகளை மேற்கொள்க.

**(90 நிமிடங்கள்)**

**படி 5.2.2.3** :

- மாணவர்களது ஆக்கங்களைக் காட்சிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குக.
- தங்களது ஆக்கங்களை சுயமாக மதிப்பிட சந்தர்ப்பம் வழங்குக.
- மற்றவர்களின் ஆக்கங்கள் மெருகூட்டக் கூடியவாறு

  அமையும் படியான கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குக.
- கீழே குறிப்பிட்ட விடயங்களை கருத்திற் கொண்டு கருத்துரையாடலை மேற்கொள்ளுக.

> - ஆக்கத்தில் ஈடுபடமுன் அதன் அமைப்பை (Sketch) ஒன்றை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது.
> - கம்பியால் அமைக்கப்பட்ட சட்டத்தின் மீது Plaster of paris பூசி சிலையை நன்றாக செய்து கெள்ள முடியும் என்பது.
> - மேற்பரப்பு பல விதங்களில் வெளிப்படுத்த Plaster of Paris பயன்படுத்த இயலும் என்பது.
>
>   (ஊற்றுவதன் மூலம், திரவமாக ஊற்றுவதன் மூலம், வெட்டுவதன் மூலம், சுரண்டுவதன் மூலம்)
> - வர்ணங்களைப் பயன்படுத்தி சிலையை மேலும் மெருகூட்டலாம் என்பது.

**(15 நிமிடங்கள்)**

## கணிப்பீடு மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- Plaster of Paris பயன்படுத்தி சிலை வடிக்கும் படிமுறைகளை சொல்வர்.
- சிலை வடித்தல் மூலம் பொறுமை, ஆக்கத்திறன் வெளிப்படுத்தக்கூடியமை, ஓய்வு நேரத்தை பயனுள்ளவாறு பயன்படுத்தல் போன்றவற்றை உண்டாக்கும் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- கம்பி, Plaster of Paris மூலம் சிலை செய்வர்.
- சரியான படிமுறைகளுக்கு ஏற்ப செயற்பாடுகளில் ஈடுபடுவர்.
- ஊடகங்களின் இயல்புகளை இனங்கண்டு அவற்றைப் பயன்படுத்துவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வு / செயற்பாட்டுப் படிவம்.
## "பாரம் சுமந்து செல்லும் ஒரு மனிதன்"

- உங்களுக்கு முன்னால் உள்ள மனிதனின் மாதிரி நிலையை நன்றாக நோக்குக.
- பாரம் சுமந்து செல்லும்போது உடலின் அமைப்பு பற்றி கவனம் செலுத்துக.
- உங்களுக்கு தரப்பட்ட படங்களை நன்றாகக் கவனிக்குக.
- மேலே நோக்கிய விடயங்களுக்கு ஏற்ப பாரம் சுமந்து செல்லும் ஒருவரின் நிலையை வெளிப்படுத்தும் ஒரு சிலை செய்ய உதவும் ஒரு அமைப்பை (Sketch) வரைக.
- பலகை ஒன்றை ஆதாரமாகக்கொண்டு தடித்த கம்பியைப் பயன்படுத்தி சிலையின் வடிவத்தை உருவாக்குக.
- Plaster of Paris தடவுவதற்கு இலகுவாக உருவாக்கப்பட்ட மூல வடிவம் மீது மெல்லிய கம்பிகளைச் சுற்றி வடிவங்களை வெளிப்படுத்திக் கொள்க.
- ஒரே தடவையில் செய்தால் உடனடியாக உலர்ந்து விடும் என்பதால் போதிய அளவில் கொஞ்சம் கொஞ்சமாக கலவையை செய்து கொள்க.
- சுரண்டுவதால், தடவுவதால், ஊற்றுவதால் பலவிதமான வெளிப்புறத் தோற்றங்களை வெளிப்படுத்தி சிலையை அமைக்குக.
- உங்களுக்குப் பிடித்த பல வர்ணங்களைப் பயன்படுத்தி சிலை மீது வர்ணம் பூசுக.
- உங்களது செயற்பாட்டை வகுப்பில் காட்சிப்படுத்துக.



8. S. P. C. 081055

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி 6 : **சமய கலாச்சார அடிப்படையில் தேசிய, சர்வதேச ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட கலைஞர்களின் கலை நிர்மாணங்களையும் தற்காலக் கலை ஆக்கங்களையும் வெகுசன தொடர்பு சாதனங்கள் மூலம் அறிந்து கொள்வர்.**

தேர்ச்சி மட்டம் 6.1 : இலங்கையின் பாரம்பரிய நாட்டார் கலைகளை மதிப்பர்.

செயற்பாடு 6.1.1 : சமயக் கிரியைகள் (சாந்தி கர்மய) உடன் தொடர்புடைய குருத்தோலைக் கலையை மதிப்பிடுவோம்.

நேரம் : 02 பாடவேளை

தர உள்ளீடு :
- இணைப்பு 6.1.1.1 அடங்கிய ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்
- இணைப்பு 6.1.1.2 அடங்கிய பத்திரம்
- குருத்தோலையால் செய்யப்பட்ட ஓர் ஆக்கம் (உதாரணம்: தாமரைப்பூ, நட்சத்திரம், பாம்பொன்று)
- குருத்தோலை

**கற்றல் - கற்பித்தல் செயற்பாடு**

**படி 6.1.1.1** :
- குருத்தோலையால் செய்யப்பட்ட ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- அந்நிர்மாணம் பற்றிய கருத்துக்களை மாணவரிடம் வினாவுக.
- கீழே உள்ள விடயங்களைக் கலந்துரையாடுக.

| |
|---|
| • குருத்தோலைகளால் சோடனைகளையும், சிற்பங்களையும் செய்யலாம் என்பது.<br>• தேசிய சமயக் கிரியையுடன் தொடர்புடைய குருத்தோலை சோடனைகளையும் சிற்பங்களையும் காணலாம் என்பது.<br>• தேசிய ரீதியில், குருத்தோலை சோடனையும், சிற்பமும் உயிர்ப்புள்ள கலையாக தனித்துவம் பெறுகிறது என்பது. |

**(10 நிமிடம்)**

**படி 6.1.1.2** :
- மாணவர்களை மூன்று குழுக்களாக்குக.
- இணைப்பு 6.1.1.1 இல் அடங்கிய செயற்பாட்டுப் படிவங்களை வழங்குக.
- இணைப்பு 6.1.1.2 இல் அடங்கிய வாசிப்புப் படிவங்களை வழங்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குழுவொன்றுக்கு இரண்டு வீதம் குருத்தோலைகளை வழங்குக.

- குருத்தோலைகளைப் பயன்படுத்தி விரும்பிய ஓர் ஆக்கத்தில் ஈடுபட சந்தர்ப்பம் வழங்குக.

- தேவையான அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

- சிறுவர் நூல்களின் வெளிப்புற அட்டையை ஒழுங்கமைக்க

**(55 நிமிடங்கள்)**

**படி 6.1.1.3** :

- மாணவர்களின் ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.

- ஏனைய மாணவர்களது ஆக்கங்கள் பற்றிக் கருத்துக்கூற சந்தர்ப்பம் வழங்குக.

- கீழே உள்ள விடயங்களுடன் கலந்துரையாடுக.

> - மலைநாட்டு, கரையோர, சப்பிரகமுவ சம்பிரதாயத்துக் குட்பட்ட தேசிய சமயக் கிரியை ஊடாக குருத்தோலை சோடனைகளையும், சிற்பங்களையும் இனங்காணலாம் என்பது.
> - சமயக் கிரியை உடன் தொடர்புபட்ட குருத்தோலை சோடனைள், சிற்பங்கள் மேடை அலங்காரத்திற்கு (நிகழ்ச்சி நடைபெறும் இடம்), நடன அணிகலன்கள், உபகரண அலங்காரம் என மூவகைப்படும் என்பது.
> - குருத்தோலை சோடனைகள் எளிய சோடனை, சிறப்புச் சோடனை என இருவகைப்படும் என்பது.
> - சமயக் கிரியை உடன் தொடர்புடைய குருத்தோலை சோடனையும், சிற்பமும் பல நிகழ்வுடன் தொடர்புடையதாக இருப்பதுடன் பேய்களுக்குக் கொடுக்கும் பூசைப் பொருள், யகன் சொசிலி சோடனைகள், ஆபரணங்களின் சோடனைகள், பூஜைப் பொருள்களின் சோடனைகள் என வெவ்வேறாக இனங்காணலாம் என்பது.
> - குருத்தோலை சோடனைக்காக கூர்மையான கத்தியொன்றை பயன்படுத்த வேண்டும் என்பது.
> - குருத்தோலை சோடனைக்காகவும், சிற்பத்துக்காகவும் அது பற்றிய நல்லறிவுடன், அனுபவத்தை நுட்பமான முறையில் பெற்றிருப்பது அவசியம் என்பது.

**(15 நிமிடங்கள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீட்டு மதிப்பீட்டுப் பிரமாணங்கள்

- பாரம்பரிய சமயக் கிரியைகளை கூறுவர்.
- பாரம்பரிய சமயக் கிரியைகளுடன் தொடர்புடைய கலைப்படைப்புகள் உள்ளதாக ஏற்றுக் கொள்வர்.
- குருத்தோலைகளைப் பயன்படுத்தி ஆக்கங்களைச் செய்வர்.
- குழு மனப்பான்மையுடன் செயற்பாட்டில் ஈடுபடுவர்.
- தேசிய கலை இலட்சணங்களை மதிப்பிடுவர்.

**இணைப்பு 6.1.1.1**

### ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்

**சமயக் கிரியை உடன் தொடர்புடைய குருத்தோலைக் கலையை மதிப்பிடுவோம்.**

- தரங்கள் குழுவுக்கு வழங்கப்பட்ட இரு குருத்தோலைகளைப் பயன்படுத்தி குழுவில் உள்ள அனைவரும் சேர்ந்து விரும்பிய ஒரு நிர்மாணத்தில் ஈடுபடுக.
- தங்களுக்கு வழங்கப்பட்ட படிவத்தை குழுவில் அனைவருக்கும் கேட்கும் வண்ணம் ஒருவர் உரத்து வாசிக்குக.
- உங்கள் குழுவுக்குக் கிடைத்த வினாக்களுக்கு விடையளிக்க.
- கலந்துரையாடுவதற்கு தாங்கள் திரட்டிய தகவல்களையும் குருத்தோலை ஆக்கத்தையும் சமர்ப்பிக்குக.
- குழுக்கள் திரட்டிய தகவல்களை சமர்ப்பிக்கும் போது, ஏனைய குழுக்களால் திரட்டப்பட்ட தகவல்களையும் குறித்துக்கொள்க.

**குழு 1**

1. சமயக் கிரியை என்றால் என்ன?
2. தேசிய சமயக் கிரியை உடன் தொடர்புடைய குருத்தோலை சோடனைகள், சிற்பங்கள் காணக்ககூடிய பிரதான நாட்டிய சம்பிரதாயங்கள் எவை?
3. சமயக் கிரியைகளில் குருத்தோலை பாவனையை வகுக்கக்கூடிய முறைகள் எவை?

**குழு 2**

1. குருத்தோலை சோடனைகள் இருவகைக்குள் அடங்கும். அவை எவை?
2. மேற்படி விடைக்குரிய இரு சோடனை வகைகளையும் விளக்குக.
3. குருத்தோலை சோடனைகளையும், சிற்பங்களையும் செய்யத் தேவையான உபகரணங்கள் எவை?

**குழு 3**

1. சமயக் கிரியையுடன் தொடர்புபட்டுக் காணக்கூடிய குருத்தோலை சிற்பங்கள் உருவாக்கும் 5 சந்தர்ப்பங்களைத் தருக.
2. அவ்வொவ்வொரு சந்தர்ப்பத்திலும் நிர்மாணிக்கும் சிற்ப வகைகளை வெவ்வேறாகத் தருக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைப்பு 6.1.1.2**

## வாசிப்புப்பத்திரம்

- தேசிய சமயக் கிரியை உடன் தொடர்புபட்ட குருத்தோலைக்கலை

- ''சாந்தி' கிடைப்பதற்காக வேண்டி நடத்தப்படும் சமயக் கிரியை எனப்படும்.

- இலங்கையின் சமயக் கிரியை மலைநாட்டு, கரையோரம், சப்பரகமு சம்பிரதாயத்தை யொட்டிக் காணப்படும்

- சமயக் கிரியையுடன் தொடர்புடைய குருத்தோலைக் கலைகள் பலவற்றைக் காணலாம்.

- சமயக் கிரியை பாவனைக்கேற்ப மூன்று வகையான குருத்தோலை சோடனைகள் உள்ளன.
    1.
    2.
    3.

- குருத்தோலை ஆக்கங்கள்/சோடனைகள் இருபெரும் பிரிவுகளாக வகுக்கலாம்.
    1. எளிய குருத்தோலை சோடனை
    2. சிறப்புக் குருத்தோலை சோடனை

- எளிய குருத்தோலை நிர்மாணத்தில் தேவதோடு, யக்தோடு, கபகஹ அலங்காரம், கனவெல் அலங்காரம், ஈகஹ, பிட்டவரல, விசிறி, அத்மல, மல்பெல ஆக்குதல், 'கொக் ரெஹன' கட்டுதல் போன்றவை அடங்கும்.

- சிறப்புக் குருத்தோலை நிர்மாணத்தில் கட்டகளியாவ, கப்புகச, தாமரப்பூ, 'குருத்தோலைக் கலை' போன்றவை அடங்கும்.

- சமயக் கிரியையுடன் தொடர்புடைய குருத்தோலை சிற்பம் பயன்படுத்தப்படும் பல சந்தர்ப்பங்கள்.

    1. பிரித் அலங்காரம்
    2. நிகழ்ச்சி நடைபெறும் மண்டப அலங்காரம்
    3. கலைஞர்களின் உபகரண அலங்காரம்
    4. ஆபரண அலங்காரம்
    5. பூஜா வஸ்து (பூஜைப் பொருள்) அலங்காரம்

- பிரித்யுடன் தொடர்புடைய சிற்பங்களாக பெலதி முதுன்கொல, பனா சிற்பம் என்பவற்றை இனங்காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ரங்கபாண்ட, யம முகுர, குடை, தம்மட்டம், ஆலவட்டம், துவக்குவ, ரீரிகெலிய, மஞ்சள் நீர்


* குருத்தோலை ஆபரணங்கள், ஆடையணிகளாக சமயம் கட்டாகொல, 'சமயத்தோடு' என்பவற்றைக் காணலாம்.

* குருத்தோலை சிற்பம் செய்ய கூரான கத்தி பயன்படுத்தப்படும்.

* அறிவுபூர்வமாகவும், நுட்பமான முறையிலும் ஆக்கக்கூடிய குருத்தோலை சோடனைகள், சிற்பங்கள் அழகாக இருப்பதுடன் தரமானதாகவும் காணப்படும்.

* தேசிய ரீதியில் தனித்துவம் கொண்ட .......................... உடன் தொடர்புடைய குருத்தோலைக் கலையைக் காத்தல் எமது கடமையும் பொறுப்பும் ஆகும்.

ஈ கஹ



தாமரைப்பூ



குடை



பீதேனி



கபகஹ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 6 :** **சமய கலாச்சார அடிப்படையில் தேசிய, சர்வதேச ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட கலைஞர்களின் கலை நிர்மாணங்களையும் தற்காலக் கலை ஆக்கங்களையும் வெகுசன தொடர்பு சாதனங்கள் மூலம் அறிந்து கொள்வர்.**

**தேர்ச்சி மட்டம் 6.2 :** இலங்கையின் பாரம்பரிய நாட்டார் கலைகளை மதிப்பர்.

**செயற்பாடு 6.2.1 :** களிமண் ஆக்கங்களை மதிப்போம்.

**காலம் :** 03 பாடவேளை

**தர உள்ளீடு :**
- இணைப்பு 6.2.1.1 அடங்கிய ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்
- இணைப்பு 6.2.1.1 அடங்கிய வாசிப்புப் பத்திரம்
- பல அலங்கார வேலைப்பாடுகள் கொண்ட களி மண் பாத்திரங்களும் வேறு ஆக்கங்களும்

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடு

**படி 6.2.1.1 :**
- பல அலங்கார வேலைப்பாடுகள் கொண்டு உருவாக்கப்பட்ட களிமண் பாத்திரங்களை மாணவர்களுக்குக் காண்பிக்குக.
- அவை பற்றிய கருத்துக்களை வினவுக.
- கீழே உள்ள விடயங்களைக் கலந்துரையாடுக.

> - மட்பாண்டத் தொழில் தொண்டு தொட்டு இருந்தது என்பது.
> - மட்பாண்ட உற்பத்தி தொழில் ரீதியாக வளர்ச்சியடைந்த ஒரு நாட்டார் கலை வகை என்பது.
> - களி மண்ணை உபயோகித்து பல ஆக்கங்களை செய்யலாம் என்பது.
> - அடுத்தடுத்த பல செயற்பாடுகளுக்குப் பின் ஒரு மட்பாண்டம் உருவாகும் என்பது.

**(15 நிமிடம்)**

**படி 6.2.1.2 :**
- இணைப்பு 6.2.1.1 இல் அடங்கிய ஆய்வு/செயற்பாட்டுப் படிவங்களை வழங்குக.
- உரிய முறையொன்றைப் பயன்படுத்தி வாசிப்புப் பத்திரத்தை வாசிக்க வாய்ப்பு அளிக்குக.
- வாசிப்புப் பத்திரத்திற்கேற்ப செயற்பாட்டு பத்திரத்தில் உள்ள செயற்பாட்டில் மாணவர்களை ஈடுபடுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உரிய ஒப்படையை செய்ய மாணவர்களுக்கு வழிகாட்டி, மிகச் சிறந்த ஆக்கங்களைத் தெரிவுசெய்து பாடசாலை சுவர் பத்திரிகையில் ஒட்ட உரிய ஏற்பாடுகள் செய்க.

**(80 நிமிடங்கள்)**

**படி 6.2.1.3** :
- மாணவர்களுடைய விடைத்தாள்களை ஒவ்வொருவருக் கிடையில் மாற்றி வாசிக்கச் செய்க.
- விடைகளை கலந்துரையாடும் பொழுது அவற்றின் நம்பகத் தன்மையை/பிழையற்ற தன்மையை உறுதிப்படுத்துக.
- கீழே உள்ள விடயங்களுடன் கலந்துரையாடுக.

> - மட்பாண்டத் தொழிலை, நாட்டார் கலையொன்றாக மதிக்க வேண்டும் என்பது.
> - பல தேவைகளை நிறைவேற்ற கலை வேலைப்பாடுகள் கொண்ட மட்பாண்டங்கள் பயன்படுத்துகிறோம் என்பது.
> - பாவனையின் இலகுத்தன்மையையும் அழகையும் கருதி பல அலங்காரங்களைக்கொண்டு மட்பாண்டம் உற்பத்தி செய்யப்படுகிறது என்பது.
> - மட்பாண்டங்களை அழகுபடுத்த பாரம்பரிய அலங்கார வேலைப்பாடுகள் பயன்படுத்தப்படுகிறது என்பது.
> - வனைச் சில்லைப் பயன்படுத்துவதன் மூலமும், அப்பு வதன் மூலமும், வடித்தல் மூலமும் மட்பாண்டங்களை உருவாக்கலாம் என்பது.
> - இறுதியாக உற்பத்திப் பொருளை சுட வேண்டும் என்பது.

**(25 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டுப் பரிமாணங்கள்

- களிமண் ஊடகத்தைப் பயன்படுத்தி செய்யப்படும் ஆக்கத்தை விபரிப்பர்.
- களிமண் உலகப்புகழ் பெற்ற ஊடகமாக இருப்பதை ஏற்றுக்கொள்வர்.
- மட்பாண்டத் தொழிலைப் பற்றி பத்திரிகை ஒன்றுக்கு ஆக்கம் ஒன்றை உருவாக்குவர்.
- தேசிய பொருள்களைப் பயன்படுத்துவர்.
- தேசிய உற்பத்திப் பொருள்களை மதிப்பிடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்

## ''மட்பாண்டத் தொழிலை மதிப்போம்.''

- ஆசிரியர் வழங்கிய வாசிப்புப் படிவத்தை அவதானத்துடன் வாசிக்கவும், உரிய கால எல்லைக்குள் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும் கேள்வியுடன் பதிலையும் எழுதி ஆசிரியரிடம் ஒப்படைக்கவும்.

- மட்பாண்டத் தொழில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட தொன்மையான இடங்கள் எவை?

- மட்பாண்டத் தொழில் மிகவும் வளர்ச்சியடைந்த நாடும் அதன் கால எல்லையையும் குறிப்பிடுக.

- இத்தொழிலுக்கு பயன்படுத்தப்படும் ஊடகம் எது?

- களிமண் ஊடகத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் முக்கியமான 3 பொருள் வகைகளும் எவை? அவற்றுக்கு இரு உதாரணங்கள் வீதம் தருக.

- தொண்டு தொட்டு நிலவிய இரு மட்பாண்டத் தொழில் நுட்ப முறைகளும் எவை?

- தற்காலத்தில் இலங்கையில் பயன்படுத்தப்படும் தொழில் நுட்ப முறைகள் மூன்று உள்ளன. அவை எவை?

- மேற்குறிப்பிட்ட தொழில் நுட்பமுறைகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் இரண்டு வீதம் தருக.

- மட்பாண்டங்களை அழகுபடுத்தும் முறைகள் எவை?

- மட்பாண்டங்களை அழகுபடுத்தப் பயன்படுத்தும் பாரம்பரிய அலங்காரங்கள் மூன்று தருக.

- மட்பாண்டத் தொழிலுக்குக் களிமண்ணை பெறக்கூடிய மூன்று இடங்களும் தற்போது மட்பாண்டத் தொழிற்சாலைகள் அமைந்துள்ள மூன்று இடங்களும் குறிப்பிடுக.

### ஒப்படை

நீங்கள் பெற்றுக்கொண்ட விடைகளுடன் மேலும் பல தகவல்களைத் திரட்டி பத்திரிகை ஒன்றில் பிரசுரிக்க ஆக்கம் ஒன்றை எழுதுக.



9. S. P. C. 081055

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைப்பு 6.2.1.1**

## வாசிப்புப்பத்திரம்

## மட்பாண்டத்தொழில்

**வரலாற்று நிலை:**

உலகத்தின் தொன்மை வாய்ந்த ஆற்றுப் பள்ளத்தாக்கு நாகரிகத்துடன் மட்பாண்டத் தொழில் தொடர்புபட்டிருந்ததற்கான சான்றுகள் பெறப்பட்டுள்ளன.

1. யுப்பிரடீஸ் டைகிரீஸ் நாகரிகம் (ஈரான், ஈராக்)
2. நைல் நதிப் பள்ளத்தாக்க நாகரிகம் (எகிப்து)
3. கொவங்கோ, யங்சிகியாங் நாகரிகம் (சீனா)
4. இந்து நதி நாகரிகம் (பாகிஸ்தான்)

மட்பாண்டத் தொழிலில் முன்னிலையில் இருப்பது சீனாவாகும். கி.பி. 600 - 700 கால எல்லை யில் அதனை மெருகூட்டி போசிலேன் பொருள்கள் உற்பத்தி செய்யும் அளவுக்கு அத்தொழில் வளர்ச்சியடைந்திருந்தது.

தேவைகளுக்கேற்ப வியாபார மத்திய நிலையமாக இருந்த இலங்கையிலும் மட்பாண்டத் தொழில் பரவியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

எவ்வாறாயினும் ஆதிகாலம் தொடக்கம் இன்று வரை சிறந்த உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்வதில் மட்பாண்டத் தொழில் ஈடுபட்டு வருகிறது.

## இலங்கையின் பாரம்பரிய மட்பாண்டத் தொழில்

**ஊடகம்**: மட்பாண்டப் பொருள்களை உற்பத்தி செய்யப் பொருத்தமான ஊடகம் களிமண் ஆகும்.

இவை மட்பாண்டக் களி அல்லது அலங்காரப் பொருட்கள் செய்யப் பயன்படும் களி என அழைக்கப்படுகிறது.

**உற்பத்தி பொருள்** : பாவனைப் பொருள், கட்டடத் தேவைகளுக்குப் பயன்படுத்தும் பொருள்கள் அழகுக்காக வைக்கப்படும் பொருள்கள் என உற்பத்திப் பொருள்கள் மூன்று வகைப்படும்.

**பாவனைப் பொருள்கள்** : குடம், பானை, சட்டி, அரிசட்டி, மூடி, கொரஹ, சோற்றுப்பானை, தாளி, கூசா

**கட்டடத் தேவைகளுக்குப் பயன்படும் பொருள்கள்** : கூரை ஓடு, முகட்டு ஓடு. வடிம்பு ஓடு, கொத்த, செங்கல், அலங்கார செங்கல், தளத்துக்குப் பதிக்கும் செங்கல் (பிக்கெட), கிணற்றுக்கான செங்கல்கள் (உறாகெட்ட)

**அழகுக்காக வைக்கப்படும் பொருள்கள்** : தாளி, பரணி, பாத்திரம், கலசம், மனித உருக்கள், விலங்குகள்

**களிமண் உற்பத்தி**

தொன்மைக்காலத்தில் இரு நுட்ப முறைகைளைப் பயன்படுத்தினர்.

1. கையால் பொருள்களைச் செய்தல்

கையால் வனைந்து, காற்றில் உலரவிட்டு பின் சுட்டுக்கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வனைச் சில்லைப் பயன்படுத்தி பொருள்களைச் செய்தல்

கையால் சுழற்றக்கூடிய சில்லின் மேல் மண் பிடியை வைத்து ஒருவர் சில்லை சுற்றுகையில் மற்றவர் கையால் வனைந்து பொருளைச் செய்வர். (கி.பி. 30ஆம் தசாப்தமளவில் எகிப்தில் வனைச்சில்லு உருவாகியது. சூளையில் சுட ஆரம்பித்ததும் இக்காலப்பகுதியில் தான்.)

இலங்கையில் தற்போது மூன்று வகையான நுட்பமுறைகளைப் பயன்படுத்தி மட்பாண்டங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

1. பாதங்களால் இயக்கப்படும் வனைச்சில்லு - கால் வனைதல் சில்லு
2. கைகளால் இயக்கும் வனைச்சில்லு - கை வனைதல் சில்லு
3. அப்புதலும் வெட்டி எடுத்தலும்

பாதங்களால் இயக்கும் வனைச்சில்லைப் பயன்படுத்தி பூச்சாடி, குடம், கூசா, சட்டி, மணி போன்ற சிறிய அளவிலான பொருள்களும் கையால் இயக்கும் வனைச் சில்லைப் பயன்படுத்தி பெரிய அளவிலான பீப்பா, போச்சி போன்ற பொருள்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. அப்புவதாலும் வெட்டி எடுப்பதாலும் அலங்காரப் பொருள்களை உற்பத்தி செய்யும்போதும் அலங்கரிக்கும் போதும் பலகையாலும் உலோகத்தாலும் ஆக்கப்பட்ட கருவிகளைப் பயன்படுத்துவர். பொருள்களை அலங்கரிக்கும் போது உயர் புடைப்பு முறையையும், தாழ் புடைப்பு முறையையும் பன்படுத்துவர். பச்சைக் களிமண் பொருள்களை காற்றில் உலர விட்டு இறுதியாக சூழையில் சுட்டு எடுப்பர்.

பாரம்பரிய அலங்கார வடிவமான இரட்டைச்சுழி, கொடிச்சுழி (சுழிவெல), நீரலை, சவடி, சீப்பு, பலாப்பெத்தி சுழி, தனியிழை, ஈரிழை (லியவெல்)கொடி அலங்காரம், பேருண்டபட்சி, போபத், கதிரமல,.................... அன்னப்பட்சி, சிங்கம் போன்ற வடிவங்களைப் பயன்படுத்தி பொருள்களை அழகுபடுத்தியுள்ளனர்.

**ஊடகத்துக்கு பிரபல்யம் வாய்ந்த பிரதேசங்கள்**

களனி, மாத்தளை, ஹங்வெல்ல, கடுவெல, இரத்தினபுரி, கொஸ்லந்த, கம்பஹா, வெயாங் கொடை, ஹொரணை, கண்டி, தும்பறை, களுத்துறை

**தற்காலத்தில் மட்பாண்டத் தொழிற்சாலைகள் அமைந்த பிரதேசங்கள்**

| | |
|---|---|
| களனி | - நவகமுவ |
| கேகாலி | - மொலகொட |
| அனுராதபுரம் | - ரம்பேவ |
| குருணாகல் | - பண்டுவஸ்நுவர, பிதுருவெல்ல, கல்கமுவ |
| மாத்தறை | - கபுகம, பெலியத்த, யடியன, கிரிந்த |
| களுத்துறை | - தெதியவல |

**மேலதிகத் தகவல்களைப் பெற**

மட்பாண்டத்தொழில் - எச்.எம். சோமரத்ன

மத்தியகாலச் சிங்களக்கலை - ஆனந்த கே. குமாரசுவாமி

Britannica Ready Reference Encyclopedia

ஆகியவற்றைப் பயன்படுத்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 6.0** : **சமய கலாச்சார அடிப்படையில் தேசிய, சர்வதேச ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட கலைஞர்களின் கலை நிர்மாணங்களையும் தற்காலக் கலை ஆக்கங்களை யும் வெகுசன தொடர்பு சாதனங்கள் மூலம் அறிந்து கொள்வர்.**

**தேர்ச்சி மட்டம் 6.2** : இலங்கையின் பாரம்பரிய நாட்டார் கலைகளை மதிப்பர்.

**செயற்பாடு 6.2.2** : பித்தளை வேலைப்பாடுகளை மதிப்போம்.

**நேரம்** : 02 பாடவேளை

**தர உள்ளீடு** :
- இணைப்பு 6.2.2.1 அடங்கிய ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத் தல் படிவம்
- வகுப்பில் மாணவர் அனைவரும் வாசிக்கக்கூடிய வகையில் தயார் செய்யப்பட்ட இணைப்பு 6.2.2.2 இல் அடங்கிய வாசிப்புப் பத்திரம்
- பித்தளை கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் (சிறிய அளவிலான குத்து விளக்கு, சிறிய பூச்சாடி)
- கம்டேப் (Gum tape)

**கற்றல் - கற்பித்தல் செயற்பாடு**

**படி 6.2.2.1** :
- பித்தளை கொண்டு உருவாக்கப்பட்ட பல பொருள்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- அவ்வாக்கங்கள் பற்றிய மாணவர்களது கருத்துக்களை வினவுக.
- கீழே உள்ள விடயங்களைக் கலந்துரையாடுக.

> - பித்தளை ஆக்கத்தொழில் பாரம்பரிய நாட்டார் கலை என்பது.
> - பித்தளையைப் பயன்படுத்தி கலைவடிவம் கொண்ட பல பொருள்களை அமைக்கலாம் என்பது.
> - பித்தளைப் பொருள்கள் முக்கியமாக இரு முறை களுக்கு ஏற்ப செய்யப்படுகிறது. என்பது.

**(10 நிமிடம்)**

**படி 6.2.2.2** :
- இணைப்பு 6.2.2.1 இல் அடங்கிய செயற்பாட்டுப் படிவத்தை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 6.2.2.1 இல் அடங்கிய வாசிப்புப் பத்திரத்தை வகுப்பில் எல்லா மாணவர்களும் வாசிக்ககூடிய விதத்தில் காட்சிப்படுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வாசிப்புப் படிவத்தை நன்றாக வாசித்து செயற்பாட்டுப் படிவத்தில் உள்ள அட்டவணையை பூர்த்தி செய்ய ஏற்பாடு செய்க.

**(55 நிமிடங்கள்)**

**படி 6.2.2.3** :

- மாணவர்களது விடைத்தாள்கள் அவர்களிடம் இருக்கும் போதே சரியான விடைகளை கலந்துரையாடுக.
- மாணவர்கள் தமது தவறுகளை புரிந்த பின் அவற்றைத் திருத்திக் கொள்ள அறிவுரை வழங்குக.
- கீழே உள்ள விடயங்களுடன் கலந்துரையாடுக.

| |
|---|
| • பல இன மக்களுக்கிடையில் பிரபல்யமான பாரம்பரிய நாட்டார் கலையாக விளங்கும் பித்தளைத் தொழிலை மதிக்க வேண்டும் என்பது.<br>• மானிடத் தேவைகளுக்காக பூச்சாடி, குத்துவிளக்கு, அணிகலன்களை வைக்கப் பயன்படும் பெட்டிகள், யானை உருவங்கள் போன்ற பொருள்கள் உபயோகப் படும் என்பது.<br>• பித்தளைப் பொருள்களை அலங்கரிக்க லியவெல, பலாபெத்தி, தாமரைப்பூக்கள், ஹம்சபூட்டுவ, சூரியன், சந்திரன் போன்ற தொன்மையான சிங்கள அலங்கார வடிவங்களை பயன்படுத்துவர் என்பது.<br>• தட்டுதல் மூலமும், வளர்த்தல் மூலமும் பித்தளைப் பொருட்களை உருவாக்கலாம் என்பது.<br>• வார்த்தலில் இரு முறைகளுக்கு ஏற்ப செய்யப்படுகிறது என்பது.<br>• எமது நாட்டின் பல பிரதேசங்களில் இன்னும் இத்தொழிலைக் காணலாம் என்பது. |

**(15 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டுப் பரிமாணங்கள்

- பித்தளைப் பொருள்களின் பெயர்களைக் குறிப்பிடுவர்.
- பாரம்பரிய நாட்டார் கலைகள் பற்றிக் கற்றல் அவசியம் என ஏற்றுக்கொள்வர்.
- பித்தளைத் தொழிலுக்கு தேவையான விடயங்களை அட்டவணைப் படுத்துவர்.
- தேசிய தொழில்களை மதிப்பர்.
- பாரம்பரிய ஆக்கங்களை பாதுகாப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்

**ஆசிரியர் காண்பித்த வாசிப்புப் படிவத்தை நன்றாக நோக்கிய பின் கீழே உள்ள அட்டவணையை பூர்த்தி செய்க.**

<table>
<tr><td colspan="2">• பித்தளைத் தொழில் எவ்வளவு தொன்மையானது என்பது</td><td></td></tr>
<tr><td colspan="2">• தற்போது உள்ள பிரதேசங்கள்</td><td></td></tr>
<tr><td colspan="2">• பித்தளைப் பொருள்கள் உற்பத்தி செய்யும் முறைகள்</td><td></td></tr>
<tr><td colspan="2">• பித்தளைப் பொருள் உற்பத்திக்குப் பயன்படும் மூலப் பொருள்கள் அமைக்கப்படும் விதம்</td><td></td></tr>
<tr><td rowspan="2">• பித்தளையை உபயோகித்து செய்யப்படும் பொருள்கள் 5 வீதம்</td><td>தட்டுதல் மூலம்</td><td rowspan="2"></td></tr>
<tr><td>வார்த்தல் மூலம்</td></tr>
<tr><td colspan="2">• பித்தளைப் பொருள்களை அலங்கரிக்கப் பயன்படுத்தப்படும் அலங்கார வடிவங்கள் ஐந்து</td><td></td></tr>
</table>

- ஆசிரியரின் கலந்துரையாடலுக்கு ஏற்ப சரியான விடைகளை உறுதிப்படுத்திக்கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பு 6.2.2.2

# வாசிப்புப்பத்திரம்

## பித்தளைத்தொழில்

### வரலாற்று நிலை

கி.மு. 1200ஆம் காலம் தொடக்கம் பித்தளைத்தொழில் இருந்து வருகிறது எனக் குறிப்பிடலாம். சீனா அடங்கலாக கீழைத்தேய நாடுகளில் அக்காலத்தில் இருந்து பித்தளைத் தொழில் இருந்து வருகிறது. கி.மு. 220 அளவில் சீனாவில் பித்தளைத்தொழில் வியாபித்து இருந்தது. கி.மு. 220 க்குப் பின் உரோம் வரை அது பரவியதாக நூல்கள் சான்று பகர்கின்றன.

### இலங்கையின் பாரம்பரிய பித்தளைத்தொழில்

பித்தளைத்தொழிலுக்கு உதவும் பித்தளை உற்பத்தி செய்யப்பட்ட ஒரு உலோகம் ஆகும். செப்பு (Copper), நாகம் (Zinc) போன்ற உலோகங்கள் கலந்து பித்தளை உருவாக்கப்படும்.

### உற்பத்திப் பொருட்கள்

பித்தளைப் பொருள்களில் பாவனைப்பொருள்கள். கட்டட நிர்மாணப் பொருள்கள், வீட்டுப் பொருள்கள், அழகுக்கு வைக்கப்படும் பொருள்கள் என்பன அடங்கும்.

### பாவனைப் பொருட்கள்

கூசா, பாக்குவெட்டி (கிரய), கொதலய (பானை வடிவம் கொண்ட சிறிய பொருள்), கெண்டி (ஆசிநீர் ஊற்றப்படும் கெத்தல் வடிவம் கொண்டது), தட்டு, நகைப்பெட்டி, குத்துவிளக்கு, (சேரக்கால) பீங்கான் தட்டு போன்றவற்றை அடுக்கி வைக்கம் இறாக்கை, வெற்றிலை தட்டு

### கட்டட நிர்மாணத்துக்கு உதவும் பொருட்கள்

சரநேர் (பிணைச்சல், பூட்டுத்தகடு, சாவிப் பிணைப்பு, சாவிகள்)

### அலங்காரப் பொருட்கள்

சுவர் அலங்காரங்கள், விலங்குருவங்கள்

### பாரம்பரிய பித்தளைப்பொருள் உற்பத்தி

ஆதிகாலம் தொடக்கம் இருந்து வரும் இரு நுட்ப முறைகள்

1. தகட்டு வேலை
2. வார்த்தல் வேலை

பித்தளைத் தகட்டை அழகுபடுத்துவதற்காகவும், பொருளின் வடிவத்தை சரியான வடிவில் அமைக்கவும் பலகைச் சுத்தியலின் உதவியுடன் பதித்தல், புடைத்தல் மூலம் அலங்காரங்களை அமைப்பர்.

இம்முறை மூலம் பிணைச்சல், பெட்டி, தட்டு, குத்துவிளக்கு, கில்லோட, பாக்குவெட்டி போன்றவை உருவாக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரிக்கப்பட்ட ஒரு அச்சில் பித்தளையை உருக்கி வார்த்து பொருள்களை உற்பத்தி செய்தல் வார்த்தல் வேலை எனப்படும். இவ்வாறு கூசா, குடம், குத்துவிளக்கு, கொத்துப்பேணி போன்றவை உற்பத்தி செய்யப்படுகின்றன. பாரம்பரிய முறையில் சிலைகள் போன்றவை உருவாக்கும்போது மெழுகால் ஒரு அமைப்பை செய்து களிமண்ணால் அது மூடப்படுகிறது. சுடுவதன் மூலம் உள்ளே உள்ள மெழுகை உருகச்செய்து ஒரு துவாரம் வழியே உருகிய மெழுகை வெளியேற்றி, பாத்திரத்தில் இட்டு உருக்கிய பித்தளையை அதனுள் வார்த்துத் தேவையான உருவத்தை பெற்றுக்கொள்ளலாம். இம்முறை மூலம் ஒரே ஒரு பொருளை மட்டுமே அமைக்கலாம். அச்சை உடைத்து உருவம் பெறப்படுதல் இதற்குரிய காரணமாகும்.

பாத்திரங்களை உருவாக்கும்போது இறுக்கமான களிமண்ணால் ஒரு அச்சு செய்து அதன் நடுவில் ஒரு குச்சியை செலுத்தி அழுத்திய பின் மெருகூட்டிய அதனுள் மெழுகை இட்டு திரும்பவும் மெழுகூட்டி களிமண்ணால் மூடி உலர்ந்த பின் துவாரம் இட்டு அச்சை சூடாக்கி உருகிய மெழுகை வெளியே அகற்றி உருக்கிய பித்தளையை வார்த்து தேவையான பொருளை அமைத்துக்கொள்ளலாம். பின் அலங்கரித்துக் கொள்ளலாம்.

தற்காலத்தில் பித்தளைப் பொருள் இரு முறைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

1. மெழுகு வார்த்தல் முறை
2. இருபாதி கொண்ட அச்சில் தயாரித்தல் முறை
   (மண் வாத்து முறை, களியில் வார்த்தல் முறை)

மெழுகு வார்த்தல் முறையில் வெண்களி, மணல் மெழுகு, தேங்காய் எண்ணெய், பித்தளை, நிலக்கரி, மசகெண்ணெய், பெற்றோல், டீசல் போன்ற மூலப்பொருள்கள் பயன்படுகின்றன.

களியில் வார்த்தல் முறைக்குத் தேவையான களிமண், ஓட்டுத்தூள், மணல் போன்றவற்றை ஒன்றாக அரைத்து, 'வென்டனைட்' சிலிக்கா போன்றவற்றையும் ஒன்றாக அரைத்து பெறப்பட்ட மண் வகை பயன்படுத்தப்படும்.

மெழுகு வார்த்தல் முறையில் வெண்களி, மணல். மெழுகு போன்றவற்றைப் பயன்படுத்தி அச்சு ஒன்றை உருவாக்கி, உருக்கிய பித்தளையை அதனுள் வார்ப்பதன் மூலம் பொருள்களை அமைத்துக் கொள்ளலாம்.

மெழுகு வார்த்தல் முறை மூலம் தாது கரண்டு (தந்தத்தாது வைக்கும் பேளை), சைத்திய கொத்த (சிகரம்) போன்றவை உருவாக்கப்படுகிறது.

களிமண் வார்ப்பு முறையில் சதுரப் பலகைச் சட்டத்துக்குள் களி மண்ணை இட்டு, நன்றாக இறுக்கி அதன் மேல் பித்தளைப் பொருளை வைத்து அமுக்கி மாதிரிப் பொருளின் அச்சை உருவாக்குவர். அவ்வச்சின் உள்ளே உருக்கிய பித்தளையை வார்த்து பொருளின் சம பகுதிகளையும் உருவாக்குவர். அப்பகுதிகளை உருக்கி ஒட்டி முழுப் பொருளின் வடிவத்தைப் பெறுவர்.

குத்துவிளக்கு, பூச்சாடி, தாளம், நகைப்பெட்டி, சிலம்பு போன்றவை களிமண்ணில் வார்ப்பு முறை மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன.

மெழுகு வார்ப்பு முறையிலும், களிமண்ணில் வார்ப்பு முறையிலும் உருவாக்கப்படும் பொருள்கள் கிரையின்டரின் உதவியுடன் அனாவசியப் பகுதிகள் அகற்றப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின் சிறிய இரும்பூசியைப் பயன்படுத்தி செதுக்கல் வெட்டுக்கள் செய்து அலங்கரிக்கப் படுகின்றன.

லியவெல, பேருண்ட பட்சி, ஹம்சபூட்டுவ, சூரிய சந்திரன், பலாப்பெத்தி போன்ற சிங்கள அலங்காரத்தை வடிவங்களைப் பயன்படுத்தி அலங்கரிக்கப்படுகின்றன.

பித்தளைப் பொருட்கள் மூன்று சந்தர்ப்பங்களில் மெருகூட்டப்படுகின்றன.

எமரித்தூள் ஒட்டப்பட்ட துணிச்சில்லை பட்டறையில் பொருத்தி அச்சில்லில் பிடிப்பதன் மூலம் பொருள் முதன் முறையாக மெருகூட்டப்படும்.

இரண்டாவதாக 'லஸ்ட்றா' எனும் பொருள் அப்பிய துணிச் சில்லில் பிடித்தும் மூன்றாவதாக 'சிவப்பு அடி' எனும் பொருள் தடவிய துணிச்சில்லில் பிடித்தும் பொருளின் பளபளப்பு அதிகரிக்கும் விதத்தில் மெருகூட்டப்படுகின்றன.

## இலங்கையில் பித்தளைத் தொழில் புரியும் பிரதேசங்கள்:

கண்டி - பிலிமதலாவ, கிரிவவுல, தவுலகல, நத்தரம்பொத்த

மாத்தறை - பெலிஅத்த பகுதியின் அங்குல்மடுவ

### பாடக்குறிப்பு:

மத்தியகாலச் சிங்களக்கலை - ஆனந்த கே. குமாரசுவாமி

Britannica Ready Reference Encyclopedia

ஆகியவற்றைப் பயன்படுத்துங்கள்.



10. S. P. C. 081055

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 7** | : | **தேசிய, சர்வதேச வரலாற்றுக் காலத்துக்குரிய ஓவியங்கள், சிற்பங்களின் கலைப் பெறுமதியை விமர்சனம் செய்து அவற்றில் காணப்படும் சிற்பங்களை தனது நிருமாணங்களுக்கு பயன்படுத்துவர்.** |
| **தேர்ச்சி மட்டம் 7.1** | : | தூபிகளுடன் தொடர்புடைய கலை நிர்மாணங்களை ஆய்வு செய்வர். |
| **செயற்பாடு 7.1.1** | : | குன்று ஒன்றுக்கு உயிரூட்டிய சந்திரவட்டக்கல் |
| **நேரம்** | : | 02 பாடவேளை |
| **தர உள்ளீடு** | : | • இணைப்பு 7.1.1.1 இல் அடங்கிய ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்<br>• இணைப்பு 7.1.1.2 இல் அடங்கிய வாசிப்புப் படிவங்கள்<br>• பல யுகங்களில் நிர்மாணிக்கப்பட்ட சந்திரவட்டக்கற்கள்<br>• அவ்வவ் யுகங்களில் சந்திரவட்டக் கற்களில் காணப்பட்ட விசேட தன்மைகளை எடுத்துக்காட்டல் (transparent sheet) ஒளி ஊடுகருவித்தாள், இருவெட்டுகள், Video நாடாக்கள், Slides<br>• மேல்தலை எறியி (Projectors), கணினிகள் (Computers)<br>• கடதாசிகள், மாக்கர் பேன, Platignum, Maggi board |

**கற்றல் - கற்பித்தல் செயற்பாடு**

**படி 7.1.1.1** :

- சந்திரவட்டக்கல் அடங்கிய புகைப்படங்கள், Vedio நாடாக் கள், இருவெட்டுகள், Slides, Projectors, Computers போன்ற வற்றை காண்பிக்குக.
- காண்பிக்கப்படும் புகைப்படங்கள் பற்றி மாணவர்களிடம் கருத்தை வினவுக.
- சந்திரவட்டக்கல்லைக் காணக்கூடிய இடங்களை வினவுக.
- சந்திரவட்டக் கல்லில் உள்ள செதுக்கல்கள் பற்றி வினவுக.
- சந்திரவட்டக் கல்லைக் குறிக்கும் வேறு சொற்கள் பற்றி வினவுக.
- கீழ உள்ள விடயங்களைக் கலந்துரையாடுக.

> - சந்திரவட்டக்கல் இலங்கைக் கலைஞரின் உன்னதப் படைப்பு என்பது
> - சந்திர கண்ட பாஷாண சூரியன் சந்திரன் என்னும் கல் எனும் பெயர்களால் குறிப்பிடப்படுகிறது என்பது.
> - இது அரைவட்டக் கல் என்பது.
> - சந்திர வட்டக் கல்லில், அவ்வவ் யுகங்களுக்கு ஏற்ப வெவ்வேறு வடிவங்களும் உருவங்களும் பயன்படுத்தப்பட்டது என்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கீலங்களாக பிரிக்கப்பட்டு செதுக்கல்கள் நிர்மாணிக்கப் பட்டுள்ளது என்பது.

**(20 நிமிடங்கள்)**

**படி 7.1.1.2** :

- இணைப்பு 7.1.1.1 இல் அடங்கிய ஆய்வு/செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குக.
- இணைப்பு 7.1.1.2 இல் அடங்கிய வாசிப்புப் படிவங்களை வழங்குக.
- வகுப்பில் உள்ள மாணவர்களை மூன்று குழுக்களாக்குக.
- டிமைன்தாள், ப்லெடிக்னம் வழங்குக.
- குழுக்களை உரிய செயற்பாட்டில் ஈடுபடச் செய்க.
- குழுக்கள் பெற்ற தகவல்களை சமர்ப்பிக்க உரிய ஏற்பாடு களைச் செய்க.

**(40 நிமிடங்கள்)**

**படி 7.1.1.3** :

- குழுக்கள் பெற்ற தகவல்களை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.
- கண்டெடுத்த புதிய கருத்துக்களை மாணவர் களுக்கிடையில் பகிர்ந்து கொள்ள உதவுக.
- கீழே உள்ள விடயங்களுடன் கலந்துரையாடுக.

- தெளிவான பரப்பைக்கொண்ட அரைவட்டக்கல் என்பதால்
  சந்திரவட்டக்கல் எனப்பட்டது என்பது.
- முன்னர் வெறுமனே அரைவட்டக்கல்லாக தோற்றமளித்ததுடன், படிப்படியாக இதில் செதுக்கல்கள் சேர்க்கப்பட்டு உன்னதக் கலைப்படைப்பாக மாறியது என்பது.
- ஐந்து வட்டக் கீலங்களாலும் (அநுராதபுரத்தின் தலதா மாளிகை சந்திரவட்டக்கல்) ஆறு வட்டக்கீலங்க ளாலும்
  (அநுராதபுரத்தின் ராணி மாளிகை சந்திரவட்டக்கல்) கொண்ட இவை ஒரே மையத்தை கொண்டுள்ளது என்பது.
- தீச்சுடர், சத்வாவலி, லியவெல, ஹன்சாவலி, பத்ம எனும் வடிவங்களைக் காணலாம் என்பது.
- ஒவ்வொரு கீலத்தைப் பற்றியும் வெவ்வேறான கருத்துக்கள் உள்ளன என்பது.
- பொலன்னறுவை யுகம், கண்டி யுகம் ஆகியவற்றில் பல மாற்றங்களைக் காணலாம் என்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அவ்வவ் யுகங்களில் உன்னதமான கலைப்படைப்புக் களைக் கொண்ட சந்திரவட்டக்கல்லைக் காணலாம் என்பது.
- அநுராதபுர யுகத்தை சேர்ந்த உன்னதமானதும் கலைத் திறன் கொண்டதுமான சந்திரவட்டக்கல் ராணி மாளிகை யின் முன்னால் (தற்போது மகாசென் மாளிகை என அழைக்கப்படுகிறது) காணலாம் என்பது.

(20 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டுப் பரிமாணங்கள்

- சந்திரவட்டக்கல்லில் கீலங்களில் உள்ள செதுக்கல்களைக் கூறுவர்.
- சந்திரவட்டக்கல் இலங்கைக் கலைஞரின் மேன்மையான படைப்பு என்பதையும், அதைப் பாதுகாக்க வேண்டும் என்பதையும் ஏற்றுக்கொள்வர்.
- அநுராதபுரம், பொலன்னறுவை, கண்டி போன்ற யுகங்களில் காணப்பட்ட ஒற்றுமை, வேற்றுமைகளைக்கண்டு தொடர்புபடுத்துவர். வடிவங்களை வரைந்து காட்டுவர்.
- சந்திரவட்டக்கல்லைப் பற்றி சுவர் பத்திரிகைக்கான ஆக்கத்தை அமைப்பர்.
- குழு மனப்பான்மையுடன் செயற்படுவர்.

**இணைப்பு 7.1.1.1**

## ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்

- இணைப்பு 7.1.1.2 இல் அடங்கிய வாசிப்புப் படிவத்தை வாசித்து விளங்கிக்கொள்க.
- படங்களை அவதானிக்குக.
- உங்கள் குழுவுக்குரிய செயற்பாட்டில் ஈடுபடுக.

  குழு 1 - அநுராதபுர யுகத்தின் சந்திரவட்டக்கல்

  குழு 2 - பொலன்னறுவை யுகத்தின் சந்திரவட்டக்கல்

  குழு 3 - கண்டி யுகத்தின் சந்திரவட்டக்கல்

- மேற்குறிப்பிட்டவாறு குழுக்களாக்குக. தங்கள் தலைப்புக்குப் பொருத்தமாகத் தகவல்களைச் சேர்த்துக் கொள்க.

  சந்திரவட்டக்கல்லின் (1) வடிவம் (2) ஊடகம் (3) உருவங்கள் (4) சேர்க்கப்பட்ட, அகற்றப்பட்ட தொகுதிகள் (5) சிறப்பம்சங்கள்

  இவ்விடயங்களை உள்ளடக்கி அட்டவணை ஒன்றை உருவாக்குக.

- திரட்டிய தகவல்களை டிமை கடதாசியில் ப்லெடிக்னத்தின் உதவியுடன் எழுதுக.
- அவ்வவ் யுகங்களில் உள்ள சந்திரவட்டக்கல்லின் பரும்படிப்படம் ஒன்றை வரைந்து காட்டுக. அவற்றில் உள்ள உருவங்களைப் பெயரிடுக.
- உங்களால் திரட்டப்பட்ட தகவல்கள் அனைத்தையும் வகுப்பில் காட்சிப்படுத்த உரிய ஏற்பாடுகளை செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசிப்புப்பத்திரம்

### சந்திரவட்டக்கல்

- புனிதத் தலத்துக்குள் நுழையும்போது நுழைவாயிலில் அமைந்த அரைவட்டம் கொண்ட செதுக்கல்கள் அடங்கிய கல் சந்திரவட்டக் கல்லாகும்.

- 'சந்திர கண்ட பாஷாண, இரஹந்த கல, ஆரோகன சக்கிர பத்மசீலா' எனும் பெயர்களாலும் இது குறிப்பிடப்படுகிறது.

- தட்டையான மேற்பரப்புடைய, அரைவட்ட வடிவமான கல் என்பதால் அரைச்சந்திரன் எனக் கருதி சந்திரவட்டக்கல் எனப்பட்டது.

- முதலில் அரைவட்டக்கல்லாக வெறுமனே காணப்பட்டது. பின்னர் படிப்படியாக செதுக்கல்கள் சேர்ந்து மேன்மையான கலைப்படையாகியது.

- ஒரே மையத்தைக் கொண்டு 5 கீலங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றிலும் அழகான செதுக்கல்கள் உள்ளடக்கப்பட்டது.

- அநுராதபுர யுகத்தில் உண்டாக்கப்பட்ட சந்திரவட்டக்கல் பின் பொலனறுவைக்கும், கண்டிக்கும் பரவலடைந்தது. அந்நேரம் தோற்றத்திலும் அமைப்பிலும் மாற்றங்கள் ஏற்பட்டன.

- பொலன்னறுவை யுகத்தில் சந்திரவட்டக்கல்லின் தோற்றம் மாறவில்லை. ஒவ்வொரு காலத்திலும் காணப்பட்ட செதுக்கல்களில் மாற்றம் உண்டானது. ஒன்றன் பின் ஒன்றாகச் செல்லும் விலங்குகளுக்குப் பதிலாக வெவ்வேறான கீலங்களில் விலங்குகளை உள்ளடக்கி பசுவின் உருவத்தை முற்றாகக் கல்லில் இருந்து நீக்கினர். இவ் யுகத்தின் இடம்பெற்ற இந்து மதத்தின் தாக்கத்தினால் இவ்வாறு நிகழ்ந்தது.

- கண்டி யுகத்தின் சந்திரவட்டக்கல்லின் தோற்றம், அமைப்பு என்பன முற்றாக மாற்றமடைந்தது. அரைவட்டக்கல் வடிவம் நீங்கி வேறு வடிவங்களில் நிர்மாணிக்கப்பட்டது. விலங்குருவங்களுக்குப் பதிலாக தாவர உருவங்கள் சேர்க்கப்பட்டன.

- அநுராதபுர யுகத்தில் காணப்பட்ட சந்திரவட்டக்கற்கள்
  - ராணி (பிசோ) மாளிகையின் (மகாசென் மாளிகை) சந்திரவட்டக்கல்
  - தூபாராமயவுக்கு அருகில் உள்ள மகாமேகவன உயனவில் உள்ள சந்திரவட்டக்கல்
  - மகா ஸ்ரீ மகா போதி (வெள்ளரசு மரம்) அருகில் உள்ள சந்திரவட்டக்கல்

- பொலன்னறுவை யுகத்தில் காணப்பட்ட சிறந்த சந்திரவட்டக்கற்கள்
  - வட்டதாகெய சந்திரவட்டக்கல்
  - பத்மசீமா பிராசாதயவின் சந்திரவட்டக்கல் (சமயக்கட்டடங்களில் காணப்படும்.)

- கண்டி யுகத்தின் சந்திரவட்டக்கற்கள்
  - தலதா மாளிகையின் சந்திரவட்டக்கல்
  - விஷ்னு தேவாலயத்தின் சந்திரவட்டக்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ராணி மாளிகை அல்லது மகாசென் மாளிகையின் முன்னால் உள்ள சந்திரவட்டக்கல் அநுராதபுர யுகத்தைச் சேர்ந்த கலைத்திறன் மிக்க உன்னத படைப்பாக ஏற்றுக்கொள்ளப் படுகிறது.
* இது ஆறு கீலங்களைக் கொண்டது.
* பகுதிகளும் அதன் பொருளும் கீழே குறிக்கப்பட்டுள்ளது.

| பகுதி (தீரு) | செதுக்கிய உருவம் | பொருள் |
|---|---|---|
| 1 | தீச்சுடர் | பேராசை, ஆசை, குரோதம் |
| 2 | சத்வாவலிய யானை/ குதிரை/சிங்கம்/பசு (விலங்குகள்) | வயோதிபம், நோய், மரணம், ஜாதி |
| 3 | கொடி அலங்காரம் | பேராசை எனும் பிணைப்பு |
| 4 | ஹன்சாவலிய (அன்னப்பட்சி வரிசை) | பேராசையை புத்தியால் தவிர்த்தல் |
| 5 | கொடி அலங்காரம் | பேராசை எனும் பிணைப்பு |
| 6 | அரைத்தாமரை | முக்தி நிலையைப் பெற்றுக்கொள்ளல் |

* இதில் உள்ள செதுக்கல்கள் மிகவும் நுண்ணியமானவை. கலை அம்சம் பொருந்தியவை.
* நான்கு விலங்குகளினதும் இயற்கைப் பண்புகள், அசையும் தன்மை கொண்டதாகவும், உயிர்த்துடிப்புடனும், லயத்துடனும் சிறப்பாக சிற்பிகள் செதுக்கியுள்ளனர்.
* கொடி அலங்காரம் லயத்துடன் செதுக்கபட்டிருப்பது சிறப்பானது.
* தாமரைப்பூவின் மென்மையை மிகவும் நுணுக்கமாக கருங்கல்லில் செதுக்கி காட்டியிருக்கும் கலைஞரின் திறமையை பாராட்ட வேண்டியது அவசியம்.


ராணி மாளிகை சந்திரவட்டக்கல்


ஸ்ரீமாபோதி சந்திரவட்டக்கல்


கண்டி விஷ்னு ஆலய சந்திரவட்டக்கல்


பொலநறுவை வட்டதாகே சந்திரவட்டக்கல்


கண்டி தலதா மாளிகை சந்திரவட்டக்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 7** : **தேசிய, சர்வதேச வரலாற்றுக் காலத்துக்குரிய ஓவியங்கள், சிற்பங்களின் கலைப் பெறுமதியை விமர்சனம் செய்து அவற்றில் காணப்படும் சிற்பங்களை தனது நிருமாணங்களுக்கு பயன்படுத்துவர்.**

**தேர்ச்சி மட்டம் 7.1** : தூபிகளுடன் தொடர்புடைய கலை நிர்மாணங்களை ஆய்வு செய்வர்.

**செயற்பாடு 7.1.2** : காவலுக்குக் கல் (காவற்சிலை)

**நேரம்** : 02 பாடவேளை

**தர உள்ளீடு** :
- இணைப்பு 7.1.2.1 இல் அடங்கிய ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்
- இணைப்பு 7.1.2.2 இல் அடங்கிய வாசிப்புப் படிவங்கள்
- காவற்கல்லின் படங்கள்
- (transparent sheet, இருவெட்டுகள், Video நாடாக்கள், Projectors, கணினிகள்
- கடதாசிகள், மாக்கர் பேன, Platignum, Maggi board

**கற்றல் - கற்பித்தல் செயற்பாடு**

**படி 7.1.2.1** :
- காவற்கல் அடங்கிய புகைப்படங்கள், Vedio நாடாக்கள், இருவெட்டுகள், Slides, Projectors, Computers போன்றவற்றை உபயோகித்துக் காண்பிக்குக.
- காண்பிக்கப்படும் புகைப்படங்கள் பற்றி மாணவர்களிடம் கருத்தை வினவுக.
- கவாற்கல்லின் வடிவம் பற்றி வினவுக.
- சந்திரவட்டக்கல்லைக் காணக்கூடிய இடங்களை வினவுக.
- காவற்கல்லை செய்யப்பயன்படுத்திய ஊடகங்கள் பற்றி வினவுக.
- கீழ உள்ள விடங்களைக் கலந்துரையாடுக.

> - காவற் கல் என்பது காவலைக் குறிக்கும் ஒரு கலைப் படைப்பு என்பது
> - காவற்கல்லின் வடிவம் பல காலங்களில் வேறுபட்டுக் காணப்பட்டது என்பது.
> - எந்தவித செதுக்கலும் இல்லாமல் வெறுமனே காணப் பட்ட காவற்கல் பின்னர் 'புன்கலச' என்னும் சிறு புடைப்பு கோடுகளயால் காட்டப்பட்ட (நிறைகுடம்), நாகவடிவ காவற்கல், பயிரவக் காவற்கல் (வாமன/

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள்ள), நாகராஜ காவற்கல் என்று மாற்றம் பெற்று காணப்பட்டது என்பது.

- அநுராதபுர யுகத்தி 'ரத்தின பிராசாதய' முன்னால் அமைக்கப்பட்ட நாகராஜ காவற்கல் கலைவடிவம் மிக்க காவற்கல் என்பது.

**(20 நிமிடங்கள்)**

**படி 7.1.2.2** :

- இணைப்பு 7.1.1.1 இல் அடங்கிய ஆய்வு/செயற்பாட்டுப் பத்திரங்களை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 7.1.1.2 இல் அடங்கிய வாசிப்புப் படிவங்களை மாணவர்களுக்கு வழங்குக.
- வாசிப்புப் படிவத்தை வாசிக்கும்போது போதியளவு வழிகாட்டுக.
- கீழே உள்ள செயற்பாட்டில் மாணவர்களை ஈடுபடுத்துக.
- காவற் கல்லின் வளர்ச்சியை பரும்படி படமாகக்காட்டிய நாகராஜக் காவற்கல் பற்றி கலைப்பண்புகளுடன் கூடிய வாறு மதிப்பிடுக.

**(40 நிமிடங்கள்)**

**படி 7.1.2.3** :

- மாணவர்களது செயற்பாடு பற்றி கலந்துரையாடுக.
- அவர்களது கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள உதவுக.
- கீழே உள்ள விடயங்களுடன் கலந்துரையாடுக.

- காவற்கல்லில் உபயோகித்த 'புன்கலச' பகிரவ வடிவம், நாகவடிவம் என்பன ஒன்றாகச் சேர்ந்து நாகராஜ காவற் கல் நிர்மாணம் செய்யப்பட்டது என்பது.
- காவற்கல் நிர்மாணம் செய்யும்போது உயர் புடைப்பு, அரைப்புடைப்பு, சிறு புடைப்பு எனும் நுட்பமுறைகள் பயன்படுத்தப்பட்டது என்பது.
- நாகவடிவக்காவற்கல் அநுராதபுரம் குட்டம் பொகுணவில் காணலாம் என்பது.
- அநுராதபுரம், பொலன்னறுவை யுகங்களில் பலமாற்றங்க ளைக் கொண்டு காவற்கல் அமைந்தது என்பது.

**(20 நிமிடங்கள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீட்டு மதிப்பீட்டுப் பரிமாணங்கள்

- காவற்கல்லில் உள்ள செதுக்கல்களைக் குறிப்பிடுவர்.
- உன்னதபடைப்பு என்பதை ஏற்றுக்கொள்வர்.
- காவற்கல்லின் விருத்தியை பரும்படியான படம்மூலம் காட்டுவர்.
- சந்திரவட்டக்கல் பற்றி சுவர்பத்திரிகை ஒன்றுக்கு ஆக்கத்தை ஆக்குவர்.
- காவற்கல்லை கலைப்பண்புகளுடன் மதிப்பிடுவர்.
- ஒவ்வொருவருடைய கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டு தீர்மானங்களை எடுப்பர்.

**இணைப்பு 7.1.2.1**

## ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்

- இணைப்பு 7.1.2.2 இல் அடங்கிய வாசிப்புப் படிவத்தை வாசித்து விளங்கிக்கொள்க.
- படங்களை நன்றாக நோக்குக.
- தலைப்புக்குப் பொருத்தமான செயற்பாட்டில் ஈடுபடுக.

### செயற்பாடு

- காவற்கல்லின் விருத்தியை பரும்படி படம் வரைந்து நாகராஜ காவற்கல்லின் கலைப் பண்புகளை மதிப்பீடு செய்க.
- தொகுத்தெடுத்த தகவல்களை கடதாசி, ப்லெடிக்னம் உபயோகித்து பட்டியல் படுத்துக.
- உங்களது ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.

**இணைப்பு 7.1.2.2**

## வாசிப்புப் படிவம்

- புனிதத்தலத்துக்கு நுழையும் படிக்கல்லின் முன்னால் சந்திரவட்டக்கல்லுக்கு இரு புறத்திலும் அமைக்கப்பட்ட பெறுமதி வாய்ந்த செதுக்கல்களாலான கற்கள் இரண்டும் காவற்கல் எனப்படும்.
- படிக்கல்லின் ஒரு அங்கமாக இருந்த காவற்கல் படிப்படியாக செதுக்கல்கள் உள்ளவாறு விருத்தியடைந்தது.
- முதன்முதலில் பெறுமனே கல்லாக இருந்த காவற்கல் இடைக்கிடையில் மாற்றங்கள் பலவற்றுடன் நிர்மாணம் அடைந்தது. இறுதியில் அவை எல்லாம் ஒன்று சேர்ந்து செதுக்கல் கொண்ட நாகராஜக் காவற்கல்லாக வளர்ச்சி பெற்றது.

  உயர் புடைப்பு

  செதுக்கல்கள் அற்ற கல்வெட்டு

  ‘புன்கலச’ (நிறைகுடம்)

  பகிரவ வடிவம் (வாமன வடிவம்)

  நாக வடிவம்

  நாகராஜக் காவற்கல்



11. S. P. C. 081055

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அநுராதபுர யுகத்தில் உருவாக்கப்பட்ட நாகராஜக்காவற்கல் பின்னர் பொலன்னறுவை, கண்டி எனும் யுகங்களிலும் வியாபித்தது. இருந்த போதும் அநுராதபுர யுகத்தில் காணப்பட்ட கலைவடிவத்தின் மேன்மை, பின்னர் குறைந்து சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

அநுராதபுர யுகத்தின் காவற்கல்

- ரத்தின பிராசாத காவற்கல்
- தூபாராமயக்கு அருகில் உள்ள மகாமேகவன தோட்டத்தின் காவற்கல்

பொலனறுவை யுகத்தின் காவற்கல்

- வடதாகெய வில் உள்ள காவற்கல்
- லங்காதிலகய வில் உள்ள காவற்கல்
- திவங்க பிலிமகே வில் உள்ள காவற்கல்

- அநுராதபு, பொனறுவை யுகங்களில் கல்லால் உயர் புடைப்பு நுட்பமுறையில் அமைக்கப் பட்ட காவற்கல், பின்னர் செங்கல், சாந்து போன்ற வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டது.



அனுராதபுர இரத்தினபிரசாத காவற்சிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொலநறுவை வட்டதாகே காவற்சிலை



பொலநறுவ திவங்க ஆலய காவற்சிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 7** : **தேசிய, சர்வதேச வரலாற்றுக் காலத்துக்குரிய ஓவியங்கள், சிற்பங்களின் கலைப் பெறுமதியை விமர்சனம் செய்து அவற்றில் காணப்படும் சிறப்பங்களை தனது நிருமாணங்களுக்கு பயன்படுத்துவர்.**

**தேர்ச்சி மட்டம் 7.1** : தூபிகளுடன் தொடர்புடைய கலை நிர்மாணங்களை ஆய்வு செய்வர்.

**செயற்பாடு 7.1.3** : கொரவக்கல் (கைபிடிவரிகை) உமக்கு உதவுகிறது.

**நேரம்** : 02 பாடவேளை

**தர உள்ளீடு** :

- இணைப்பு 7.1.3.1 இல் அடங்கிய ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்
- இணைப்பு 7.1.3.2 இல் அடங்கிய வாசிப்புப் படிவங்கள்
- கொரவக்கல் அடங்கிய புகைப்படங்கள், உருவப் படங்கள்

  இருவெட்டுகள், Video நாடாக்கள், Projectors, கணினிகள்
- கடதாசிகள், மாக்கர் பேனா, Platignum, Maggi board

**கற்றல் - கற்பித்தல் செயற்பாடு**

**படி 7.1.3.1** :

- கொரவற்கல் அடங்கிய புகைப்படங்கள், Vedio நாடாக்கள், இருவெட்டுகள், Slides, Projectors, Computers போன்றவற்றை உபயோகித்துக் காண்பிக்குக.
- காண்பிக்கப்படும் புகைப்படங்கள் பற்றி மாணவர்களிடம் கருத்தை வினவுக.
- கொரவக்கல்லின் வடிவம் பற்றி மாணவர்களிடம் வினவுக.
- கொரவக்கல் எமக்கு எச்சந்தர்ப்பத்தில் உதவுகிறது என்று வினவுக.
- அதில் பயன்படுத்தும் உருவப்படங்கள் பற்றி வினவுக.
- கீழ உள்ள விடங்களைக் கலந்துரையாடுக.

| |
|---|
| • கொரவக்கல் படிக்கட்டில் ஏறும்போது துணையாக அல்லது ஆதாரமாக அமைகிறது என்பது<br>• கல், செங்கல் என அது ஊடகத்தில் மாற்றம் கண்டது என்பது.<br>• இதில் பயன்படுத்திய அலங்காரங்கள், விலங்குருவங்கள் யுகத்துக்கு யுகம் மாற்றமடைந்தது என்பது. |

**(20 நிமிடங்கள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படி 7.1.3.2** :
- இணைப்பு 7.1.3.1 இல் அடங்கிய ஆய்வு/செயற்பாட்டுப் பத்திரங்களை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 7.1.3.2 இல் அடங்கிய வாசிப்புப் படிவங்களை மாணவர்களுக்கு வழங்குக.
- வாசிப்புப் படிவத்தை வாசித்துப் புரிந்துகொள்ள மாணவருக்கு உதவுக.
- செயற்பாட்டில் மாணவர்களை ஈடுபடுத்துக.
- தொகுத்த தகவல்களை வகுப்பில் காட்சிப்படுத்த உரிய ஏற்பாடுகளை செய்க.

**(40 நிமிடங்கள்)**

**படி 7.1.3.3** :
- மாணவர்களது செயற்பாடு பற்றி கலந்துரையாடுக.
- அவர்கள் ஒவ்வொருவருக்கிடையில் தங்கள் கருத்துக் களைப் பரிமாறிக்கொள்ள உதவுக.
- கீழே உள்ள விடயங்களுடன் கலந்துரையாடுக.

> - அநுராதபுர யுகத்தின் 'மகர' வாயில் இருந்து வெளி யேறும் யானையின் தும்பிக்கை வடிவம் கொண்ட வட்ட வடிவமான தீச்சுடர் அதாவது (தியரல) நீரலை வடிவம் கொரவக்கல்லின் நிர்மாணத்துக்கு உதவியிருப்பது என்பது.
> - பல கொரவக்கல்லின் வெளிப்பக்கத்தளம் மாறசிங்க, கஜசிங்க, கேஷர சிங்க எனும் விலங்குருக்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது என்பது.
> - அநுராதபுர யுகத்தில் ஊடகப் பொருளாக கல் பயன்பட்ட போது கண்டி யுகத்தில் செங்கல், சாந்து போன்ற ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது.
> - அநுராதபுர யுகத்தில் மகர உருவம் பயன்படுத்தப்பட்ட துடன் கண்டி யுகத்திலும் அதன் பின்னரும் கஜசிங்க உருவம் பயன்படுத்தப்பட்டது என்பது.

**(20 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டுப் பரிமாணங்கள்

- கொரவக்கல் லில் உள்ள அடையாளங்களைக் குறிப்பிடுவர்.
- கொரவக்கல் லில் பயன்படுத்திய ஊடகம், உருவப்படங்கள், வடிவங்கள் போன்றவற்றை எழுதிக் காண்பிப்பர்.
- கொரவக்கல் லில் உள்ள கலைத்திறமையை இரசித்து விமர்சனம் செய்வர்.
- ஏனையவரின் கருத்துக்களை மதிப்பர்.
- ஒரு நிர்மாணத்தில் உள்ள திறமையை மதிப்பிடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைப்பு 7.1.3.1**

## ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்

- இணைப்பு 7.1.3.2 இல் அடங்கிய வாசிப்புப் படிவத்தை வாசித்து விளங்கிக்கொள்க.
- படங்களை நன்றாக நோக்குக.
- தலைப்புக்குப் பொருத்தமான செயற்பாட்டில் ஈடுபடுக.

**செயற்பாடு**

- கொரவக்கல நிர்மாணம் செய்யப்பயன்பட்ட ஊடகம் யுகத்துக்கு யுகம் எவ்வாறு மாற்றமடைந்தது என்பது.
- அதற்காகப் பயன்படுத்திய விலங்குருவங்கள்
- யுகத்துக்கு யுகம் அதன் அமைப்பின் வடிவத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்
- பயன்படுத்தப்பட்ட உருவப்படங்கள் என்பன உள்ளடக்கிய கலைச்சஞ்சிகை ஒன்றுக்கு ஆக்கம் ஒன்றை அமைக்குக.
- அமைக்கப்பட்ட ஆக்கத்தை வகுப்பில் காட்சிப்படுத்த உரிய ஏற்பாடுகளைச் செய்க.
- ஆசிரியரின் உதவியைப் பெற்றுக்கொள்க.

**இணைப்பு 7.1.3.2**

## வாசிப்புப் படிவம்

- படிக்கட்டின் இரு புறத்திலும் ஆதாரமாகப் போடப்பட்ட பெரிய கற்கிராதி இரண்டும் கொரவக்கல் எனப்படும்.

- மகர வாயில் இருந்து வெளியேறும் யானையின் தும்பிக்கை நீரலை/தீச்சுடர் வடிவத்தில் வெளிப்புறத்தோற்றம் அமைந்திருக்கிறது. இதன் வளைந்த தன்மையைக் கருதி கொரவக்கல் எனப்பட்டது.

- மகர வாயிலில் இருந்து வெளியேறும் தீச்சுடர் போன்ற நீரலை நுணுக்கமான முறையில் செதுக்கியிருக்கும் விதம் உன்னதக் கலைப்படைப்பாகியுள்ளது. இதன் வெளிச் சுவரும் சிறந்த செதுக்கல்களைக்கொண்டது. இச்செதுக்கல்களுக்கு இடையில் ‘நரசிங்க’, ‘கஜசிங்க’, ‘கேஷர சிங்க’ என்ற உருவங்களைக் காணக்கூடியதாக இருக்கிறது.

- அநுராதபுர யுகத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிர்மாணம் பொலனறுவை யுகத்திலும் கல்லை ஊடகமாகப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்டது. கம்பளை, கண்டி யுகங்களில் அதனை மாற்றி செங்கல்லையும் சாந்தையும் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்டது. ஆரம்பத்தில் மகர உருவம் பயன்படுத்தியதுடன் கண்டி யுகத்தில் கஜசிங்க உருவத்திற்கு மாற்றமடைந்ததைக் காணலாம்.

- படிக்கட்டின் அளவுக்கு ஏற்ப கொரவக்கல்லின் அளவும் தீர்மானிக்கப்பட்டதுடன் படிக்கட்டின் பலத்தை அதிகரிக்க கொரவக்கல் பயன்படுத்தியமை அக்கலைஞர்களின் தொழில்நுட்ப அறிவின் தன்மையை விளக்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கைபிடிவரிசை - இசுறுமுனிய



கைபிடிவரிசை - பொலநறுவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 7** : **தேசிய, சர்வதேச வரலாற்றுக் காலத்துக்குரிய ஓவியங் கள், சிற்பங்களின் கலைப் பெறுமதியை விமர்சனம் செய்து அவற்றில் காணப்படும் சிற்பங்களை தனது நிருமாணங்களுக்கு பயன்படுத்துவர்.**

**தேர்ச்சி மட்டம் 7.1** : தூபிகளுடன் தொடர்புடைய கலை நிர்மாணங்களை ஆய்வு செய்வர்.

**செயற்பாடு 7.1.4** : சைத்தியத்துக்கு (தூபிகளுக்கு) ஆபரணமாக அமைந்த வாஹல்கட

**நேரம்** : 02 பாடவேளை

**தர உள்ளீடு** :

- இணைப்பு 7.1.4.1 இல் அடங்கிய ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்
- இணைப்பு 7.1.4.2 இல் அடங்கிய வாசிப்புப் படிவங்கள்
- வாகல்கட கலையைக் காட்டும் புகைப்படங்கள், உருவப் படங்கள், இருவெட்டுகள், Video நாடாக்கள், Projectors, கணினிகள்
- கடதாசிகள், மாக்கர் பேனா, Platignum, Maggi board

**கற்றல் - கற்பித்தல் செயற்பாடு**

**படி 7.1.4.1** :

- வாகல்கட கலையை வெளிப்படுத்தும் புகைப்படங்கள், Vedio நாடாக்கள், இருவெட்டுகள், Slides, Projectors, Computers போன்றவற்றை உபயோகித்துக் காண்பிக்குக.

- காண்பிக்கப்படும் புகைப்படங்கள் பற்றி மாணவர்களிடம் கருத்துக்களை வினவுக.

- கீழ உள்ள விடங்களைக் கலந்துரையாடுக.

> - வகால்கட சைத்தியவின் பாதுகாப்பாகவும் அழகுக்காக வும் சேர்க்கப்பட்ட ஒர அங்கம் என்பது
> - அது பூக்கொடிகள், விலங்குகள் செதுக்கப்பட்ட ஒரு நிர்மாணம் என்பது.
> - மிகிந்தலை கண்டக சைத்தியம் அநுராதபுர யுகத்தை சேர்ந்த கலைத்திறன் மிக்க ஒரு வாகல்கட அமைப்பு என்பது.

**(10 நிமிடங்கள்)**

**படி 7.1.4.2** :

- இணைப்பு 7.1.4.1 இல் அடங்கிய ஆய்வு/செயற்பாட்டுப் பத்திரங்களை மாணவர்களுக்கு வழங்குக.

- இணைப்பு 7.1.4.2 இல் அடங்கிய வாசிப்புப் படிவங்களை மா்ணவர்களுக்கு வழங்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வாசிப்புப் படிவத்தை வாசித்துப் புரிந்துகொள்ள மாணவருக்கு உதவுக.

**(40 நிமிடங்கள்)**

**படி 7.1.4.3** :
- மாணவர்களது செயற்பாடு பற்றி கலந்துரையாடுக.
- அவர்கள் ஒவ்வொருவருக்கிடையில் தங்கள் கருத்துக் களைப் பரிமாறிக்கொள்ள உதவுக.
- கீழே உள்ள விடயங்களுடன் கலந்துரையாடுக.

> - இந்தியாவின் சாஞ்சி தூபியின் நான்கு திசையில் அமைக்கப்பட்ட தோரணத்துக்குப் பதிலாக இலங்கையின் சிற்பிகளின் கைவண்ணத்தில் சைத்தியத்தைத் தூபியைத் தொடும்விதத்தில் இந்நிர்மாணம் செய்யப்பட்டது என்பது.
> - வாகல்கடவின் முன்பக்கத் தோற்றத்தின் நடுப்பகுதி வெளித்தள்ளிய நிலையில் நிர்மாணிக்கப்பட்டது என்பது.
> - கல்லால் அமைக்கப்பட்ட கீட்பகுதி பொரதம் எனும் குறுக்குக் கற்தறிகளில் யானை, மகர, வாமன, ஹம்ச (அன்னம்) போன்ற உருவங்கள் வெளித்தள்ளிய அமைப் பில் செதுக்கப்பட்டடுள்ளன.
> - செங்கல்லால் அமைக்கப்பட்ட மேற்பகுதி விமானம் என அழைக்கப்படும் அவற்றில் புத்தர் உருவங்கள் காணப்பட்டிருந்தன.

**(30 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டுப் பரிமாணங்கள்

- வாகல்கடவில் காணக்கூடிய உருவப்படங்களைக் குறிப்பிடுவர்.
- இங்கு காணக்கூடிய நிர்மானப் பண்புகளை மதிப்பிடுவர்.
- வாகல்கட அமைக்கப் பயன்படுத்திய ஊடகம், பல உருவப்படங்கள் பற்றி எழுதிக் காண்பிப்பர்.
- கலைப்பண்புகளை இரசிப்பர்.
- ஏனையவர்களது கருத்துகளை மதிப்பர்.



12. S. P. C. 081055

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைப்பு 7.1.4.1**

## ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்

- இணைப்பு 7.1.4.2 இல் அடங்கிய வாசிப்புப் படிவத்தை வாசித்து விளங்கிக்கொள்க.
- உருவப் படங்களை நன்றாக நோக்குக.
- உரிய செயற்பாட்டில் ஈடுபடுக.

### செயற்பாடு

- 'வாகல்கட' வை நிர்மாணம் செய்யப்பயன்படுத்திய ஊடகம், அதற்காகப் பயன்படுத்திய செதுக்கல்கள், விலங்குருவங்கள், சிறப்பியல்புகள் அனைத்தையும் உள்ளடக்கி சுவர்ப் பத்திரிகைக்கு ஆக்கத்தை அமைக்குக.
- நீங்கள் அமைத்த ஆக்கத்தை வகுப்பில் காட்சிப்படுத்த உரிய ஏற்பாடுகளை செய்க.
- ஆசிரியரின் உதவியைப் பெற்றுக்கொள்க.

**இணைப்பு 7.1.4.2**

## வாசிப்புப் படிவம்

- வாகல்கட என்பது சைத்தியத்தின் (தூபியின்) நான்கு திசைகளிலும் சைத்தியத்தைத் தொடுத்து அமைக்கப்பட்ட சிறப்பான நான்கு நிர்மாணங்களாகின்றன.

- இந்திய சாஞ்சி தூபியின் நான்கு திசைகளிலும் காணக்கூடிய வாயிற் தோரணத்துக்குப் பதிலாக இலங்கை சிற்பபியின் கைவண்ணத்தால் சைத்தியத்தைத் தொடுத்து இந்நிர்மாணம் செய்யப்பட்டதாகக் கருதப்படுகிறது.

- சைத்தியத்தின் நான்கு திசைகளிலும் அமைக்கப்படும் இந்நிர்மாணம் தூபியின் உறுதிக்காக செதுக்கல்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.

- வாகல்கடவின் முன்பக்கத் தோற்றத்தின் நடுப்பகுதி வெளித்தள்ளிய நிலையில் உள்ளதுடன் அதன் கீழ் பகுதியின் முதல் பகுதி செங்கல்லால் அமைக்கப்பட்டுள்ளது.

- கல்லால் அமைக்கப்பட்ட கீழ் பகுதி (பொரதம்) கற்தறிகளைக்கொண்டது. விலங்குருவங் களால் ஆக்கப்பட்ட இதில் யானை, மகரம், வாமன, எருது என்ற உருவங்கள் காணக்கூடிய தாக உள்ளது.

- செங்கல்லால் ஆக்கப்பட்ட மேற்பகுதியில் விமானங்களைக் காணலாம். அதனுள் புத்தர் உருவங்கள் வைக்கப்பட்டடதற்கான சான்றுகள் உள்ளன.

- வாகல்கடவின் இரு புறத்திலும் அமைக்கப்பட்ட விசித்திர சிற்பங்கள் கொண்ட உயரமான கற்றூண்களைக் காணலாம். இவை கல்பலதா (கற்பக்கொடி), கற்பகவிருட்சம் (ஜீவக விருட்சம்) என்ற வடிவங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நாற்றிசையில் உள்ள கற்றூண்களில் ஒவ்வொரு திசையிலும் யானை, குதிரை, எருது, சிங்கம் எனும் உருவங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இவற்றை நாற்றிசைகளையும் குறிக்கப்பயன்படுத்தினர்.

- மிகிந்தலை கண்டக சைத்தியத்தின் வாகல்கட கலைத்திறன் மிக்க நிர்மாணமாகும். மிரிசவெட்டிய வாகல்கடவும் சிறந்தாகக் கருதப்படுகிறது. புனரமைக்கப்பட்ட ருவன்வெலிசாய வின் வாகல்கட மூலம் வாகல்கட பற்றிய அறிவைத் தெளிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

- வாகல்கட அபிக்க, ஆதிமுக என்று சிங்களத்தில் வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன.



கண்டக சைத்திய - மிகிந்தலை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி 7 : **தேசிய, சர்வதேச வரலாற்றுக் காலத்துக்குரிய ஓவியங்கள், சிற்பங்களின் கலைப் பெறுமதியை விமர்சனம் செய்து அவற்றில் காணப்படும் சிற்பங்களை தனது நிருமாணங்களுக்கு பயன்படுத்துவர்.**

தேர்ச்சி மட்டம் 7.1 : தூபிகளுடன் தொடர்புடைய கலை நிர்மாணங்களை ஆய்வு செய்வர்.

செயற்பாடு 7.1.5 : சைத்தியத்தின் பாதுகாப்பு அரணான வட்டதாகெய

நேரம் : 02 பாடவேளை

தர உள்ளீடு :

- இணைப்பு 7.1.5.1 இல் அடங்கிய ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்
- இணைப்பு 7.1.5.2 இல் அடங்கிய வாசிப்புப் படிவங்கள்
- வட்டதாகெய காண்பிக்கப்படும் புகைப்படங்கள், உருவப் படங்கள், இருவெட்டுகள், Video நாடாக்கள், Projectors, கணினிகள்
- கடதாசிகள், மாக்கர் பேனா, Platignum, Maggi board

**கற்றல் - கற்பித்தல் செயற்பாடு**

படி 7.1.5.1 :

- வட்டதாகெய காண்பிக்கும் புகைப்படங்கள். உருவப்படங்கள், Vedio நாடாக்கள், இருவெட்டுகள், Slides, Projectors, Computers போன்றவற்றை உபயோகித்துக் காண்பிக்குக.
- காண்பிக்கப்படும் புகைப்படங்கள் பற்றி மாணவர்களிடம் கருத்துக்களை வினவுக.
- கீழ் உள்ள விடங்களைக் கலந்துரையாடுக.

> - வெய்யில், மழை போன்றவற்றில் இருந்து பாதுகாப்பாக இருக்க எமக்கு வீடு உதவுகிறது என்பது
> - ஏனையவற்றில் இருந்து பாதுகாப்பாக இருக்கவும் வீடு உதவுகிறது என்பது.
> - புத்தபெருமானின் உடற்தாது வைக்கப்பட்ட சைத்தியத்தை சுற்றி பாதுகாப்பு அரணாக வட்டதாகெய அமைக்கப்பட்டுள்ளது என்பது.
> - சைத்தியகர, தூபகர என்று வட்டதாகெய குறிப்பிடப்படுகிறது என்பது.

**(20 நிமிடங்கள்)**

படி 7.1.5.2 :

- இணைப்பு 7.1.5.1 இல் அடங்கிய ஆய்வு/செயற்பாட்டுப் பத்திரங்களை மாணவர்களுக்கு வழங்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இணைப்பு 7.1.5.2 இல் அடங்கிய வாசிப்புப் படிவங்களை மாணவர்களுக்கு வழங்குக.

- வாசிப்புப் படிவத்தை வாசித்துப் புரிந்துகொள்ள மாணவருக்கு உதவுக.

- வட்டதாகெயவின் விசேட பண்புகளை உள்ளடக்கி பாடசாலை இலக்கிய மன்றத்தில் ஆற்றுவதற்கு ஓர் உரையை தயார் செய்க.

**(40 நிமிடங்கள்)**

**படி 7.1.5.3** :

- மாணவர்களது செயற்பாடு பற்றி கலந்துரையாடுக.

- அவர்கள் ஒவ்வொருவருக்கிடையில் தங்கள் கருத்துக் களைப் பரிமாறிக்கொள்ள உதவுக.

- கீழே உள்ள விடயங்களுடன் கலந்துரையாடுக.

| |
|---|
| • இலங்கையின் முதற்தூபியான தூபாராம வட்டதாகே முதன்மையானது என்பது.<br>• தூபியை சுத்திவர வட்டதாகே அமைக்கப்பட்டுள்ளது என்பது.<br>• வட்டதாகேயின் கூரைகளை அமைப்பதற்கு கற்தூண்கள் காணப்பட்டன.<br>• இத்தூண்கள் அலங்காரங்களுடன் செதுக்கப்பட் டுள்ளது.<br>• அநுராதபுரக் காலத்திற்குரிய தூபாராம வட்டதாகே அம்பஸ்தல வட்டதாகே, இலங்காராம வட்டதாகே, பொலநறுவைக்கால வட்டதாகே, மிதிரிகிரிய வட்டதாகே பிரதானமானவை. |

**(40 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டுப் பரிமாணங்கள்

- வட்டதாகெயவில் காணக்கூடிய பண்புகளையும் நிர்மாணத்தின் திறமையைப் பற்றியும் விபரிப்பர்.
- அதன் நிர்மாணத்திறமையை புரிந்துகொண்டு மதிப்பிடுவர்.
- வட்டதாகெயவின் விசேட பண்புகளை கட்டுரையாக எழுதுவர்.
- ஏனைய கட்டடங்களுடன் ஒப்பிட்டு விமர்சித்து இரசிப்பர்.
- ஏனையவர்களது கருத்துக்களை ஏற்று மதிப்பளிப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைப்பு 7.1.5.1**

## ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்

- இணைப்பு 7.1.5.2 இல் அடங்கிய வாசிப்புப் படிவத்தை வாசித்து விளங்கிக்கொள்க.
- உருவப் படங்களை நன்றாக நோக்குக.
- தலைப்புக்குப் பொருத்தமாக செயற்பாட்டில் ஈடுபடுக.

### செயற்பாடு

- வட்டதாகெயவில் விசேட பண்புகளை உள்ளடக்கிய பாடசாலை இலக்கிய மன்றத்தில் உரையாற்றப் பொருத்தமான உரைக்காகத் தரவுகளை சேகரித்துக்கொள்க.
- தயார் செய்யப்பட்ட உரையை வகுப்பில் நிகழ்த்த ஏற்பாடு செய்க.
- ஆசிரியரின் உதவியைப் பெற்றுக்கொள்க.

**இணைப்பு 7.1.5.2**

## வாசிப்புப் படிவம்

- சைத்தியத்தின் (தூபியை) பாதுகாப்புக்காக சைத்தியத்தை சுற்றி அமைக்கப்படும் அரண் வட்டதாகெய எனப்படும். இது சைத்தியகர, தூபகர எனும் பெயர்களாலும் குறிப்பிடப்படும்.

- தூபாராமய வட்டதாகெய இலங்கையில் அமைக்கப்பட்ட முதல் வட்டதாகெய என வரலாறு சான்று பகிர்கிறது.

- சைத்தியத்தை சுற்றி ஒரே மையப்புள்ளியுடன் அமைக்கப்பட்ட மூன்று தூண்களின் மேல் வட்டதாகெயவின் கூரை பொருத்தப்பட்டிருந்தது. வட்டவடிவமான அமைப்பைக்கொண்ட இவ்வீட்டின் கூரை சைத்தியத்தை மூடி நிற்பதோடு மத்திய பகுதி அரைவட்ட வடிவமாகவும் வெளிப்புறம் சற்று சாய்வாகவும் காணப்படுகின்றன.

- கூரையை தாங்கி நிற்கும் கற்றூண்கள் வட்டதாகெய நிர்மாணத்தின் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. மிக நுணுக்கமான முறையில் அமைக்கப்பட்ட கற்றூணின் உச்சி அழகாக அமைக்கப்பட்டுள்ளது. விசித்திரமான சிற்பங்களைக் கொண்டு கற்றூணின் உச்சியில் அமைக்கப்பட்ட பொதிகை மீது தீராந்திகள் பொருத்தப்பட்டிருக்கலாம்.

- வட்டதாகெய அமைக்கப்பட்ட சிறிய சைத்தியங்களுக்காக மட்டுமே பெரிய சைத்தியங் களைச் சுற்றி வட்டதாகெய அமைக்கப்படவில்லை.

- மத்திய பகுதியின் வட்டவடிவமான கூரை வட்ட அமைப்பில் இருந்த தீராந்திகளை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்டிருந்தது.

### வட்டதாகெய காணக்கூடிய இடங்கள்

- அநுராதபுரம் - தூபாராமய, அம்பஸ்தல, தாகெப, லங்காராமய
- பொலனறுவை - வட்டதாகெய. மெதிரிகிரிய, பொலனறுவை வட்டதாகெய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தூபாராம



வட்டதாகே பொலநறுவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 7** : **தேசிய, சர்வதேச வரலாற்றுக் காலத்துக்குரிய ஓவியங்கள், சிற்பங்களின் கலைப் பெறுமதியை விமர்சனம் செய்து அவற்றில் காணப்படும் சிற்பங்களை தனது நிருமாணங்களுக்கு பயன்படுத்துவர்.**

**தேர்ச்சி மட்டம் 7.2** : வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்து கலை நிர்மாணங் களை ஆராய்வர்.

**செயற்பாடு 7.2.1** : இந்து சிலைகள்

**நேரம்** : 02 பாடவேளை

**தர உள்ளீடு** :

- இணைப்பு 7.2.1.1 இல் அடங்கிய ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்
- இணைப்பு 7.2.1.2 இல் அடங்கிய வாசிப்புப் படிவங்கள்
- பிள்ளையார் சிலை, பார்வதி சிலை, நந்தி சிலை உள்ள புகைப்படங்கள், உருவப்படங்கள்
- Transparent sheetss, இருவெட்டுகள், Video இருவெட்டுக்கள், Slides, Projectors, கணினிகள்
- கடதாசிகள், மாக்கர் பேனா, Platignum, Maggi board

**கற்றல் - கற்பித்தல் செயற்பாடு**

**படி 7.2.1.1** :

- பிள்ளையார் சிலை, பார்வதி சிலை, நந்தி சிலை என்பவற்றின் புகைப்படங்களை Vedio நாடாக்கள், இரு வெட்டுகள், Slides, Projectors, Computers போன்றவற்றை உபயோகித்துக் காண்பிக்குக.
- காண்பிக்கப்படும் புகைப்படங்கள் பற்றி மாணவர்களிடம் கருத்துக்களை வினவுக.
- பிள்ளையார் பற்றி யஎழுதப்பட்ட பாடல்களை வகுப்பில் பாடச் செய்க.
- பாடல்கள் மூலம் வெளிப்படுத்தப்படும் பிள்ளையாரின் பண்புகள் பற்றிய மாணவர்களுடைய கருத்துகளை வினவுக.
- கடவுளை வழிபடல் சமூகத்தின் வழக்கமாக இருப்பது பற்றி மாணவர்களது கருத்தை வினவுக.
- கீழ் உள்ள விடங்களைக் கலந்துரையாடுக.

> - பிள்ளையார், பார்வதி, நந்தி ஆகிய கலைப்படைப்புகள் மூலம் இந்து மதத்தின் கோட்பாடுகளை அறியலாம் என்பது
> - அக்கலைப்படைப்புகளில் அவற்றுக்கே உரிய தனித்து வமான பண்புகளைக் காணலாம் என்பது.

**(20 நிமிடங்கள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படி 7.2.1.2** :

- இணைப்பு 7.2.1.1 இல் அடங்கிய ஆய்வு/செயற்பாட்டுப் பத்திரங்களை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 7.2.1.2 இல் அடங்கிய வாசிப்புப் படிவங்களை மாணவர்களுக்கு வழங்குக.
- வாசிப்புப் படிவத்தை வாசித்துப் புரிந்துகொள்ள மாணவருக்கு உதவுக.
- வகுப்பில் உள்ள மாணவரை 3 குழுக்களாக்குக.
- குழுச்செயற்பாட்டில் மாணவர்களை ஈடுபடுத்துக.

**(40 நிமிடங்கள்)**

**படி 7.2.1.3** :

- மாணவர்களது செயற்பாடு பற்றி கலந்துரையாடுக.
- அவர்கள் ஒவ்வொருவருக்கிடையில் தங்கள் கருத்துக் களைப் பரிமாறிக்கொள்ள உதவுக.
- கீழே உள்ள விடயங்களுடன் கலந்துரையாடுக.

> - வெண்கலத்தாலான பிள்ளையார் சிலை இந்து ஆலயங் களில் காணக்கூடிய கலைத்திறன்மிக்க ஒரு நிர்மாணம் என்பது.
> - யானை முகமும் மனித உடலும் கொண்ட பிள்ளையார் உருவத்தில் நான்கு கரங்கள் உள்ளது என்பது.
> - 12ஆம் நூற்றாண்டுக்கு உரிய வெண்கலத்தாலான பொலனறுவை இல. 5 சிவன் ஆலயத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்ட 81cm உயரமான பிள்ளையார் சிலை ஒரு சிறந்த ஆக்கம் என்பது.
> - பொலனறுவை இல. 04 சிவன் ஆலயத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்ட கி.பி. 11ஆம், 12ஆம் நூற்றாண்டு களைச் சேர்ந்தது எனக் கருதம்படும் 56.5cm உயரம் கொண்ட பார்வதி சிலை விசேடத் திறமைகளுடன் ஆக்கப்பட்டுள்ளது என்பது.
> - இந்து பக்தர்கள் நந்தி சிலையை புனிதத் தன்மையுடன் வழிபடுவார்கள் என்பது.
> - நந்தி சிவபெருமானின் வாகனம் எனக் கருதப்படுகிறது என்பது.
> - பொலனறுவை இல. 02 சிவன் ஆலயத்துக்கு முன்னால் கருங்கல்லால் ஆன நந்தி சிலைகளைக் காணலாம் என்பது.

**(20 நிமிடங்கள்)**



13. S. P. C. 081055

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீட்டு மதிப்பீட்டுப் பரிமாணங்கள்

- பிள்ளையார் சிலை, பார்வதி சிலை, நந்தி சிலை ஆகியவற்றின் கலைத்திறமைகளை விபரிப்பர்.
- அவற்றின் நிர்மாணத் திறமைகளை மதிப்பிடுவர்.
- வட்டதாகெயவின் பண்புகளை விபரித்த வண்ணம் வசனங்களை அமைப்பர்.
- இந்து சிலைகளில் உள்ள பண்புகளை ஒப்பிட்டு விமர்சித்து இரசிப்பர்.
- குழு அங்கத்தவர்களுடன் ஒற்றுமையாக செயற்படுவர்.

**இணைப்பு 7.2.1.1**

## ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்

- இணைப்பு 7.2.1.1 இல் அடங்கிய வாசிப்புப் படிவத்தை வாசித்து விளங்கிக்கொள்க.
- உருவப் படங்களை நன்றாக நோக்குக.
- தலைப்புக்குப் பொருத்தமாக செயற்பாட்டில் ஈடுபடுக.

### செயற்பாடு

**குழு 1:** பிள்ளையார் சிலை பற்றி 5 வாக்கியங்கள் எழுதுக.
**குழு 2:** பார்வதி சிலை பற்றி 5 வாக்கியங்கள் எழுதுக.
**குழு 3:** நந்தி சிலை பற்றி 5 வாக்கியங்கள் எழுதுக.

- ஒவ்வொரு குழுவும் பெற்ற தகவல்களை பகிர்ந்து கொள்ள உரிய ஏற்பாடுகளைச் செய்க.
- ஆசிரியரின் உதவியைப் பெற்றுக்கொள்க.

**இணைப்பு 7.2.1.2**

## வாசிப்புப் படிவம்

### பிள்ளையார் சிலை

- கி.பி. 11ஆம், 12ஆம் நூற்றாண்டில் பொலனறுவை இந்து ஆலயங்களில் நிர்மாணிக்கப்பட்ட இந்து மத வெண்கலச் சிலையாகும்.
- சிவபெருமான், பார்வதி தேவி அவர்களின் மூத்த மகன் எனக் கருதப்படுகிறது.
- யானை முகத்தான் ஆன பிள்ளையார் ஞானத்துக்கும் அறிவுக்கும் அதிபதியாயிருக்கிறதுடன் தடைகளை அகற்றவும் உதவுகிறார் என நம்பப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


- கம்பீரமாக அமர்ந்திரக்கும் பிள்ளையார் நான்கு கைகளைக் கொண்டுள்ளார். பின்புற வலது கையில் கோடரியும், பின்புற இடது கையில் அரிச்சுவடியும், முன் பக்க வலது கையில் உடைந்த தந்தமும், முன்பக்க இடது கையில் மாங்காயும் ஏந்தியிருக்கிறார்.
- பிள்ளையார் இந்து பக்தர்களின் வல்லமை உள்ள கடவுளாக இருப்பதுடன் முதன்மைக் கடவுளாகவும் இருக்கிறார்.

### நந்திச்சிலை

- இந்து பக்தர்களின் புனிதம் வாய்ந்ததான பசு நந்தி எனக் குறிக்கப்படுகிறது.
- இந்து ஆலயங்களில் நந்தி சிலையைக் காணலாம்.
- பொலனறுவை இல. 2 சிவன் ஆலயத்தின் முன்னால் கருங்கல்லால் செதுக்கிய நந்தி சிலையைக் காணலாம்.

### பார்வதி சிலை

- வெண்கலத்தால் ஆன இந்து மதத்துக்குரிய சிலையாகும்.
- கி.பி. 11ஆம், 12ஆம் நூற்றாண்டுகளில் இந்து ஆலயங்களில் நிர்மாணிக்கப்பட்டது.
- பார்வதி தேவி, சிவசக்தி, சிவகாமேஸ்வரி எனும் பெயர்களாலும் அழைக்கப்படுகிறார்.
- இப்பார்வதி சிலையானது பெண்ணுக்குரிய இயற்கை வனப்பைக் காட்டுகிற மூன்று அங்கங்களின் இயல்பினைத் தெளிவாகக் காட்டுவதாக உள்ளது.
  அவையாவன: மெல்லிடை, அகன்ற இடைக்கீழ்ப்பகுதி, பருத்த மார்பங்கள்.
- தலையிலுள்ள ஆபரணங்கள், ஆபரணங்களாலான மேலாடை, மற்றும் கீழாடையின் அமைப்புக்குச் சிலைக்கு மேலும் அழகூட்டுவதாக அமைந்துள்ளது.
- பொலனறுவை இல. 04 சிவன் ஆலயத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்ட தற்போது தேசிய நூதனசாலையில் காணக்கூடிய பார்வதி சிலை திறமையாக நிர்மாணிக்கப் பட்டுள்ளது. அதே போன்று பொலனறுவை இல. 05 சிவன் ஆலயத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்ட தற்போது அநுராதபுர நூதனசாலையில் காணக்கூடிய சிவகாமசுந்தரி சிலையும் திறமையான வெண்கலச் சிலையாகும்.



நந்தி சிலை



பார்வதி தேவி சிலை



பிள்ளையார் சிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 7** : **தேசிய, சர்வதேச வரலாற்றுக் காலத்துக்குரிய ஓவியங்கள், சிற்பங்களின் கலைப் பெறுமதியை விமர்சனம் செய்து அவற்றில் காணப்படும் சிற்பங்களை தமது நிருமாணங்களுக்கு பயன்படுத்துவர்.**

**தேர்ச்சி மட்டம் 7.3** : தேசிய பாரம்பரிய அலங்கார உருவங்களைக் கற்பர்.

**செயற்பாடு 7.3.1** : பாரம்பரிய அலங்காரம்

**நேரம்** : 03 பாடவேளை

**தர உள்ளீடு** :

- இணைப்பு 7.3.1.1 இல் அடங்கிய ஆய்வு/செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்
- இணைப்பு 7.3.1.2 இல் அடங்கிய வாசிப்புப் படிவங்கள்
- அலங்கார உருவங்கள் உள்ள படங்கள்
- அலங்கார உருவங்கள் பயன்படுத்தப்பட்டுள்ள இடங்கள் பற்றிய புகைப்படங்கள், Transparent sheets, இருவெட்டுகள், Video நாடாக்கள், Projectors, கணினிகள்

**கற்றல் - கற்பித்தல் செயற்பாடு**

**படி 7.3.1.1** :

- அலங்கார உருவங்கள் கொண்ட உருவப்படங்களும், அவை பயன்படுத்தப்பட்ட இடங்களும் உள்ள புகைப் படங்கள், Transparent sheets, Vedio நாடாக்கள், இரு வெட்டுகள், Slides, Projectors, Computers போன்றவற்றை உபயோகித்துக் காண்பிக்குக.
- கீழ் உள்ள விடங்களைக் கலந்துரையாடுக.

| |
|---|
| • அலங்கார உருவங்கள் பல கலை நிர்மாணங்களில் ஆதி காலம் தொடக்கம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது<br>• சுற்றாடலில் உள்ள தாவரங்கள், பூக்கள் ஆகியவற்றை ஆதாரமாகக்கொண்டு இவ் அலங்காரங்கள் நிர்மாணிக் கப்பட்டுள்ளது என்பது.<br>• ஆதிகாலம் தொடக்கம் இவ் அலங்கார உருக்களுக்கும் மனிதனின் அன்றாட வாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது என்பது. |

**(10 நிமிடங்கள்)**

**படி 7.3.1.2** :

- இணைப்பு 7.3.1.1 இல் அடங்கிய ஆய்வு/செயற்பாட்டுப் பத்திரங்களை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 7.3.1.2 இல் அடங்கிய வாசிப்புப் படிவங்களை மாணவர்களுக்கு வழங்குக.
- வாசிப்புப் படிவத்தை வாசித்துப் புரிந்துகொள்ள மாணவருக்கு உதவுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அலங்கார உருவங்களை வகைப்படுத்தி ஒரு சஞ்சிகை ஆக்குக.

**(80 நிமிடங்கள்)**

படி 7.3.1.3 :
- மாணவர்களது செயற்பாடு பற்றி கலந்துரையாடுக.
- அவர்கள் ஒவ்வொருவருக்கிடையில் தங்கள் கருத்துக் களைப் பரிமாறிக்கொள்ள உதவுக.
- கீழே உள்ள விடயங்களுடன் கலந்துரையாடுக.

> - பாரம்பரிய அலங்கார உருவங்களை திவ்ய (தெய்வீக), விலங்கு, தாவரம், நிர்ஜீவி என நான்கு வகைப்படுத்திக் காட்டலாம் என்பது.
>
> - திவ்ய வகைக்கு சூரியன் சந்திரன் என்பன அடங்கும்.
> - விலங்குகளின் உயிருள்ளவையாகவும், கற்பனை விலங்குகளாகவும் பண்புகள் அவற்றின் வெளிப்படும் விதத்தில் அலங்காரங்கள் உருவாக்கப்பட்டுள்ளது என்பது.
> - இதழ்கள், பூக்கள் உபயோகித்து நிர்மாணிக்கப்பட்ட அலங்காரங்கள் தாவர வகையைச் சேர்ந்தது என்பது.
> - கேத்திர கணித வடிவங்களைப் பயன்படுத்தி நிர்மாணிக் கப்பட்ட அலங்காரங்கள் நிர்ஜீவி வகையைச் சேர்ந்தது என்பது.
> - இவ் எல்லா அலங்காரத்திலும் கோடுகளின் பயன், சந்தம், ஒன்றிணைப்பு, தெய்வீகக் கருத்துகள் திறமை யாகப் பயன்படுத்தியுள்ளமை இவ் அலங்கார வடிவங் களில் காணக்கூடிய விசேட தன்மை என்பது.

**(20 நிமிடங்கள்)**

## கணிப்பீட்டு மதிப்பீட்டுப் பரிமாணங்கள்

- பாரம்பரிய அலங்கார வடிவங்களின் கலைத்திறமையை விளக்குவர்.
- பாரம்பரிய அலங்கார வடிவங்களின் நிர்மாணத் திறமையை மதிப்பிடுவர்.
- பாரம்பரிய அலங்கார வடிவங்கள் பற்றிய விபரங்களை உள்ளடக்கி ஒரு சஞ்சிகையை உருவாக்குவர்.
- நவீன அலங்கார வடிவங்களையும் பாரம்பரிய அலங்கார வடிவங்களையும் ஒப்பிட்டு விமர்சித்து இரசிப்பர்.
- ஏனையவர்களுடைய கருத்துக்களை மதிப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வாசிப்புப் படிவம்

### பாரம்பரிய அலங்கார வடிவங்கள்

- பாரம்பரியக் கலைஞர் ஒரு நிர்மாணத்தை செய்யும்போது இயற்கை சூழலில் தான் கண்டதை அதைப்போன்றே வெளிப்படுத்த மறுத்தமை தெரியவந்திருக்கிறது.

- நிர்மாணங்களில் இருந்து கூர்ந்த தன்மை காரணமாக பாரம்பரிய அலங்கார வடிவங்கள் அன்று தொடக்கம் இன்று வரை பேணப்பட்டு வருகிறது.

- பழமை வாய்ந்த கலைஞர் முன்னர் தன் சீடருக்குக் கொடுத்த கோட்டுப் பயிற்சி 'வக தெக' ஆகும்.



- பாரம்பரிய கலைஞர்கள் தமது படைப்புகளுக்கு பலவித அலங்கார வடிவங்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

- பாரம்பரிய அலங்கார உருவங்கள் 4 வகையைச் சேர்ந்தவை.

  1. திவ்ய 2. விலங்கு 3. தாவரம் 4. நிர்ஜீவி

**திவ்ய**

- சூரியனும் சந்திரனும் திவ்ய வகையைச் சேர்ந்தது.
- இது நிரந்தரம் நிலைப்பாடு என்பதைக் குறிக்கும்.
- மனித முகத்தின் வடிவமும் அதனைச் சுற்றி தீச்சுடர் படர்ந்தும் சூரியன் குறிப்பிடப்படுகிறது. வட்ட உருவத்தின் மத்தியில் முயலின் உருவம் உள்ளமை சந்திரனைக் குறிக்கிறது.





**விலங்கு**

- விலங்கு ராச்சியத்தின் சில விலங்குகளைப் பயன்படுத்தி பாரம்பரிய அலங்கார உருவங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

  விலங்கு: மித்யா

  அர்த மித்யா நிரந்தரம்


  இயற்கை

- மித்ய ...................... பகுதியைச் சேர்ந்தது கற்பனை உருவங்களேயாகும். மகரா, செரபெண்டியா, பேருண்ட பட்சி அவற்றுள் சிலவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகர உருவம்



- யானையின் தும்பிக்கையும், சிங்கத்தின் பாதமும், முதலையின் பல்லும், குரங்கின் கண்களும், பன்றியின் காதுகளும், மீன் உடலும், தாவர இலைகள் கொண்ட வாலும் கொண்டது.
- மகர உருவத்தை நிர்மாணம் செய்ய கலைஞர் கோடுகள், தள உருக்கள் போன்ற வற்றைத் திறமையாகப் பயன்படுத்தியுள்ளார்.
- பலகைச்சிற்பம், பித்தளைச்சிற்பம் போன்றவற்றில் பயன்படுத்துவதோடு தோரண அலங்காரமாகவும் மகர உருவம் பயன்படுத்தப்படுகின்றது.

செரபெண்டியா



- அன்னத்தின் உடலமைப்பும், சிங்கத்தின் தலை அமைப்பும் இணைந்த உருவம் செரபெண்டியா ஆகும்.
- இவ்வுருவம் மிக நுட்பமான முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- யானைதந்தம், உலோக வேலை போன்றவற்றில் இவ்வலங்காரம் பயன்படுத்தப்படுகின்றது.
- கரண்டிப்பிடி, வாள்பிடி போன்றவற்றுக்குச் செரபெண்டியா உருவம் பயன்படுத்தப்படுகிறது.

பேருண்ட பட்சி

- பேருண்டு பட்சி இரு தலைகளைக்கொண்ட கழுகின் உருவம் கொண்ட கற்பனைச் சித்திரமாகும்.
- இலங்கையின் முக்கோரளகளின் கொடியின் சின்னமாகவும் இது பயன்படுத்தப்பட்டது.
- இவ்வலங்காரத்தில் சமச்சீர் தன்மையும் சந்தமும் பேணப்பட்டுள்ளது.
- இவ்வலங்காரம் பித்தளை வேலை, உலோகச் சிற்பம் போன்றவற்றிலும் பயன்படுத்தப் பட்டுள்ளது.
- பழங்காலத்துப் பெண்கள் அணிந்த மாலைகளில் பயன்படுத்தப்பட்ட ஒரு பிரபல்யமான அலங்கார வடிவமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எம்பக்க தேவாலயத்தில் பலகை சிற்பங்களில் உள்ள பேருண்ட பட்சி கலைத்திறன் மிக்க நிர்மாணமாகும்.



**அர்த மித்யா (அர்த நிருட)**

- வாழும் விலங்குகளின் இயற்கைப் பண்புகளைக் கொண்டு கற்பனை வடிவில் அமைக்கப்படும் நிர்மாணம் இவ்வாறு அழைக்கப்படும்.

***எடுத்துக்காட்டு:*** சிங்க உருவம், அன்ன உருவம்






**சிங்க உருவம்**

- இலங்கைக் கலைஞர்கள் சிங்க உருவத்தில் நாட்டம் கொண்டதாக விளங்குகின்றனர்.
- சிங்கள உருவத்தில் கௌரவம்(தேஜஸ்) திடம், பலம், திறமை தென்படுகிறது.
- இலங்கையின் தேசியக்கொடியின் சின்னமாக சிங்கத்தை அன்று தொடக்கம் உபயோகித்து வருகின்றனர்.
- இவ்வுருவம் காலத்துக்காலம் மாற்றமடைந்து வருகிறது.
- சீன பூக்கொத்தின் உள்ள சிங்க உருவத்தை விகாரை, தேவாலய வாயில்களை அலங்கரிக்க பயன்படுத்தியுள்ளனர்.

**அன்னம்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இந்து மதத்தின் தூய்மையின் அடையாளமாகிறது. சொர்க்கத்தின் பட்சி எனவும் கருதப்படுகிறது.
- செல்வத்தைத் தேடித்தரும் பொருளாகவும் கருதப்படுகிறது.
- அனுராதபுர யுகத்தில் சந்திர வட்டக்கல்லில் தாமரைப்பூவை வாயில் ஏந்திய அன்னக் கூட்டத்தை இட்டுள்ளனர்.
- ஆதி காலத்தில் இருந்து பல சிற்பங்களை அழகுபடுத்தவும், கட்டடங்களின் அத்தி வாரத்தை அழகுபடுத்தவும் அன்னப்பட்சியின் உருவத்தை பயன்படுத்தியுள்ளனர்.
- அன்னத்தைப் பயன்படுத்தி செய்த நிர்மாணங்களை சுவர் ஓவியங்களிலும் பழமையான அலங்காரங்களிலும் காணலாம்.
- இவ்வலங்காரங்களில் ஹம்சபூட்டுவ நுட்பமான கலைப்படைப்பாகும்.

**ஹம்சபூட்டுவ (பிணைந்த அன்னம்)**



- இவ்வலங்காரம் பலகை சிற்பம், கடதாசி சிற்பம், பித்தளை சிற்பம், யானைத் தந்தத்தைக் கொண்ட சிற்பம் போன்றவற்றில் பயன்படுத்தியுள்ளனர்.
- எம்பெக்கே தேவாலயத்தின் மரம் சிற்பங்களிலும் இவ்வலங்காரங்களைக் காணலாம்.
- கோடுகளை நுட்பமான முறையில் பயன்படுத்தி அன்னத்தின் மென்மையை திறமையாக வெளிப்படுத்தியுள்ளனர்.

**நான்கு ஹம்சபூட்டுவ (அன்னப்பூட்டு)**

- கலைத்திறன் மிக்க ஒரு நிர்மாணமாகும்.
- நான்கு அன்னங்களை ஒன்றிணைத்து ஒரு வட்டத்துக்குள் இவ்வலங்காரம் அமைக்கப் பட்டுள்ளது.
- லங்காதிலக விகாரையின் கூரையின் உட்பகுதி அலங்கரிக்கப்பயன்பட்டது. அத்துடன் கண்டி தலதா மாளிகையின் சுவர் ஓவியங்களிலும் இவ்வலங்காரங்களைக் காணலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. S. P. C. 081055


**இயற்கை விலங்குகள்**

- பழங்காலத்து ஓவியர்கள் இயற்கைப் பண்புகள் மாறாதவாறு விலங்குருவங்களை நிர்மாணித்தனர்.
- அநுராதபுர யுகத்தின் மகாசென் மாளிகை (ராணி பிசோ மாளிகை)க்கு முன்னால் உள்ள சந்திரவட்டக்கல்லில் உள்ள சிங்கம், யானை, பசு, குதிரை போன்றவற்றின் உருவங்கள் இயற்கைப் பண்புகள் மாறாதவாறு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- அவ்விலங்குகளின் பலம், செயற்திறன், இயற்கைப் பண்புகள் நன்றாக வெளிப்படையாகிறது.

**தாவரம்**

- தாவர வகைகளுக்குரிய மலர்கள், இலைகள், கனிகள் பயன்படுத்தி செய்யப்பட்ட நிர்மாணங்கள் இவ்வகையைச் சேர்ந்தது.
- இவ்வலங்காரங்கள் மித்யா, அர்த மித்யா என இருவகைப்படும்.
- மித்யா வகையைச் சேர்ந்து கற்பனை வடிவில் அமைந்த உருவங்ளே.

**நாரிலதா மல**



- பழைய சிங்கள அலங்காரங்களில் நாரி உருவங்கள் முக்கிய இடத்தைப் பிடிக்கின்றன.
- நாரிலதா அலங்காரம் இவ்வாறான ஒரு நிர்மாணமாகும்.
- யானைத் தந்த சிற்பங்களை அழகுபடுத்தவும், நகைப்பெட்டி அழகுபடுத்தவும் நாரிலதா அலங்காரம் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- விகாரையின் சுவரோவியங்களிலும் இவ்வலங்காரத்தை பயன்படுத்துவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சநாரி கலசம்




- ஒன்பது பெண்களை யானையின் வடிவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- இவ்வலங்காரத்தைக்கொண்ட யானைத் தந்தத்தால் ஆன சிற்பம் ஒன்று குருணாகல் ரிதீ விகாரையில் காணலாம்.

தாவர வகை (உத்பித/விருட்ச)

- இது ஒரு பாரம்பரிய சிங்களக் காட்டுரு ஆகும். ஓவியங்களின் சிற்பங்களின் வெற்றிடங்களை நிரப்பப்பயன்படும்.
- எம்பெக்க தேவாலயத்தில் இவற்றைக் காணலாம்.
- விகாரை சுவரோவியங்களில் இவற்றைக் காணலாம். தலதா மாளிகை, கங்காராம விகாரை, தெகல்தொறுவ விகாரை ஆகியவற்றிலும் காணலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1, 2 அன்னாசிமலர் 3. சப்பு மலர் 4. தாழம்பூ 5. கடுபுல் மலர் 6. மல்லிகை மலர் 7. சீன மலர் 8. கத்திரி மலர் 9. அல்லி (மானெல்) 10. நாகமலர் (நாகதெல்ல)

## நிர்ஜீவி

- கேத்திர கணித தள உருவங்களைப் பயன்படுத்தி செய்யப்பட்ட நிர்மாணங்கள் இவ் வகையை சேர்ந்தவை.
- இரு சமாந்தரக் கோடுகளுக்கிடையில் அல்லது வரிசையாக உள்ள வட்டங்களுக் கிடையில் அலங்காரங்களை உருவாக்க இவை பயன்படும்.
- அநுராதபுர பொலனறுவை யுகங்களில் சந்திரவட்டக் கல்லில் இந் நிர்ஜீவி அலங்கார வடிவங்கள் பயன்படுத்தப்பட்டன.




1. அரும்பு 2. சீப்பு 3 பலாப்பெத்தி 4. குத்திரிக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3.0 கணிப்பீடும் மதிப்பீடும்



15. S. P. C. 081055

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.1 அறிமுகம்

கற்றல் கற்பித்தல் செயன்முறையின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற கற்றலின் பலனை மாணவர்கள் பெற்றுக் கொண்டதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், மாணவர்கள் அண்மித்துள்ள அடைவு மட்டத்தை இனங்கண்டு கொள்வதற்கும், வகுப்பறையில் இலகுவாகச் செய்துகொள்ளக்கூடிய உள்ளக சம்பந்தப்பட்ட வேலைத்திட்டங்கள் இரண்டு என, கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் அறிமுகம் செய்யலாம். கணிப்பீடு உரிய முறையில் நடைபெற்றால் வகுப்பில் கற்கும் சகல மாணவர்களதும் உரிய தேர்ச்சி தொடர்பான கிட்டிய அடைவையாகிலும் பெற்றுக் கொள்வது கடினமல்ல. மறுபக்கத்தில் மதிப்பீட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுவது மாணவர் அண்மித்துள்ள அடைவு மட்டம் யாது என இனங்கண்டு கொள்வதாகும்.

கணிப்பீட்டில் ஈடுபட்டு இருக்கும் ஆசிரியருக்குத் தமது மாணவர்களின் பொருட்டு இரு வகையான வழிகாட்டல்களை வழங்கமுடியும். இவ்வழிகாட்டல் பொதுவாகப் பின்ஊட்டல் (Feed Back), முன்ஊட்டல் (Feed Forward) என அறியப்படும். மாணவர்களது பெலயீனம், இயலுமை, இயலாமை ஆகியவற்றை அறிந்து கொள்வதுடன், அவர்களது கற்றல் பிரச்சினை யைத் நீக்குவதற்குப் பின்ஊட்டல் மூலம், மாணவர்களது ஆற்றலையும் அடைவையையும், இனங்கண்டு கொண்டு, அத்திறனை மேலும் முன்னேற்றம் செய்வதற்கு முன்ஊட்டலையும் அளித்தல் ஆசிரியரது கடமையாகும்.

கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் வெற்றியின் பொருட்டு பாடத்திட்டத்தில் உள்ளடங்கி உள்ள தேர்ச்சி முடிந்தது என மாணவர் இனங்கண்டு கொள்ளுதல் அவசியமாகும். மதிப்பீட்டு வேலைத்திட்டத்தின் மூலம் மாணவர் அண்மித்துள்ள அடைவு மட்டத்தை தீர்மானிப்பதை ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படுவதுடன் மாணவர்களது முன்னேற்ற அறிக்கையை பெற்றோருக்கும், மற்றும் உரியவர்களுக்கும் தெரியப்படுத்துவது ஆசிரியரின் கடப்பாடாகும்.

உம்மிடம் முன்வைக்கப்பட்டுள்ள பாடத்திட்டம் மாணவர் மையத் (Student Centerd) தேரச்சியை அடிப்படையாக கொண்ட செயற்பாட்டை பிரகாசிக்கச் (Activity Oriented) செய்யும் ஆரம்பத்தைக் கொண்டதாகும். வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக ஆக்கிக் கொள்வதற்கு செயலுடன் கற்றல், ஆசிரியருடைய மாற்றம் பெற்ற செயற்பாங்கு (Trance Formation Role) அவசியம் ஆகும்.

முதலில் அபிவிருத்தி செய்த செயற்பாட்டுத் தொகுதியின் மூலம் செயற்படும் இந்தப் பாடவிதானம் கற்றல் கற்பித்தல் கணிப்பீடு மதிப்பீடுடன் மீளாய்வு செய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டு உள்ளது. அந்த அந்த செயற்பாடுகளில் இரண்டாவது படியில் மாணவர்கள் குழுக்களாக ஆய்வில் ஈடுபடும் பொழுது அவர்களைக் கணிப்பிடுவதற்கும், செயற்பாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது படியில் மாணவர்கள் சுயமாக பேறுகள் கண்பிடிப்புக்கள் என்பவற்றை சமர்ப்பிக்கும் போதும், விமர்சனங்களில் ஈடுபடும் பொழுதும் அவர்களை மதிப்பீடு செய்வதற்கும் ஆசிரியருக்கு முடிகிறது. மாணவர் ஆய்வில் ஈடுபடும் பொழுது அவர்களிடையே சென்று அவர்கள் செயல்களை மேற்பார்வை செய்து மாணவர்கள் முகங் கொடுக்கும் பிரச்சினைகளை வகுப்பறையிலேயே தீர்த்து வைப்பதற்கு வசதிகளையும், வழிகாட்டலையும் வழங்குவதை ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படும் செயற்பாடாகும்.

கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் இலகுவாகச் செய்து கொள்வதற்கு ஐந்து பொது நியதிகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்நியதிகள் இடையே முதலாவது நியதிகள் மூன்றும் அந்த அந்த தேர்ச்சிகளை மேம்படுத்துவதற்கு தொடர்புடைய அறிவு, திறன், மனப்பாங்கு களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இறுதி நியதிகள் இரண்டும் வாழ்க்கைக்கு அவசியமான ஆற்றல்கள் இரண்டையும் அடைவதற்கு மாணவர்களுக்கு கைகொடுக்கும். இந்த நியதிகளுடன் தொடர்புடைய நடத்தை மாற்றங்களை வகுப்பறை யில் மாணவர் செயற்படும் பொழுது இனங்கண்டு கொள்வதற்கு ஆசிரியர் முயற்சி செய்வதுடன் கணிப்பீட்டின் கீழ் அவ் நடத்தைகளை மேம்படுத்துவதை உறுதிசெய்து கொள்வதற்கும் மதிப்பீட்டின் கீழ், அவ்வாறு உருவான நடத்தை பற்றி தீர்மானத்திற்கு வருவதற்கும் ஆசிரியர் செயற்படுதல் வேண்டும்.

கணிப்பீடும் மதிப்பீடு தொடர்பான நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்தி கற்றல் கற்பித்தல் செயன்முறையை தொடரமுடியும். இவ்வாறு கற்றல் கற்பித்தலை தொடர்வதன் பொருட்டு, முதலில் செய்யவேண்டியது செயற்பாட்டுத் தொகுதியில் உள்ளடங்கி உள்ள செயற்பாட்டை சில பகுதிகளாகப் பிரித்துக் கொள்ளலாகும். மாணவர் கற்றலை மேம்படுத்தக்கூடிய வேறுபாடுகள் சிலவற்றையும், அந்த அந்த செயற்பாட்டுப் பகுதியையும், அதனுடன் இணைந்த விடயங்கள் யாவற்றையும், அடித்தளமாகக் கொண்டு இரண்டாவதை இனங்கண்டு கொள்ளவேண்டும். தெரிவு செய்து கொண்ட வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியருக்கும், மாணவர்க்கும் ஆலோசனைகளை உள்ளடங்கும் வகையில் கற்றல் கற்பித்தல் செயன்முறையைத் தொடரும் கருவியைத் தயாரித்துக் கொள்வது அடுத்த படியாகும். சகல செயற்பாட்டு பகுதியின் ஆரம்பத்திலேயே இந்தக் கருவி மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்படுத்துவது ஆசிரியரின் கடப்பாடாகும். இதன்படி கற்றல் கற்பித்தல் தொடர்வதற்கு ஆசிரியர் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய விடயங்களை சில கீழே தரப்பட் டுள்ளன.

- எண்ணக்கரு விளக்கம் (Concept maps)
- சுவர்ப் பத்திரிகை (Wall news papers)
- வினா விமர்சன வேலைத்திட்டம் (Quizzes)
- வினா விடைப் புத்தகம் (Question and answer book)
- மாணவர் செயற்பாட்டுக் கோவை (Portfolios)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாணவர் ஆக்கக் கண்காட்சி (Exhibitions)
- விவாதம் (Debates)
- குழுக் கலந்துரையாடல் (Panel discussions)
- கருத்தரங்கு (Seminer)
- நேரடிப்பேச்சு (Speeches)
- கதாபாத்திர நடிப்பு (Role palys)
- இலக்கிய விமர்சன வெளியீடு (Presentation of literture reviews)
- களநூல் / இயற்கைக் கற்றல் தினப் பதிவேடு / தள வேலைப்புத்தகம் (Field books / Nature diaries)
- செயன்முறைப் பரீட்சை (Practical tests)

ஆசிரியர் வழிகாட்டல் நூலின் மூன்றாவது பகுதிக்குரிய கற்றல் கற்பித்தலை தொடர்ச்சிப் படுத்தும் சந்தர்ப்பத்தில் அதன் பொருட்டு தெரிவு செய்துள்ள கருவியை அறிமுகப்படுத்து வதற்கு திட்டமிடப்பட்டு உள்ளது.

இதுபோல் செயற்பாட்டினுள்ளும், அதன் இடையேயும் கணிப்பீடும் மதிப்பீடும் இரு வகையில் நடைமுறைப்படுத்தி, கற்றல் - கற்பித்தல் செயன்முறை தொடர்ந்தும் விரிவடைவதுடன், விருப்புடனும், புத்துணர்வுடனும் கற்றலில் ஈடுபடுவதற்கு மாணவர்க்கு இயலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.2 கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை விரிவாக்கும் கணிப்பீட்டுக் கருவி

1. **பாடசாலைத் தவணையும் கருவியும் :** முதலாம் தவணை - கருவி 01

2. **பூர்த்தி செய்யப்படும் தேர்ச்சி மட்டம்:** 1.1. 1.3, 2.1, 3.1, 7.3

3. **பூர்த்தி செய்யப்படும் பாடப்பகுதிகள் :** சித்திரங்களின் தொகுப்பு, அலங்காரங் களின் உருவாக்கம், பொருட்கூட்டங் களை பார்த்து வரைதல், சம்பிரதயாத பூர்வமான சித்திரங்கள்

4. **கருவியின் தன்மை :** சம்பிரதாய நுட்பமுறையில் அமைந்த சித்திர முறைகளை பின்பற்றி சித்திர மொன்றை நிர்மாணித்தல்

5. **கருவியின் நோக்கம் :**
   - சம்பிரதாய அலங்கார வடிவங்களை இனங்கண்டு அவற்றை பயன் படுத்துவர்.
   - கருத்து வெளிப்பாட்டு சித்திர மென்றால் என்ன என்பதை உணர்ந்து செயற்பாட்டில் ஈடுபடுவர்.
   - சித்திரங்களை வரைவதற்கேற்ற பொருத்தமான தளமொன்றை தேர்ந் தெடுப்பர்.
   - தளத்திற்கேற்ற பொருத்தமான வடிவங் களை அவ்விடயங்களிலே ஸ்தாபித் தல்
   - நுட்பமுறைகளை பின்பற்றி தெரிவு செய்யப்பட்ட தலைப்பொன்றின் கீழ் சித்திரங்களை வரைவர்.
   - குழு மனப்பாங்குடன் செயற்படுவர்.

6. **கருவியை நிர்மாணிக்கத் தேவையான ஆசிரியருக்கு அறிவுறுத்தல்கள்:**
   - செயற்பாடு 1.3.1, 2.1.1, 3.1.1, 3.1.2, 7.3.1 ஆகியவற்றை ஆரம்பிக்க முன் இக்கருவியை மாணவர்களுக்கு அறி முகப்படுத்துக.
   - அவர்களுடன் ஆலோசித்து நல்ல தொரு தலைப்பொன்றை தெரிவுசெய் வதற்கு ஒத்தாசையாக இருங்கள்.
   - முழு வகுப்பையும் ஒரு குழுவாகக் கருதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தேவையான மூலப்பொருட்கள், உப கரணங்களை பெற்றுக்கொள்வதற்கு உதவி புரியுங்கள். சுவர், மதில், கல்லொன்றின் வெளிமேற்பரப்பு போன்ற தளங்களில் ஒன்று.
- தெரிவுசெய்யப்பட்ட தலைப்பொன்றின் கீழ் சித்திரத்தை வரைவதற்கு ஆலோசனை வழங்கவும்.
- பூரணப்படுத்தப்படும் தேர்ச்சி மட்டங்களினை சார்ந்த விடய உள்ளடக்கங்களுள் இச்செயற்பாடுகள் அடங்குகின்றனவா என அவதானத்துடன் பார்த்துச் செயற்படவும்.
- நிர்மாணம் முடிவு செய்யப்பட வேண்டிய காலவரையறையை முன் கூட்டியே அறிவிக்கவும்.
- வழமைபோல மதிப்பீட்டு பணிகளில் ஈடுபடவும்.

**மாணவர்களுக்கு:**

- பாரிய அளவிலான சித்திரமொன்றினை நிர்மாணிப்பதற்கு ஏற்ற தளமொன்றை ஆசிரியரின் உதவியுடன் தெரிவுசெய்க.
- வகுப்பில் சகலருடைய ஒத்துழைப்புடனும் இச்செயற்பாட்டினை செய்தல் வேண்டும்.
- தெரிவுசெய்யப்பட்ட தளத்திற்கு ஏற்றாற்போல், தலைப்புக்கு ஏற்றவாறான பரும்படிப்படமொன்றை வரைக.
- மரபுவழி சம்பிரதாயத்திற்கு ஏற்றவாறான வடிவங்களை பயன்படுத்துக.
- நீங்கள் இதுவரை கற்றுக்கொண்ட விடயங்களுக்கேற்ற அறிவனை பயன்படுத்தி சித்திரத்தை வர்ணம் தீட்டுங்கள்.
- கொடுக்கப்பட்ட கால வரையறைக்கும் சித்திரத்தை பூரணப்படுத்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. கணிப்பீட்டு முறை

| மாணவர் நிர்மாணம் களின் பெயர் | 1 | 2 | 3 | 4 | 5 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |
| 4. | | | | | | |
| 5. | | | | | | |
| 6. | | | | | | |
| 7. | | | | | | |

**நியதிகளும் புள்ளிகளும்**

1. ஆலோசித்து தலைப்பொன்று தெரிவுசெய்தல், பரும்படிப்படமொன்றை வரைதல் - 04
2. தளமொன்றறை தெரிவுசெய்தல், அதனை வரைவதற்கு ஏற்றவாறு மாற்றுதல் - 04
3. வரைந்த பரும்படிப்படத்தை சிறந்த முறையில் தளத்தில் வரைதல் - 04
4. ஏற்ற உபகரணங்களைப் பயன்படுத்தி சித்திரத்தை வரைந்து பூரணப்படுத்தல் - 04
5. முழு வகுப்பையும் ஒரு குழுவாகக்கருதி ஒத்துழைப்பு வழங்கி, தொடர்ந்து செயற்றிட்டத்தில் ஈடுபடல் - 04

**புள்ளித்திட்டம்**

1. மிக நன்று 04
2. நன்று 03
3. மத்திமம் 02

   விருத்தியடைய வேண்டும் 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.2 கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை விரிவாக்கும் கணிப்பீட்டுக் கருவி

1. **பாடசாலைத் தவணையும் கருவியும் :** இரண்டாம் தவணை - கருவி 2

2. **பூர்த்தி செய்யப்படும் தேர்ச்சி மட்டம்:** 3.1, 4.1

3. **பூர்த்தி செய்யப்படும் பாடப்பகுதிகள் :** பாரம்பரிய அலங்காரங்களைக் கொண்டு சஞ்சிகை ஒன்றின் வெளிப்புற அட்டையை உருவாக்குதல்

4. **கருவியின் தன்மை :** பாரம்பரிய அலங்காரங்களை உள்ளடக்கி சஞ்சிகை ஒன்றை உருவாக்குதல்

5. **கருவியின் நோக்கம் :**
   - பாரம்பரிய அலங்கார வடிவங்களைக் குறிப்பிடுவர்.
   - பாரம்பரிய அலங்கார வடிவங்களை இனங்காண்பர்.
   - அலங்கார வடிவங்களைக் கொண்ட உருவப்படங்களை சேகரிப்பர்.
   - நூல் நிலையத்தைப் பயன்படுத்தி அலங்கார வடிவங்கள் பற்றிய குறிப்புகளை எடுப்பர்.
   - அலங்கார வடிவங்களை வகைப்படுத்துவர். (திவ்ய, விலங்கு, தாவரம், நிர்ஜீவி)
   - அலங்கார வடிவங்களை ஒழுங்க முறைப்படுத்துவர். (கரை அலங்காரம்..)
   - அலங்கார வடிவங்களுக்குரிய விபரங்களை சேகரிப்பர்.
   - தொனிப்பொருளுக்குப் பொருத்தமாக வெளிப்புற அட்டையுடன் சஞ்சிகை ஒன்றை நிர்மாணிப்பர்.

6. **கருவியை நிர்மாணிக்கத் தேவையான ஆசிரியருக்கு : அறிவுறுத்தல்கள்:**
   - செயற்பாடு 3.1.1, 3.1.2, 3.1.3, 4.1.2 ஆரம்பிக்க முன் இக்கருவியை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துக.
   - 3.1.1, 3.1.2, 4.1.2 செயற்பாடு ஆரம்பிக்கும் பொழுதில் இருந்து குறிக்கோள்கள் நிறைவேறும் விதத்தில் செயற்படுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நிர்மாணம் முடிக்க வேண்டிய இறுதிய நாளை மாணவருக்கு அறிவிக்குக.
- பொருத்தமான விதத்தில் செயற்பாட் டில் ஈடுபடுக.

**மாணவர்களுக்கு:**

- ஆசிரியரின் உதவியுடன் பாரம்பரிய அலங்காரங்கள் எவை என இனங் காண்க.
- உரிய பாடங்களைக் கற்கும்போது அலங்கார வடிவங்கள் பற்றிய விளக்கத்தைப் பெறுக.
- பாரம்பரிய அலங்கார வடிவங்களைக் கொண்ட உருவப்படங்களை சேகரிக் குக.
- நூல் நிலையத்தைப் பயன்படுத்தி அவை பற்றிய மேலதிக தகவல்களை சேகரிக்குக.
- ஆசிரியரின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப அலங்கார வடிவங்களை ஒழுங்கு முறையில் வகைப்படுத்துக.
- பொருத்தமான வெளிப்புற அட்டை ஒன்றை நிர்மாணம் செய்க.
- குறிப்பிட்ட கால எல்லைக்குள் சஞ்சி கையை செய்து முடிக்குக.

## புள்ளித்திட்டம்

| | |
|---|---|
| 1. மிக நன்று | 04 |
| 2. நன்று | 03 |
| 3. மத்திமம் | 02 |
| விருத்தியடைய வேண்டும் | 01 |

## நியதிகளும் புள்ளிகளும்

| | |
|---|---|
| 1. தலைப்புக்குப் பொருத்தமான உருவப்படங்களை சேகரித்தல் | - 04 |
| 2. உருவப்படங்களுக்குப் பொருத்தமான தகவல்களை சேகரித்தல் | - 04 |
| 3. சேகரித்த தகவல்களைத் தொகுத்து சஞ்சிகையை நிர்மாணித்தல் | - 04 |
| 4. தொனிப்பொருளுக்குப் பொருத்தமாக வெளிப்புற அட்டையை நிர்மாணித்தல் | - 04 |
| 5. முழுமையாக்கப்பட் நிர்மாணத்தின் தன்மை | - 04 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.2 கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை விரிவாக்கும் கணிப்பீட்டுக் கருவி

**1. பாடசாலைத் தவணையும் கருவியும் :** மூன்றாம் தவணை - கருவி 03

**2. பூர்த்தி செய்யப்படும் தேர்ச்சி மட்டம்:** 2.1, 5.1. 5.2, 5.3

**3. பூர்த்தி செய்யப்படும் பாடப்பகுதிகள் :** பொருட்கூட்டங்களை பார்த்து வரைதல், சிலைகளை நிர்மாணித்தல்

**4. கருவியின் தன்மை :** வெவ்வேறு வடிவங்களை ஒருங்கி ணைத்து பூங்காவிற்கான அலங்காரச் சிலை (மாதிரி) நிர்மாணித்தல்

**5. கருவியின் நோக்கம் :**

- சிலையொன்றை நிர்மாணிப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய வடிவங்களை பெயரிடுவர்.
- வெவவேறு வடிவங்களை ஒருங்கி ணைத்து சிலை ஆக்க முடியும் எனக் குறிப்பிடுவர்.
- சிலை ஆக்கத்திற்கான பரும்படிப்படம் ஒன்றை வரைவர்.
- தெரிவுசெய்யப்பட்ட பரும்படிப்படத் தின் உதவியுடன் சிலையொன்றை நிர்மாணிப்பர்.

**6. கருவியை நிர்மாணிக்கத் தேவையான அறிவுறுத்தல்கள்: ஆசிரியருக்கு :**

- செயற்பாடு 2.1.5, 2.1.6, 5.1.1, 5.2.1, 5.3.1 ஆகியவற்றை ஆரம்பிக்க முன் இக்கருவியை மாணவர்களுக்கு அறி முகப்படுத்துக.
- வகுப்பை ஏற்றவாறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- சிலை நிர்மாணத்துக்கு ஏற்ற வழி காட்டல்களை வழங்கவும்.
- முழுமைபெற்ற சிலை ஆக்கத்தை ஒப்படைக்க வேண்டிய கால வரைய றையை மாணவர்களுக்கு முன்கூட் டியே தெரியப்படுத்துக.
- ஏற்றவாறான கணிப்பீட்டு நடவடிக் கைகளில் ஈடுபடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாணவர்களுக்கு:**

- இப்பாடம் செயன்முறைப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் முக்கியமான பாடக் குறிப்புகள் தொடர்பாக நன்கு உங்கள் அவதானத்தை செலுத் துங்கள்.
- வெவ்வேறு வடிவங்களை ஒருங்கி ணைத்து பூங்காவில் இருக்கத்தக்க சிலையொன்றுக்கு ஏற்ற மாதிரி சித்திரமொன்றை வரையுங்கள்.
- வரையப்பட்ட சித்திரங்களின் உதவி யுடன் சிலை நிர்மாணத்திற்கு பொருத் தமான சித்திரக்குறிப்பொன்றை தெரிவு செய்க.
- பயன்படுத்தப்போகும் மூலப்பொருட் கள், அவற்றின் அளவுகள் தொடர்பாக ஆசிரியர்களின் அறிவுரைகளை பின் பற்றுக.
- வகுப்பு செயற்பாடுகளின்போது பெற் றுக்கொண்ட அறிவினை பயன்படுத்தி பூங்காவில் வைக்கத்தக்க சிலை யொன்றுக்கு ஏற்ற சிலையொன்றை/ சிலை மாதிரியொன்றை நிர்மாணிக் குக.

## 7. கணிப்பீட்டு முறை

| மாணவர்களின் பெயர் / நிர்மாணம் | 1 | 2 | 3 | 4 | 5 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |
| 4. | | | | | | |
| 5. | | | | | | |
| 6. | | | | | | |
| 7. | | | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியதிகளும் புள்ளிகளும்

| | | |
|---|---|---|
| 1. | சிலை நிர்மாணித்தலுக்கான பரும்படிப்படங்களை வரைதல்/ பொருத்தமான படமொன்றை தெரிவுசெய்தல் | - 04 |
| 2. | சரியான முறையில் பொருட்களை, உபகரணங்களை பயன்படுத்துதல் | - 04 |
| 3. | சமூகமாகச் செயற்படல் | - 04 |
| 4. | தொடர்ந்து செயற்பாட்டில் ஈடுபடல் | - 04 |
| 5. | வெற்றிகரமாக ஆக்கத்தினை செய்து முடித்தல் | - 04 |

## புள்ளித்திட்டம்

| | | |
|---|---|---|
| 1. | மிக நன்று | 04 |
| 2. | நன்று | 03 |
| 3. | மத்திமம் | 02 |
| | விருத்தியடைய வேண்டும் | 01 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## தவணைப் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்


### பகுதி I (அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்குக.)

- **கீழே தரப்பட்டுள்ள படங்ளின் உதவியுடன் 1 - 5 வரையிலான வினாக்களுக்கு ஏற்ற விடைகளை இடைவெளிகளில் எழுதுக.**

A 


B


C


D


E

1. ........................... எழுத்தால் காட்டப்படுவது தாவரத்தொகுதிக்குள் அடங்கும் அலங்கார அலகொன்றாகும்.

2. "C" எழுத்தினால் காட்டப்படும் அலங்கார அலகு ........................................ தொகுதிக்குச் சொந்தமானதாகும்.

3. விலங்குத் தொகுதிக்கு உரித்தான "E" எழுத்தினால் காட்டப்படும் அலங்கார உருவம் .................................... எனும் பெயரினால் அழைக்கப்படும்.

4. "பத்துரு" என்றழைக்கப்படும் "A" எழுத்தினால் குறிக்கப்பட்டுள்ள எளிய அலங்காரம் .................................. தொகுதிக்கு உரித்தானதாகும்.

5. பெண்களின் உருவங்கள் பலவற்றைச் சேர்த்து உருவாக்கப்பட்டுள்ள அலங்காரம் ................. எழுத்தினால் காட்டப்படுவதுடன், அது ........................... எனும் பெயரினால் அழைக்கப்படும்.

- **வினா எண் 6 - 10 வரை தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இடைவெளிக்குப் பொருத்தமான விடையினைத் தேடி எழுதுக.**

6. சித்திரமொன்றை வரையும்போது அருகிலுள்ள பொருட்கள் பெரிதாகவும், தொலைவிலுள்ள பொருட்கள் சிறிதாகவும் வரைய நாம் கற்றுள்ளோம். இத்தோற்றப்பாடு அழைக்கப்படுவது ................................. என்றாகும்.

   (1) முப்பரிமாணம் (2) தூரதரிசனம் (3) தடிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


7. கண்டி யுக சித்திரங்கள் .................................. முறைக்கு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
(1) அலங்கார (2) தட்டையான வர்ண (3) நுட்பமான

8. யாதுமொரு பொருளொன்று முப்பரிமாணத்தன்மையை காட்டுவதற்காக அதில்...................., .................., ......................... ஆகிய மூன்று அம்சங்கள் வெளிக்காட்டப்பட வேண்டும்.
(1) வர்ணம், இரேகை, வடிவங்கள்
(2) நீளம், அகலம், உயரம்
(3) தடிப்பு, வர்ணம், உயரம்

9. பாண்டமொன்றின் அல்லது பொருளொன்றின் தடிப்பினை வெளிக்காட்டும்போது ............................ காட்டல் முக்கிய இடத்தை வகிக்கின்றது.
(1) நீள அகலம் (2) இருள், வெளிச்சம் (3) இரேகை, வர்ணம்

10. பொருளொன்றின் முப்பரிமாணத்தன்மை நன்றாக வெளிக்காட்டப்படுவது அதன் மீது ............................. விழுவதால் ஆகும்.
(1) நீர் (2) வர்ணம் (3) ஒளி

- **கீழே காட்டப்பட்டுள்ள வரிப்படங்களின் உதவியுடன் 11 - 15 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து எழுதுக.**




11. மூல வர்ணங்கள் என்று குறிப்பிடப்படும் ஆரம்ப வர்ணங்கள் காட்டப்படுவது;
(1) A எழுத்தினால் (2) C எழுத்தினால் (3) D எழுத்தினால்

12. B, E எழுத்துகளால்
(1) ஒருமைப்பாடு உள்ள நிறங்கள் காட்டப்படுகின்றது.
(2) வேற்றுமை உள்ள நிறங்கள் காட்டப்படுகின்றது.
(3) கலப்பு வர்ணங்கள் காட்டப்படுகின்றது.

13. குளிர் வர்ணங்கள் காட்டப்படுவது.
(1) C எழுத்தினால் (2) D எழுத்தினால் (3) B எழுத்தினால்

14. A எழுத்தினால் காட்டப்படுவது;
(1) மூல வர்ணங்களாகும்.
(2) கலப்பு வர்ணங்களாகும்.
(3) எதிர் வர்ணங்களாகும்.

15. ஒருமைப்பாட்டு வர்ணங்கள் காட்டப்படுவது .................... எனும் வட்டங்களினாலாகும்.
(1) E, B (2) D, E (3) C, F



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **கீழுள்ள வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

16. தாதுகோபத்துடன் இணைந்த இரண்டு விசேட கலையம்சங்களைக் குறிப்பிடுக.

17. சில சந்தர்ப்பங்களில் காலத்துக்குக்காலம் மாற்றமடைந்த காவற்கல் இறுதியாக அலங்காரம் மிக்க கலையாக்கமாக இடம்பெற்றது. காவற்கல் இவ்வாறு மாற்றமடைந்த சந்தர்ப்பங்கள் இரண்டு குறிப்பிடுக.

18. சந்திரவட்டக்கல், சந்திர கண்ட கல் ஆகிய பெயர்களால் அழைக்கப்படும் கலையம்சம் சிங்கள கலைஞர்களின் சிறந்த நிர்மாணமாகும். அநுராதபுர காலத்திற்குரிய சிறந்த சந்திரவட்டக்கல்லென கருதப்படும் சந்திரவட்டக்கல் எது?

19. தாதுகோபத்துடன் இணைந்த சிறந்த கலையம்சங்களுள் வாகல்கடத்திற்கு சிறந்ததொரு இடம் வழங்கப்பட்டுள்ளது. அனுராதபுர காலத்திற்குரிய உயர் கலையம்சங்கள் பொருந்திய வாகல்கடம் எது.

20. பித்தளை கைத்தொழிலின்போது பிரதானமான இரு சிற்பமுறைகள் பாவிக்கப்படுகின்றது. அந்த இரு சிற்ப முறைகளும் என்ன?

**(புள்ளிகள் 2 x 20 = 40)**

## பகுதி II

- **கீழே குறிப்பிடப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றினைத் தெரிவுசெய்து வர்ணம் தீட்டப்பட்ட சித்திரமொன்றை நிர்மாணிக்க.**
  **(எந்தவொரு ஊடகத்தையும் பயன்படுத்த முடியும்.)**

(1) நீராடும் சிறுவர்கள் கூட்டமொன்று

(2) நாங்கள் வழிபாட்டு ஸ்தானத்திற்கு சென்றோம்.

(3) கி.பி. 3000 இல் இலங்கை

(4) "வாசனை வீசும் மலர்கள்" எனும் புத்தகமொன்றின் வெளி அட்டைக்கான நிர்மாணமொன்று

(5) பாரம்பரிய அலங்காரங்களைக்கொண்டு சட்டையொன்றின் கரைக்குப் பொருத்தமான அலங்காரமொன்று நிர்மாணிக்குக.

(6) வீட்டினுள் அழகுக்காக வைக்கப்படும் உயரமான களிமண் பாத்திரமொன்றினை வரைந்து அலங்காரப்படுத்துக.

**(புள்ளிகள் 60)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
ISBN - 978 - 955 - 654 - 253 - 0